


கல்கி
KALKI 4.2.96 ரூ. 3.00
தறிகெட்டு ஏறுதே
தங்கத்தின் விலை!

நம்பிக்கை மட்டுமின்றி நற்பயன்களையும் உங்களுக்கு வழங்குகிறது ஐடிபிஐ!



ஒவ்வொரு மாதமும்.
காலாண்டிற்கு ஒரு முறை.
அனைத்தும் ஆரம்பத்தில்.
அல்லது அனைத்தும் இறுதியில்.

நான்கு-வழி வாய்ப்பு கொண்ட உங்கள் ஐ டி பி ஐ ஃபிக்ஸட் டெபாசிட் திட்டம்*

வகை	குறைந்தபட்ச டெபாசிட்	ஆதாய அம்சம்
மாதாந்திர வருமானத் திட்டம்	ரூ. 18,000	5 வருடத்திற்கான ரூ. 18,000 டெபாசிட்டிற்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 210
காலாண்டு வருமானத் திட்டம்	ரூ. 10,000	5 வருடத்திற்கான ரூ. 10,000 டெபாசிட்டிற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ. 350.
லம்ப்ஸம் டிஸ்கௌண்ட் திட்டம்	ரூ. 10,000	5 வருட காலவரையுள்ள ரூ. 10,000 டெபாசிட் தொகையின்மேல் உங்களுக்கு ரூ. 4,806 உடனடியாகக் கிடைக்கும்.
க்யுமுலேடிவ் திட்டம்	ரூ. 10,000	டெபாசிட் தொகைக்கான ரூ. 10,000 5 வருடங்களில் ரூ. 19,898 ஆக வளருகிறது.

* மேற்குறிப்பிட்ட டெபாசிட்களிலிருந்து பெறப்படும் ரூ. 13,000 வரையிலான வட்டிக்கு வருமான வரிச்சட்டம் 80L ன் கீழ் வரிவிலக்கு உண்டு.

குறைந்தபட்ச டெபாசிட்: ரூ. 10,000

குறைந்தபட்ச தொகைக்கு மேல் நீங்கள் ரூ. 1000 த்தின் மடங்குகளில் டெபாசிட் செய்யலாம். 3 வருட டெபாசிட்டிற்கான அடிப்படை வட்டி விகிதம் 13.5% ஆகும். 5 வருட காலவரை மற்றும் அதற்கு மேலுள்ள டெபாசிட் 14% அடிப்படை விகிதத்தை எட்டுகிறது. மேலும் என்ன, இந்தியாவின் பிரதான வளர்ச்சி வங்கியான ஐ டி பி ஐ-ன் உத்தரவாதத்தை இந்த டெபாசிட் திட்டங்கள் பெற்றுள்ளன. இத்தகைய டெபாசிட்கள் கேர் நிறுவனத்தின் கேர் ஏஏஏ (எஃப் டி) மற்றும் க்ரைஸில் நிறுவனத்தின் எஃப் ஏஏஏ மதிப்பீடுகளையும் பெற்றுள்ளதால் மிக அதிக பாதுகாப்பு உள்ளதை இது பிரதிபலிக்கிறது. ரூ. 40,000 கோடிகளுக்கு மேலான மொத்த சொத்து மதிப்பைக் கொண்ட ஒரு நிறுவனம் உங்கள் முதலீட்டைச் சிறந்த முறையில் கவனிப்பது இயல்பானதே. மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள ஐ டி பி ஐ அலுவலகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஐ டி பி ஐ முகவரை அணுகவும்.

CARE RATING
CARE AAA (FD)
Pronounced CARE Triple A(FD)

CRISIL RATING
F AAA
Pronounced F Triple A

இந்நல்வாய்ப்பிற்கு உரித்தானவர்கள்: * தனிநபர் * இந்து கூட்டுக் குடும்பங்கள் * கூட்டமைப்பு நிறுவனங்கள் * கம்பெனிகள் / கார்பொரேட் நிறுவனங்கள் / சங்கங்கள் / ட்ரஸ்டுகள் / அஸோஸியேஷன் ஆஃப் பர்ஸன்ஸ்.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மண்ட் பாங்க் ஆஃப் இந்தியா

தொழில் துறைக்கான வங்கி

ULKA-FUTURES-11073-TAM

தலைமை அலுவலகம்: ஐ டி பி ஐ டவர், கஃப் பரேட், பம்பாய்-400 005. **மண்டல அலுவலகங்கள்:** பம்பாய்: நரிமன் பவன், 227, வினய் கே. ஷா மார்க், நரிமன் பாயின்ட், த.பெ. எண் 19970, பம்பாய்-400 021. **கல்கத்தா:** 44, ஷேக்ஸ்பியர் சரணி, த.பெ. எண் 16102, கல்கத்தா-700 017. **குவஹாத்தி:** ஜி. எஸ். ரோடு, குவஹாத்தி-781 005. **சென்னை:** 480, அண்ணா சாலை, நந்தனம், த.பெ. எண் 1306, சென்னை-600 035. **புது தில்லி:** இந்தியன் ரெட்கிராஸ் சங்க பில்டிங், 1, ரெட் கிராஸ் ரோடு, எண் 231, புது தில்லி-110 001 மற்றும் மாநிலத் தலை நகரங்கள்/முக்கிய நகரங்களிலுள்ள 26 கிளைகள்.

"பெப்ஸி புரோகிராமை நான் பார்த்ததேயில்லை!"

"நான் இன்னும் கல்லூரியில் காலெடுத்து வைக்கலை. பிளஸ் ஒன் படிக்கும் பள்ளிக்கூட மாணவி" என்று டெலிபோன் தலையிலேயே அடித்து சத்தியம் செய்தால் கூட, நேயர்கள் நம்பவில்லை" என்று சொல்லிச் சிரிக்கிறார் லட்சுமி. ராஜ் டீ.வி.யில் 'டயல் யுவர் சாங்க்' நிகழ்ச்சியின் தொகுப்பாளர்.

கே. கே. நகர் பத்மா சேஷாத்ரி பள்ளி மாணவியான லட்சுமி சன் டீ.வி., விஜய் டீ.வி. என்று நேயர்கள் பங்கேற்கும் குவிஸ் நிகழ்ச்சிகளில் பங்கேற்கப் போக, அவரைப் பார்த்து 'இம்ப்ரஸ்' ஆகி, நிகழ்ச்சி வழங்கக் கூப்பிட்டார்களாம்.

சன் டீ.வியில் 'விலை என்ன' என்ற நிகழ்ச்சியினை ஆறு வாரங்களுக்கு வழங்கியிருக்கிறார் லட்சுமி. ஜீ டீ.வி.யில் ஒளிபரப்பாகும் தமிழ் நிகழ்ச்சி வழங்கிய அனுபவமும் உண்டு. அதனைத் தொடர்ந்து ராஜ் டீ.வி.யில் இப்போது டெலிபோன் உரையாடல் புரோகிராம்.

"டெலிபோன் மூலம் உலகின் பல பாகங்களிலுமிருக்கும், முகம் தெரியாத நேயர்களுடன் உரையாடுவதில் ஒரு த்ரில் இருக்கிறது. முதல் முறை ரெக்கார்டிங்கிற்குப் போன போது மதுரையிலிருந்து டெலிபோன் வந்தால் மல்லிகைப்பூ பற்றி, திருநெல்வேலியிலிருந்து என்றால் அல்வா பற்றியெல்லாம் பேச வேண்டும் என்று மனத்தில் பெரிய லிஸ்ட்டே போட்டு வைத்திருந்தேன்" என்றவரிடம் சீண்டலாய்க் கேட்டோம் :

"மறுமுனையில் இருப்பவர் உங்களை வெறுப்பேற்ற வேண்டும் என்பதற்காக, 'உங்கள் முகம் குரங்கு போலிருக்கு' என்றால் எப்படி ரியாக்ட் செய்வீர்கள்?"

" 'குரங்கு மூஞ்சியுடன் டெலிபோனில் பேச இவ்வளவு ஆர்வம் காட்டும் நீங்களும் வானர இனமோ?' என்று பதில் கிண்டலடிப்பேன்" என்கிறார் சளைக்காமல்.

"நான் முறைப்படி கர்நாடக இசை பயின்றிருக்கிறேன். மேடையிலும் பாடி வருகிறேன். சிறந்த கர்நாடக இசைப் பாடகியாக வேண்டும் என்பதே என் ஆசை. சினிமாவிலும் பாட விருப்பம். நடிப்பில் ஆர்வமில்லை. அதனால்தான், டீ.வி. சீரியல்களிலும், ஏன் சினிமாவிலும் கூட நடிக்கக் கூப்பிட்ட போது மறுத்துவிட்டேன்" என்று கூறிய லட்சுமியிடம், "பெப்ஸி உமாவைக் காப்பியடிப்பது போல இருக்கிறதே உங்கள் ஸ்டைல்?" என்றதும், படபடவென்று பேசினார் :

"இரண்டு பேருடையதும் டெலிபோன் உரையாடல் நிகழ்ச்சி என்பதால் நீங்கள் கேட்பது போல வேறு சிலர் கூட என்னைக் கேட்டிருக்கிறார்கள். நான் யாரையும் காப்பியடிக்கவில்லை. சொல்லப் போனால், உமாவின் நிகழ்ச்சிகளை நான் பார்த்ததேயில்லை. காரணம், பேட்டி கொடுக்கிற இந்த நிமிடம் வரை எங்கள் வீட்டில் கேபிள் கனெக்ஷன் கிடையாது. உண்மையிலேயே என் ஸ்டைல் அவருடையதை நினைவூட்டினால், என் பாணியை நிச்சயம் மாற்றிக் கொண்டு விடுவேன்."

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

வண்ணப்படம் : **யோகா**



எம்.பி.ஏ.வின் வேர்கள் வேதத்தில்!



'டை' அணிந்து கொண்டு தியானமா...?

படத்தைப் பார்த்ததும் கேள்வி எழுகிறது.

'ஏன் கூடாது?' என்பது 'மஹரிஷி இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மெண்ட்'டைச் சேர்ந்த ஆசிரியர்களின் பதில்.

டாக்டர், இஞ்சினியருக்கு நிகரான மதிப்பும் கிராக்கியும் அடைந்துள்ள எம்.பி.ஏ பட்ட மேற்படிப்புக்கு மாணவர்களைத் தயார் செய்கிறது மஹரிஷி இன்ஸ்டிடியூட். பிற எம்.பி.ஏ. வகுப்புகளைப் போல் Business Administration தான் கற்றுத் தருகிறார்கள். ஆனால் அணுகுமுறையில் முக்கியமான சில வேறுபாடுகள்.

ஒரே சமயத்தில் பாடத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளையும் திணிப்பதில்லை; ஒவ்வொரு பிரிவாகச் சொல்லித் தரப்படுகிறது.

பிற மானேஜ்மெண்ட் கல்லூரிகளில் செய்வது போல், இலக்கை அடைவதற்கான லட்சிய 'வெறி' ஊக்குவிக்கப்படுவதில்லை. வெறி ஏற்படும்போது சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை விடைபெறுகிறது. எனவே எப்போதும் தெளிவான மனநிலையில் இருக்க வேண்டும் என்பது முக்கியமாகக் கற்பிக்கப்படுகிறது.

இயற்கையினை அடியொற்றிச் செயல்பட்டால் குறைந்த முயற்சியில் நிறைய சாதிக்க முடியும் என்பது கோட்பாடாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் முழுமூச்சுடன் பின்பற்ற உதவியாக ஆழ்நிலை தியான வகுப்புகள் தினமும் காலை - மாலை இரு வேளைகளிலும் உண்டு.

"இந்த அரிய பாடத் திட்டத்தின் அஸ்திவாரமே வேதங்கள்தான்" என்கிறார் மகரிஷிக்கு விஸிட்டிங் புரஃபசராக வந்துள்ள அமெரிக்கர் ஜெஃப் இர்வின்.

ரிக் வேதத்தில் 'ரிசோ அட்சரே பரமேத்யோமன்' என்ற சுலோகம் வருகிறதாம். எல்லா துறைகளிலும் ஒருவன் பிரகாசிக்க, தேர்ந்த ஞானமுடையவனாக இருக்க வேண்டும்; அந்த ஞானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நம் ஆழ்மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டும் என்பது அதன் பொருள்.

'பிரம்ம பவதி சாரதி' எனத் தொடங்கும் ரிக் வேத சுலோகம், 'அதிகமான வேலைகளை எவன் ஒருவன் மிகக் குறைவான முயற்சியின் மூலம் சமச்சீராகச் செய்கிறானோ, அவனே சிறந்த நிர்வாகியாக உருவாகிறான்' என்று வலியுறுத்துகிறது.

இங்கு பயின்று பயன் பெற்றுவரும் மாணவர்கள் ராம்மோகன் ராஜசேகர், சந்தீப் சௌடா (பல மாநிலங்களிலிருந்தும் வந்தவர்கள்) ஆகியோர், வகுப்புகள் தொடங்கிய பிறகு தங்கள் பேச்சிலும், நடவடிக்கைகளிலுமிருந்த ஓரளவு முரட்டுத்தனம் அறவே போய்விட்டதாகச் சொன்னார்கள்.

மஹரிஷி மகேஷ் யோகியின் பெயரைத் தாங்கும் இக் கல்வி நிறுவனம் இப்படி ஒரு வித்தியாசமான அணுகுமுறையைக் கையாள்வதில் ஆச்சரியமில்லை...

"சமீபத்தில்தான் இந்த வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் எங்கள் பட்டதாரிகளுக்கு சிறந்த வரவேற்பு இருக்கும்" என்கிறார் ஜெஃப் இர்வின். கட்டணம் சற்று அதிகம்தான்; இரண்டரை லட்சம் ரூபாய்! ஆனால் இந்தப் பட்டத்துக்கு அமெரிக்காவிலும் அங்கீகாரம் இருக்கிறது.

— அருண் சரண்யா

சுஜாதா பக்கம்



புத்தாண்டின் முதல் தினத்தில் சென்னை புத்தகக் கண்காட்சியில் திருக்குறளுக்கு நான் எழுதியிருந்த புதிய உரையின் வெளியீட்டு விழா நடந்தது. பேராசிரியர்கள் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களும் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் சிறப்பாகப் பேசினார்கள். இருவரும் திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர்கள். என்னுடைய விரிவான முன்னுரையைப் படிக்க மட்டும் அவகாசமிருந்து 'முன்னுரை சரியாக உள்ளது உள்ளுரையைப் பற்றிய தீர்ப்பை ஒத்திப் போடுகிறோம்' என்றார்கள்.

அடுத்த நூற்றாண்டில் அடிவைக்கப் போகும் எம்டிவி-பிரபு தேவா இளைஞர்களுக்கு 'திருக்குறளில் இந்த மாதிரியெல்லாம் இருக்கிறதா!' என்கிற வியப்பை ஏற்படுத்தி, மேற்கொண்டு உரைகாரர்களை நாட வைப்பதே என் குறிக்கோள்.

குறளுக்கு உரை எழுதும் அசட்டு தைரியம் எப்படி வந்தது என்று சிலர் வியப்படையலாம். ஒரு குறுகிய கால உக்கிரமான வாசிப்பில் அத்தனை உரைகாரர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் படித்து விட்டுத்தான் அகர முதல எழுத்தில் துவங்கினேன். குறிக்கோள் பண்டிதத்தனத்தைக் காட்டிக் கொள்வதல்ல. பாசாங்கைத் தவிர்க்க. தேவைப்பட்ட எச்சரிக்கைகள் குறளிலேயே உள்ளன - "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்" (ஒருவன் எத்தனை புத்தகங்கள் படித்தாலும் அவனுடைய உண்மையான அறிவுதான் மேலோங்கும்) குறளில் எனக்கு ஏற்பட்ட வியப்பை அடுத்த நூற்றாண்டில் அடிவைக்கப் போகும் எம்டிவி-பிரபு தேவா இளைஞர்களுக்கு 'திருக்குறளில் இந்த மாதிரியெல்லாம் இருக்கிறதா!' என்கிற வியப்பை ஏற்படுத்தி, மேற்கொண்டு உரைகாரர்களை நாட வைப்பதே என் குறிக்கோள்.

முதல் பிரதிகள் விற்ற கையோடு ஓர் அன்பர், 'தாங்கள் எப்படி வள்ளுவரை ஜைனராக இருக்கலாம் என்று சொல்லப் போகும்? அவர் தீவிர வைணவராச்சே! திருமாலைத்தான் அவர் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடுகிறார் என்று எட்டுப் பக்கம் லெட்டர் அனுப்பியிருந்தார். வள்ளுவர் கிறித்தவர் என்று ஒரு ஆராய்ச்சியும் படித்திருக்கிறேன். 'பொறிவாயில் ஐந்தவித்தான்', 'எண் குணத்தான்' போன்றவையெல்லாம் நேரடியாக ஜைனக் கடவுளுக்கும் சொல்லப்படுகின்றன. ஆனால் வள்ளுவர் ஜைனராக இருக்கலாம் என்கிற என் அபிப்ராயம் கடவுள் வாழ்த்தை மட்டும் வைத்தல்ல. வள்ளுவர் வாழ்ந்த காலகட்டத்தில் மாமிச உணவு உண்பதையும் கள்ளுண்பதையும் அத்தனை தீவிரமாக எதிர்த்தவர்கள் ஜைனர்களே.

வள்ளுவரின் குணாதிசயங்களைத் திருக்குறளிலிருந்தே சித்திரிக்க முயன்றால் அவர் முன் வினையிலும் மறு பிறவியிலும் நம்பிக்கை உள்ளவர். அர்த்த சாஸ்திரம், மது, காம சூத்ரம் இவைகளையும் பல பழைய நூல்களையும் படித்தறிந்தவர். கேட்பதிலும் படிப்பதிலும் விருப்பம் உள்ளவர். சாதிப் பிரிவில் நம்பிக்கை இல்லாதவர். ஒழுக்கம்தான் முக்கியம் என்று நம்புபவர். அகிம்சையை விரும்புபவர். நல்ல நண்பர், பழைய நண்பர்களை விட்டுக்கொடுக்காதவர். ஏழை உறவினரைப் பேணுபவர். சூதாட்டத்தை வெறுப்பவர். என்ன சம்பாதித்தாலும் கொடுத்து விடுபவர். சாப்பாட்டில் அளவாக இருப்பவர். நல்ல இல்லற வாழ்க்கை நடத்தியவர். இருந்தாலும் பல விஷயங்களில் மனைவி பேச்சைக் கேட்காதவர். நிச்சயம் காதல் செய்தவர் (தன் மனைவியிடம்) ஊடலும் உண்டு. முக்கியமான அரசு அதிகாரியாக இருந்தவர். குழந்தைகளோடு கொஞ்சி அவர்கள் இரைத்த கூழை சுவைத்துப் பார்த்தவர். மழலையில் தன்னை மறந்தவர். சங்கீதத்தில் விருப்பமுள்ளவர். அந்தணரோ, வைதீகரோ அல்ல.

அனைத்தும் குறளிலிருந்தே அமைக்கப்பட்ட சித்திரம்.

(மீண்டும் அடுத்த வாரம்)

“பன்னெண்டு வயசுல, திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் பள்ளிக்கூடத்துல. பசங்க ரெண்டு பேர் ஒருத்தருக்கு ஒருத்தர் சண்டை போட்டுக்கிட்டாங்க. சண்டை முத்திப் போய், கல்லை விட்டு எறிஞ்சுக்கிட்டாங்க. பக்கத்துல நின்னுக்கிட்டிருந்த என்னோட வலது கண்ணுல ஒரு கல்லு பட்டுது. வலி தாங்க முடியாம கத்தினேன். டாக்டர் கிட்ட காட்டினாங்க. ரெட்டினா (விழித்திரை) போயிடிச்சுன்னுட்டார் டாக்டர். ஆபரேஷன் பண்ணியும் பிரயோசனம் இல்லைன்னார். கொஞ்சம் கொஞ்சமா இடது கண்ணுலயும் பார்வை மங்கிக்கிட்டே வந்துது. ஒரு வருஷத்துல இடது கண் பார்வையும் முழுசாப் போயிட்டுது.”

இளைஞர் கொஞ்சம் நிறுத்துகிறார்.

இடம் : சென்னை அடையாறு பார்க் ஷெராட்டன் ஓட்டலின் விஸ்தாரமான ‘தட்சிண்’ ரெஸ்ட்டாரன்ட். வெள்ளித் தட்டுக்களும், வெள்ளித் தம்ளர்களும் மின் ஒளியில் பளபளக்கின்றன. சீர் உடைப் பணியாளர்கள் வட்டமாய் நிற்க, அன்று இரவுக்கான பணித் திட்டத்தை விளக்குகிறார் ரெஸ்டாரண்டின் அதிகாரியான அமர்நாத் ராவ் :

“எனக்கு ஊர் திருக்குவளை பக்கத்துல தலைஞாயிறு கிராமம். கண் போனதுக்கப்புறம் படிப்பு பாதியிலே நின்னு போச்சு. வாழ்க்கையே பெரிய கேள்விக்குறியாயிடுத்து. காஞ்சிப் பெரியவர்ட்ட கூட்டிட்டுப் போனார் அப்பா. “கண் போனது போனது தான்; கர்ம வினையை அனுபவிச்சுத்தான் தீரணும். அவன் கவலைப்பட வேண்டாம். மூங்கில் அவனைக் காப்பாத்தும்''ணார் பரமாச்சாரியார்.

“அப்போ அவர் சொன்னது புரியலே. அப்புறமா ஃப்ளுட் மாலி சார்கிட்ட என்னைப் புல்லாங்குழல் கத்துக்க ஏற்பாடு பண்ணினாங்க. ஒன்ணரை வருஷம் அவர்கிட்ட கத்துக்கிட்டேன். எனக்கே கொஞ்சம் பிடிப்பு உண்டாச்சு. மெட்ராஸ் வந்து மியூசிக் காலேஜிலே சேர்ந்து வித்ய சாரதா பட்டம் வாங்கினேன்.

அதுக்கப்புறம் பிரபஞ்சம் சீதாராம் சார்ட்ட பத்து வருஷம் படிச்சேன். டெல்லி யூனிவர்சிடியிலே மியூசிக்ல எம்.ஏ.யும் பண்ணினேன்.

''89லே பரமாசாரியாரைப் பார்க்கப் போனப்ப யார்ட்ட இருந்தோ புல்லாங்குழல் வாங்கிக் கொடுத்து வாசிக்கச் சொன்னார். ‘நல்ல வேலை தானா உன்னைத் தேடிவரும். நீ தேட வேண்டாம்’ணார். சரியா பதினஞ்சே நாள்ல இந்த ஹோட்டல்ல எனக்கு வேலை கிடைச்சுது! அடுத்த வருஷமும் அவரைப் பார்க்கப் போனேன். ‘அம்ப காமாட்சி’ வாசிக்கச் சொல்லிக் கேட்டார். வாசிச்சேன். ‘எந்தரோ மகானுபாவுலு’ வாசிக்கச் சொன்னார். பைரவில ‘உபசாரமுலனு’ வாசின்னார். எல்லாம் வாசிச்சு முடிச்சதும், ‘இதுலயே கன்டின்யூ பண்ணு. நல்லதே நடக்கும்’ணார்.

''சிலோன், ஆஸ்திரேலியா, யூரப், பிரான்ஸ், சவுத் ஆஃப்ரிக்கான்னு நிறைய இடங்கள்ல புல்லாங்குழல் வாசிச்சேன். ஹிஸ் ஹைனஸ் அப்துல்லா, நிழல்கள்





ஸ்டார் இசை!

மாதிரி சினிமாவுக்கும் இளையராஜா சார்ட்ட வாசிச்சிருக்கேன்..."

இரவு மணி எட்டு.

'தட்சிண்' சுறு சுறுப்பு அடைகிறது.

வி.ஐ.பி.க்களும், குஜராத்திகளும் - மார்வாரி குடும்பங்களும் - இத்தாலிய - அமெரிக்க - ஜப்பானிய முகங்களும் மேசைகளில் தெரிகின்றன.

ருசியான உணவுகளைப் பரிமாறும் ஊழியர்கள் சரசரக்க, பரபரக்க....

பிரும்மாண்டமான நடராஜர் சிலைக்கு முன் இளைஞர் டி. என். சிவகுமார் புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். 'ப்ரோசேவா ரெவருரா' மெல்ல இதமாய் மனசை வருடுகிறது.

பாட்டு முடிந்ததும், ஒரு விருந்தாளி விருப்பத்தைத் தெரிவிக்கிறார் - சிம்மேந்திர மத்யமத்தில் 'நீது சரணமுலே' வாசிக்கச் சொல்லி.

அந்த ராகத்துக்கே உரிய கம்பீரமும், குழைவும் 'தட்சிண்' முழுக்க வியாபிக்கிறது. பக்க வாத்தியமாய் சுரேஷின் வயலினும், குமாரின் கடமும், கணேசனின் மோர்சிங்கும் தானம் போட வைக்கின்றன.

பாட்டு முடிந்ததும், விரும்பிக் கேட்ட விருந்தினர் ஒரு நூறு ரூபாய் நோட்டை சிவகுமாரின் கையில் அன்புடன் கொடுத்து மகிழ்கிறார்.

"சம்பளம் தவிர, இதுபோல சில நாளைக்கு 50, 100 அன்பளிப்பு கிடைக்கும். அதான் ராத்திரி 12 மணிக்கு வாசிச்சு முடிச்சதும் ஆட்டோவுல பெசன்ட் நகர்ல இருக்கிற என்னோட வீட்டுக்குப் போறதுக்கு உதவறது." என்கிறார் சிவகுமார்.

"கர்னாடக இசையோட, நல்ல ராகத்துல அமைஞ்ச சினிமா பாட்டுகள், லேட்டஸ்ட் ஹிந்தி சாங்ஸ் எல்லாம் சுத்தமாய் வாசிப்பார் சிவகுமார்" என்று பாராட்டுகிறார் அமர்நாத்ராவ்.


ஹிந்தோளத்தில் சாமஜ வர கமனா மெல்லக் குழைந்து குழைந்து இளைஞரின் புல்லாங்குழலிலிருந்து வெளிப்பட்டு 'தட்சிண்' உள்ளே இழைகிறது.

'இவ்வளவு திறமை இருந்தும்... மேடைக் கச்சேரி வாய்ப்புக் கிடைக்கலையே, ஹோட்டலுக்கு வருவோருக்கு இசையை விட உணவும் அரட்டையும் தானே முக்கியம்? - இப்படிப்பட்ட கூட்டத்தில் வாசிப்பதில் மட்டுமே திருப்தி கொள்ள முடிகிறதா...?'

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில்தான் சிவகுமாரிடம்: "இது பழகிப் போச்சு - பிழைப்பு நடத்தணும் இல்லையா...?" - குரலில் ஏக்கம் எட்டிப் பார்க்கவே செய்கிறது!

— சாருகேசி

வண்ணப்படங்கள் : யோகா



மெய்சிலிர்த்த அனுபவங்கள் :

நான் நானாக இல்லை!

காலை நாலரை மணிக்கே எழுந்து நான் யோகப் பயிற்சியும் தியானமும் செய்வது வழக்கம். குண்டலினி யோக முறைப்படி உடலின் ஆறு ஆதார நிலைகளிலும் முழு கவனத்தைச் செலுத்தி, அந்த நிலைக்குரிய பீஜ மந்திரத்தை ஜெபிப்பேன். இறுதி நிலையான ஆக்கினைக்குரிய (புருவ மத்தி) மந்திரத்தை ஜெபித்த பிறகு, 'ஓம்' என்ற மந்திரத்தைச் சொல்லித் தியானம் முடிப்பேன்.

கடந்த 1993 ஜனவரி ஐந்தாம் தேதி இப்படிச் செய்த போது மூலாதாரத்திலிருந்து (இதுவும் குண்டலினி முறைப்படி உடலின் ஒரு ஆதார நிலை) மிகவும் சக்தி வாய்ந்த மின்சாரம் என் உடலில் பரவுவதாக உணர்ந்தேன். ஒரு நிமிடத்திற்கு மேல் இந்த உணர்வு நிலைத்தது. சற்றே பயம் வந்து விட்டது; கண் திறந்து விட்டேன். இதயத் துடிப்பு அதிகமாகிவிட்டது. சில நிமிடங்கள் கழித்து இதயத் துடிப்புச் சீர்பட, பயமும் போனது.

ஆனால், அன்று முழுவதுமே– இரவு படுக்கப் போகும் வரை– நான் மிக வித்தியாசமாக உணர்ந்தேன். ஏதோ காற்றில் மிதப்பது போலவும், துக்கம் மகிழ்ச்சி யாவுமே ஒன்றுதான் என்பது போலவும் தோன்றியது. மற்றவர்களிடம் பேசும்போது நான் நானாக இல்லை. 'உலகமே நாடக மேடை, அதில் நாம் ஒரு நடிகன் மட்டுமே' என்ற வலுவான நம்பிக்கை வந்தது.

மீண்டும் அதே ஏகாந்த நிலையை அடைய வேண்டும் என்று பெரும் முயற்சி செய்தும் இதுநாள் வரை இயலவில்லை.

— எஸ். சிவகுமார்,
அண்ணாமலை நகர்.

எனக்கு மட்டும்....

பி.காம் படிப்பை முடித்து மூன்று வருடங்களாகியும் வேலையில்லாமல் அவதிப் பட்டேன். திடீரென்று ஒரு தனியார் நிறுவனத்தில் குமாஸ்தா வேலை கிடைத்தது. ஆனால் ஆறே மாதங்களில் அதற்கும் ஆபத்து வந்து விட்டது. எனக்குக் காது கேட்கவில்லை என்ற காரணத்திற்காகப் பணியை நிரந்தரம் செய்யாமல் என்னை நீக்கி விடுவதாக முடிவு செய்தார்கள்.

மிகவும் மனமுடைந்து போனேன். இந்தச் 'செய்தி' கிடைத்த தினத்தில் என் பாட்டி என்னை சிவா–விஷ்ணு ஆலயத்துக்கு (சென்னை தி. நகரில்) அழைத்துப் போனார். அர்ச்சனைக்குச் 'சங்கல்பம்' செய்து கொண்டபோது என்னையறியாமல் ஓர் எண்ணம் என் மனத்தில்: 'நானும் எல்லாரையும் போல் வேலையில் தொடர்ந்து நல்லபடியாக வாழ்வேன் எனில் அதை இந்த காமாட்சி அம்மன் எனக்கு உணர்த்தட்டும்' என்று நினைத்துக் கொண்டேன். அர்ச்சனை முடித்து பிரசாதம் கொடுக்க வந்த அர்ச்சகர் மற்றவர்களுக்கெல்லாம் மல்லிகைப் பூச்சரத்தைக் கொடுத்து விட்டு எனக்கு மட்டும் அம்மன் மீதிருந்த ரோஜா மாலையை எடுத்து வந்து கழுத்தில் போட்டார். அந்த நேரத்தில் எனக்கு உடல் சிலிர்த்து நா உலர்ந்து விட்டது.

வீடு திரும்புகையில் என் அனுபவத்தைப் பாட்டியிடம் சொன்னேன். 'இப்படியெல்லாம் தெய்வத்தை சோதிக்கக் கூடாது. நல்லதே நடக்கும் என்று நம்பு; அது போதும்' என்று என்னைக் கடிந்து கொண்டார் பாட்டி.

மறுநாள் என் கணக்குகளை முடித்துவர அலுவலகம் போனேன். என்ன ஆச்சரியம்! நிர்வாக மேலாளர் என்னை அழைத்து, பணியில் நிரந்தரப்படுத்திவிட்டதாகத் தெரிவித்தார். மேலும் எனது காதுகேளா குறையைச் சரி செய்து கொள்ள அலுவலகம் உதவப் போவதாகவும் சொன்னார்.

இன்று நான் வேறொரு நிறுவனத்தின் பொது மேலாளராக இருக்கிறேன். பல வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தால் இன்றைக்கும் எனக்கு சிலிர்ப்பு ஏற்படும்.

— கே. வெங்கடேசுவரன்,
கோபிசெட்டிபாளையம்.

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995, இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- கிடைக்கும். 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர் 10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர் அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வியாபாரிகள், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயக்குனர் :
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

❑ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❑ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❑ வெள்ளி விடுமுறை

பிறந்த நாள் பரிசு

“எங்கே வலிக்குது? இடது கையின் மேல் பகுதியிலா? வலி எப்படி இருக்குது. சுரீர் சுரீர்னா அல்லது தொடர்ந்து ஒரே மாதிரியா? நடக்கும் போது அதிகம் வலிக்குதா?” என்றெல்லாம் விக்டரை வரிசையாகக் கேள்விகள் கேட்ட டாக்டர், “ஈ.ஸி.ஜி. எடுத்துப் பார்க்கணும்” என்று சொன்ன போதுதான் திவ்யாவின் மனத்தில் நிலைமையின் தீவிரம் உறைத்தது.

விக்டருக்கு ஏற்பட்டிருப்பது மாரடைப்பு என்று சந்தேகப்படுகிறாரா?

“என்ன விக்டர் இது?” மேலே பேச வார்த்தைகள் வராமல் பதைபதைத்த திவ்யாவை வருத்தத்தோடு பார்த்தான் விக்டர்.

“எனக்கு அப்பவே இந்த சந்தேகம் வந்தது திவ்யா. அதனாலேதான் டாக்டர்கிட்டே அழைச்சிக்கிட்டு வரச் சொன்னேன்.”

இருபத்தி எட்டு வயதில் மாரடைப்பு ஒருவருக்கு ஏற்படக்கூடும் என்று திவ்யா இதுவரை எண்ணிப் பார்த்ததில்லை. அதுவும் விக்டருக்கு! கடவுளே, அப்படி இருக்காது, இருக்கக் கூடாது. அவனுக்கு உடல்நலம் சரியானவுடன் தான் திருப்பதி மலையை நடந்தே ஏறி வருவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டாள். கூடவே இணைப்பாக இன்னொரு யோசனை தோன்ற, ‘குழந்தை ஏசு’வுக்குக் காணிக்கை செலுத்துவதாகவும் வேண்டிக் கொண்டாள்.

“அண்ணி மனதைத் தளர விடாதீங்க. அண்ணனுக்கு வெறும் காஸ் ட்ரபிளாக இருக்கவும் சான்ஸ் இருக்குது” என்று ஆறுதல் சொன்னாள் ஜாக்விலின். விக்டரின் தங்கை. திவ்யாவை விட இரண்டு வயது சின்னவள்.

“ஆமாம் அண்ணி” என்று கூட ஒத்துப் பாடினான் விக்டரின் எட்டு வயதுத் தம்பி ஜேம்ஸ். பிறகு திடீரென்று ஜாக்விலினைப் பார்த்து “அக்கா, அந்த சாக்லெட் பாக்ஸை அண்ணியிடம் கொடுத்திட்டீங்களா?” என்றான்.

ஜாக்விலின் கொஞ்சம் சங்கடப்பட்டாள். “இன்னைக்கி உங்க பிறந்த நாளாச்சே, அதுதான் வாங்கி வச்சிருந்தேன். ஆனா காலையிலேயே அண்ணனுக்கு இப்படி ஆகிப் போய்... கவலைப்படாதீங்க அண்ணி. டாக்டர் இப்போ வந்து அண்ணனுக்கு எதுவுமில்லே. நார்மல்னு டிஸ்சார்ஜ் செய்யத்தான் போறார். அப்போ இந்த சாக்லெட்டுகளை ஹாஸ்பிடல் ஸ்டாஃபுக்கெல்லாம் விநியோகம் செய்துடலாம்.”

தனக்கு இன்று பிறந்த நாள் என்பதே திவ்யாவுக்கு மறந்து விட்டிருந்தது! அம்மா நினைவுக்கு வந்தாள். தன் ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் ஏதாவது பரிசு கொடுக்காமல் இருக்க மாட்டாள். அதுவும் அவள் எதிர்பாராத ஆனால் ஆனந்தப்படும்படியான பரிசாக இருக்கும்.

அம்மாவை எண்ணியதும் குபுக்கென்று திவ்யாவின் கண்கள் நிறைந்தன.

இரண்டே தெருக்கள் தள்ளியிருந்தும் வைராக்கியமாகத் தன் வீட்டுக்கு வராத அம்மா. தன் சொல்லை மீறி வேற்று மதத்தவனைக் கல்யாணம் செய்து கொண்ட திவ்யாவை இன்னமும் சிறிதளவு கூட மன்னிக்காத அம்மா. வழியில் பார்த்தால் கூட அலட்சியமாக தலையைத் திருப்பிக் கொண்டு போகும் அம்மா.

ஒருவேளை அம்மாவின் வயிற்றெரிச்சல் தான் விக்டருக்கு இந்தவித உடல் கோளாறைக் கொடுத்திருக்கிறதோ? யோசிக்க யோசிக்க ஏனோ அதுதான் காரணமாக இருக்குமென்று பட்டது திவ்யாவுக்கு.

அம்மாவிடம் போய் தனது இந்த நிலையைப் பற்றிக் கூறினால் நிச்சயம் தனக்கு ஆறுதல் கூறுவாள். பிறந்த நாளன்று தன் காலில் விழும் மகளுக்கு ஆசி வழங்காமலா போய் விடுவாள்? அந்த ஆசியே கணவனை குணப்படுத்தி விடும் என்று நம்பினாள்.

உள்ளே டாக்டர்கள் விக்டருக்கு ஈ.ஸி.ஜி. எடுப்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்க, திவ்யா எழுந்து கொண்டாள்.

“ஜாக்விலின், தெருமுனையிலே இருக்கிற கோவிலுக்குப் போயிட்டு வரேன். பத்து நிமிஷங்களிலே

அருண் சரண்யா



வந்துடுவேன்" என்றாள்.

"இன்னும் முழுக்கக் கூட விடியல்லியே. துணைக்கு ஜேம்ஸையும் அழைச்சிக்கிட்டுப் போங்க அண்ணி."

வேறு வழியில்லாமல் ஜேம்ஸையும் அழைத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

"என்ன அண்ணி யோசிக்கறீங்க? கவலைப்படாதீங்க. நான் கோயிலுக்கு வெளியே நின்னுக்குவேன்" என்றான் ஜேம்ஸ் பெரிய மனிதத் தோரணையுடன்.

"அதில்லே ஜேம்ஸ். இன்னிக்கு என் பிறந்த நாள் இல்லையா? அதனாலே எங்க அம்மாகிட்டே ஆசீர்வாதம் வாங்கப் போறேன்."

"அப்படியா? இப்படி திடீர்னு போறீங்களே? உங்க அம்மா ரெடியா உங்களுக்குப் பிறந்த நாள் பரிசு வாங்கி வச்சிருப்பாங்களா?"

"பரிசு தரணும்கிறதில்லையே. வெறும் குங்குமச் சிமிழை நீட்டினாலே போதும். இப்போதைய நிலையிலே அதுதான் எனக்கு மிகப் பெரிய பரிசு."


ஜேம்ஸுக்குப் புரியவில்லை.

வீடு நெருங்கி விட்டது. ரேழியில் அப்பாவின் செருப்புக்கள் காணப்படவில்லை. நைட்-ஷிஃப்டாக இருக்கும். தெருவை ஒட்டியுள்ள அறையில் ஜன்னல் திறந்திருந்தது. அதன் வழியாகப் பார்த்த போது அம்மாவின் முதுகுப்புறம் தெரிந்தது. அவள் விசும்பும் ஒலி சன்னமாகக் கேட்டது. அவள் கையிலிருந்தது தன்னுடைய புகைப்படம்தான் என்பதைப் பார்க்காமலேயே புரிந்து கொள்ள முடிந்தது.


"அம்மா" என்றாள் மெல்ல.

கயிற்றை அறுத்துக் கொண்டு கன்றிடம் ஓடும் பசுவைப் போலத்தான் ஜிவ்வென்று வாசலுக்கு வந்தாள் அம்மா. ஆனால் திடீரென்று அவளிடம் ஓர் ஆவேசம் தோன்றியது.

"என்ன வேணும் உனக்கு?



ஊழலுக்குப் பரிசு பதவி உயர்வு!



போலீஸ்காரர்களால் அதிக பட்சம் எத்தனை தூரம் சீப்பாக நடந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்கள்? ஒரு சாம்பிள் பாருங்கள். திருவனந்தபுரம் கன்டோன்மென்ட் போலீஸ் ஸ்டேஷனின் அஸிஸ்டன்ட் கமிஷனர் சோமன். ஓரிரவு வெளியே போய்விட்டு, தாமதமாக வீடு வந்தவர், சாப்பிட ஏதுமில்லாததைக் கண்டு ஒரு பார் அட்டாச்டு ஓட்டலுக்குப் போனார். அவர் மனைவி பார்ட்னராக இருந்த ஓட்டல் அது.

இரவு நேரமாகி விட்டபடியால், ஓட்டலை மூடி விடும்படி, சேர்ந்து வந்த ஆலப்புழை எஸ்.பி.ஸ்ரீலேகா ஓட்டல்காரர்களிடம் சொல்ல, அப்போதுதான் சாப்பிட வந்திருந்த சோமன் கடுப்பாகி விட்டார். ஆத்திரத்தில் ஸ்ரீலேகாவைக் கண்டபடி திட்டி, தகாத முறையில் நடந்து கொண்டிருக்கிறார்.

பப்ளிக்காக நடந்த இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஸ்ரீலேகா, மேலிடத்தில் புகார் செய்ய, அஸிஸ்டன்ட் கமிஷனர் சோமன் மேல் விசாரணை நடத்தி, சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார் இப்போது!

சி.பி.ஐ. ரெய்டில் அரசியல்வாதிகள் தான் சிக்க வேண்டும் என்பதில்லை. ஒரு டி.வி. டைரக்டரும் மாட்டி இருக்கிறார். அதுவும் பெண்!

திருவனந்தபுரம் தூர்தர்ஷன் இயக்குநர் எம்.எஸ். ருக்மணி மேல் ஏகப்பட்ட குற்றச்சாட்டு. அளவுக்கதிகமான சம்பாத்தியம்; கணக்கில் வராத சொத்து என்று பல புகார்கள். விசாரித்த சி.பி.ஐ. இதனை உறுதி செய்திருக்கிறது.

ஏற்கெனவே இவர் பெங்களூர் டி.வி.யில் இருந்த போதே விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் அலாட் பண்ணுவதில் நிறைய 'விளையாடி' இருப்பதாகக் குற்றம் சாட்டி, பெங்களூர் சி.பி.ஐ.யும் வழக்கு நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாகவே திருவனந்தபுரத்தில் விசாரித்த போது, இங்கும் ஊழல் தொடர்ந்திருப்பது தெரிய வந்துள்ளது!

ருக்மணியின் வீடு, ஆபீஸ், வங்கிக் கணக்கு, லாக்கர்கள் என்று சோதனையிட்டு, ஆதாரங்களை அடுக்கி இருக்கிறது சி.பி.ஐ.

இது போதாதென்று, ஹவுஸிங் போர்டு சேர்மன் கோட்டாவைப் பயன்படுத்தி, நாலாஞ்சிறை என்ற இடத்தில் ஒரு ப்ளாட் வாங்கி, அதை கூடுதல் வாடகைக்கு விட்டு மேலும் சம்பாதித்திருப்பதும் தெரியவந்துள்ளது.

சி.பி.ஐ.யின் கிடுக்கிப் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் ருக்மணிக்கு சமீபத்தில் புதுதில்லி தூர்தர்ஷனின் டெபுடி டைரக்டர் ஜெனரலாகப் பதவி உயர்வு கிடைத்திருப்பது தான் இதில் சுவாரஸ்யமான கிளைமாக்ஸ்!

– திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ்.மணி

பிறந்த நாள் ஆசீர்வாதம் வாங்கிக்க வந்தியா? என் முகத்திலேயே முழிக்க வேணாம்னு சொல்லியிருக்கேனா இல்லையா? இருபத்தியொரு வருஷம் உன்னை மனம் நோகாம வளர்த்தோமே எங்களுக்கு நல்லா நன்றி தெரிவிச்சே. போமா வெளியே..." என்ற அம்மா மேலும் ரௌத்ரம் கொண்டாள். "நாளைக்கே உன் பெண்ணும் இப்படி வளர்ந்து வேறே இனத்தைச் சேர்ந்த எவனையாவது இழுத்துக்கிட்டு ஓடணும். அப்போதான் உனக்கும் அவனுக்கும் புத்தி வரும்."

கதவை அடித்துச் சாத்தி விட்டு உள்ளே தள்ளாடியபடி சென்றாள் அம்மா.

மௌனமாக மருத்துவமனையை நோக்கி திவ்யா நடக்க, கூட வந்த ஜேம்ஸ் கேட்டான். "என்ன அண்ணி, உங்க அம்மா உங்களுக்குப் பரிசு எதுவுமே கொடுக்காம கோவிச்சுக்கிட்டு அனுப்பிட்டாங்களே."

"யார் சொன்னது எனக்கு அவங்க பரிசு கொடுக்கலேன்னு. எங்களுக்குக் குழந்தை பிறக்கணும்னு ஆசீர்வதிச்சிருக்கார். அந்தக் குழந்தையின் கல்யாண வயது வரை நானும் விக்டரும் உயிரோடு இருக்கணும்னு விரும்பியிருக்கார். இதைவிட என்ன பரிசு வேணும்?" என்றபடி சந்தோஷத்துடன் தன் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்ட திவ்யாவின் பேச்சு அந்தச் சிறுவனுக்குப் புரியவேயில்லை.

COMPREHENSIVE CARDIAC SERVICES

- CORONARY ANGIOPLASTY
- ATHERECTOMY CORONARY STENTING
- VALVULOPLASTY
- PACE MAKER IMPLANTATION
- CORONARY BYPASS SURGERY
- VALVE REPAIR & REPLACEMENT
- OPEN HEART OPERATIONS ON CHILDREN
- ANEURYSM REPAIR
- CLOSED HEART OPERATIONS

TAMILNAD HOSPITALS

Cheran Nagar, Madras - 601 302

Ph : 2375221. Fax : 044-2375229

ADYAR CITY CENTER	ADAMBAKKAM FAMILY CLINIC
30, 1st Main Road, Gandhi Nagar, Madras - 600 020. Ph : 4914013, 4919778	3, Vellalar Street, Madras - 600 088. Ph : 2340182

INFORMATION CENTERS

TAMBARAM 115, Mudichur Road, Madras 600 045. Ph : 2367908	**TIRUVANNAMALAI** 3, Unnamalai Amman Nilayam, Tiruvannamalai 606 601	**SALEM** 25-D, Ramakrishna Road, Opp: L.R.N. Bus Stop, Salem 636 007	**KARAIKUDI** 364, Sekkalai Road, Karaikudi 623 001, Ph : 33073, 22715
ERODE 372-E E.V.N. Road, (Mettur Road) Erode 638 009. Ph : 216727	**COIMBATORE** 185, Ravindranath Layout, New Siddhapudur, GP Hospital Back Side, Coimbatore 641 044. Ph : 432074	**TRICHY** A-18, 1st Floor, XI Cross Main Road, Thillai Nagar, Trichy 620 018. Ph: 32049	**TIRUPUR** 199 Union Mill Road, Tirupur - 641001.

5. மதுரைக்கு வந்த மர்ம ஓலை!

மதுரை மாநகரின் மாளிகை வாயிலில் நின்று அந்த மங்கை மதுரமான குரலில் உதிர்த்த சொற்களால் தலை கவிழ்ந்து நின்றாள் இளவரசி. 'இந்த மங்கை யாராயிருக்கக்கூடும்?' என்ற கேள்வி அவள் மனத்தில் எழுந்து சுழன்று கொண்டிருந்தது. அந்த மங்கையின் விழிகளில் அன்பையும் பரிவையும் மீறி அறிவின் கூர்மையும் தெரிவதை கவனித்த இளவரசி, வயது சற்று கூடியிருந்தாலும் அவள் தேகக்கட்டு உறுதியாக இருப்பதையும், அவள் கரங்களின் முன் பகுதியில் வாள் வடுக்கள் தெரிவதையும்ம கவனித்தாள். மன்னருக்கும், இளைய பாண்டியருக்கும் தவிர வேறு எவருக்கும் கட்டுப்படாதவள் ஆதித்ய பாண்டியன் என்று கேள்விப்பட்டிருந்தாள். அந்த மங்கையின் முன்பாக அவள் தலை கவிழ்ந்து நிற்பதைக் கண்டவளுக்கு உண்மை உதயமாகத் தொடங்கியது.


பாண்டிய மன்னர் வெகு 'காலத்திற்கு முன்பே மனைவியை இழந்தவர். அப்படியானால் எதிரில் நிற்பவள் கொற்கைக் காவலன் மகளாயிருந்து, ஜடாவர்ம வீர பாண்டியனின் மனைவியாகி, அவனிடமே போர்ப் பயிற்சியும், படைகளை நடத்தவும் பயிற்சி பெற்ற இளைய ராணி இளநங்கையாகத்தான் இருக்க வேண்டும். உள்ளத்தில் உதயமான உண்மை அவள் விழிகளில் அச்சத்தைத் தோற்றுவித்தது.

அவள் முகபாவங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இளநங்கைக்கு அவள் அச்சத்தின் காரணம் புரிந்துவிட்டது. "பூங்கோதை, அஞ்ச வேண்டாம், உள்ளே வா" என்று அவள் தோள்களைப் பற்றி அணைத்தபடியே திரும்பி, "யுவான், நீயும் உள்ளே வா" என்றும் அழைத்தாள்.

தான் தமிழகம் வந்த மூன்று தினங்களுக்குள் தன் பெயரும், பிரபாவமும் மதுரை வரை எட்டிவிட்டதை எண்ணி வியந்தபடியே அரண்மனைக்குள் நுழைந்த யுவான், உள்ளே நுழைந்ததும் பிரமித்தான். பிரும்மாண்டமான அந்தக் கூடத்தில் சிற்பங்களும் சித்திரங்களும் நிறைந்திருந்தன. சற்று உயரத்தில் மாட்டப்பட்டிருந்த பெரும் மரப் பலகையொன்று அவன் கவனத்தை ஈர்த்தது. நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகளுடன் கற்களும் பாதிக்கப்பட்டு, பாண்டியரின் ராஜமுத்திரை அதில் செதுக்கப்பட்டிருந்தது. அதன் நேர் கீழிருந்த இருக்கையில் அமர்ந்து யுவானை உற்று நோக்கிக் கொண்டிருந்தான் ஒருவன். அந்த மனிதனை சூளாமணி விஹாரத்திலும், நாகையிலும் சந்தித்த நினைவும் எழுந்தது யுவானுக்கு. சோழ ஒற்றர் படையைச் சேர்ந்த விஜயன் என்று நாகையில் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதன் மீது வியப்பு நிரம்பிய விழிகளை நாட்டிய யுவான், "விஜயா, நீ எப்படி இங்கு..." என்று இழுத்தான்.

விஜயனின் வழக்கமான விஷமப்புன்முறுவல் விரிந்தது. "யுவான், நீ சென்று முதலில் நீராட்டத்தையும் உணவையும் முடித்துக் கொண்டு

விஷ்வக்சேனன்




வா. நிதானமாக அமர்ந்து பேசலாம்" என்றான் விஜயன்.

இரு நாழிகைகளுக்குப் பின்னர் மேன் மாடத்தில் இடப்பட்ட இருக்கைகளில் அனை வரும் அமர்ந்திருக்க, நடுவிலிருந்த தட்டுக்களில் கனிகள் நிறைந்திருந்தன. விஜயன் நிதானமாக விளக்க ஆரம்பித்தான். "யுவான், நீ இளவரசி யாரை அழைத்துச் சென்ற பிறகுதான், வந்த வர்கள் சிங்கணனின் வீரர்கள் என்பதை அறிந் தோம். சைவத் துறவியாரும் நீங்கள் சென்று ஒரு ஜாமம் கழித்தே வந்து சேர்ந்தார்.

ஒருமுறை ஆதித்யனை ஏறெடுத்துப் பார்த்த யுவான், ''சோழ வீரர்களைக் கொண்டே எங்களை மீட்டிருக்கலாமே" என்றான்.

விஜயனின் பதில் உடனே வந்தது.





அருள்வாக்கு

அஹிம்சையின் முக்கிய பிரயோஜனம் சித்தம் அடங்குவதே. ஆனால் அஹிம்சையை அப்யசிப்பதால், நாம் உத்தேசிக்காமலே வேறொரு பலனும் ஏற்படும். இதற்கு 'அவாந்தரப் பிரயோஜனம்' என்று பெயர். ஒருவன் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் அஹிம்சையைப் பரிபூரணமாகச் சாதித்து விட்டால் அவனுடைய சங்கல்பமின்றியே - அதாவது, அவாந்தரப் பிரயோஜனமாக - அவனுடைய சந்நிதானத்துக்கு வருகிற எல்லாப் பிராணிகளும் தாமாகவே தங்கள் பகைகளை மறந்து அஹிம்சா மயமாகி விடும்.

அஹிம்சா ப்ரதிஷ்டாயாம்
தத்ஸந்நிதௌ வைரத்யாக:
- யோக ஸூத்திரம்

அஹிம்சையைப் பூரணமாக அனுஷ்டித்தவன் இருக்குமிடத்தில் குரூரமானவர் மனத்திலும் சாந்தம் உண்டாகும். எனவே, தான் அன்போடு இருப்பதே இவனது சங்கல்பமானாலும், மற்றவர்களையும் அன்பாக ஆக்கும் அவாந்தரப் பிரயோஜனமும் கிடைக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

"போசளர்களின் செயல்களில் சோழர்கள் தலையிடுவதில் சிக்கல்கள் பல இருக்கின்றன யுவான். சோழ வம்சத்து ஒரே வாரிசாக இருக்கும் இளவரசியை போசளர்களிடம் சிக்க விடுவதை சைவத்துறவியார் அடியோடு விரும்பவில்லை. ஆனால் நேரிடையான எதிர்ப்பைக் காட்டவும் படைபலம் போதாது. அது மட்டுமல்ல..." என்று இழுத்தான் விஜயன்.

"மேலும் என்ன?"

விஜயனின் விஷமப் பார்வை பாண்டிய இளவலின் மீது பாய்ந்தது. "மேலும் கொங்கு நாட்டுக்கும் சோழ வம்சத்துக்கும் ஒரே வாரிசு சேர வேண்டிய இடம் இதுதான் என்று தீர்மானித்திருக்கிறார் சைவத்துறவியார்" என்றான் விஜயன்.

ஆதித்யனின் முகம் லேசாகச் சிவந்தது.

"இந்த அரசியல் விவகாரங்களைத் தீர்மானிக்க துறவியாருக்கு என்ன அதிகாரம்? என்ன அக்கறை?" ஆதித்யனின் கேள்வி சற்று உஷ்ணத்துடனே வந்தது.

அந்தக் கேள்விக்கு பதில் இளையராணியிடமிருந்து வந்தது. "ஆதித்யா, துறவியார் யாரென்பதை அறிந்தால் நீ இப்படிக் கேட்கமாட்டாய். இதில் அவருக்கில்லாத அதிகாரமும் அக்கறையும் வேறு யாருக்கும் இருக்க முடியாது" என்றாள் அவள்.

விஜயனின் முகத்திலிருந்த விஷமம் மறைந்து அதில் அச்சம் படர்ந்தது. துறவியாரைப் பற்றிய உண்மையை இளைய ராணியார் ஊகித்து விட்டார்கள் என்பதை அவள் வார்த்தைகள் உணர்த்தியதால் பிரமிப்பும் சேர்ந்தது அவன் முகத்தில்.

இருவரது பார்வையையும் கவனித்த ஆதித்யன் வினவினான், "யார் இந்தத் துறவி?" என்று.

இளையராணியின் பதில் வெகு சாதாரணமாக வந்தது. "தற்சமயம் கூற இயலாது ஆதித்யா. பிறகு நீயே புரிந்து கொள்வாய்."

அதுவரையில் இளையராணியின் பக்கத்திலமர்ந்து அவர்கள் விவாதிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த பூங்கோதையின் தலை மெல்ல நிமிர்ந்து, பார்வை ஆதித்யனை ஏறிட்டது. அந்தப் பார்வையிலிருந்த ஏக்கத்தையும் கவலையையும் கவனித்தவன் அடுத்து வினவினான், "அப்படியானால் இளவரசியை அவள் தந்தையிடம் கொண்டு சேர்ப்பிக்க வேண்டாமா?"

இளையராணியின் பதில் தீர்க்கமாக வந்தது, "அதுவும் தற்போது இயலாது ஆதித்யா. கொங்கு நாடு போசளர் பிடியிலிருக்கிறது. தவிர யுவானின் தந்தையும் சிங்கணனிடம் சிறைப்பட்டிருக்கிறார். பாண்டிய மன்னரின் போர் ஏற்பாடுகளுடன் துறவியாரின் இட்டமும் ஒத்துப் போகிறது. இது பற்றி மன்னர்தாம் முடிவெடுக்க வேண்டும்."

யுவானையும் இளையராணியையும் மாறி மாறிப் பார்த்த ஆதித்யன், "ஏன் இப்பொழுதே நாம் போசளர் மீது படையெடுக்கக் கூடாது?" என்றான்.

"இப்பொழுது கூடாது!" இளையராணியின் பதில் உடனே வந்தது.

"ஏன்?"

"காரணமிருக்கிறது ஆதித்யா" - வாயிலிலிருந்து கரகரத்த குரல் ஒன்று ஒலித்தது.

அனைவரது பார்வையும் வாயிலை நோக்கித் திரும்பியது.

"கொங்கு ஈழம் கொண்டு கொடுவடுகு கோடழித்து
கங்கை இருகரையும் காவிரியும் கைக்கொண்டு"

- என்று பிற்காலத்தில் மெய்கீர்த்திகள் பாட 'சோமகுல திலக' என்று போற்றப்பட்டவனும், தமிழகத்தின் இணையற்ற வீரனும் ராஜதந்திரியுமான ஜடாவர்ம வீரபாண்டியன், அறையின் கூரையை இடித்து விடுபவன் போன்ற உயரத்துடன் வாயிலில் நின்றிருந்தான். இளைய பாண்டியனது வருகை அந்த அறையிலிருந்த அனைவரையும் வணங்கி எழ வைத்தது.

தனபிரியா

வழங்கும்

சேமிப்பு திட்டங்கள்

◆ தனயோக ஃபிக்செட் டெபாசிட் திட்டம் ◆

டெபாசிட்களுக்கு 1 கிராம் தங்க காசு வழங்கப்படும்

க்யூமுலேடிவ் டெபாசிட்

வருடம்	டெபாசிட் தொகை	முதிர்வு தொகை	வருடாந்திர வட்டி	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	10,000	13,000	30.00%	2%
26 மாதங்கள்	10,000	16,000	27.69%	2%
36 மாதங்கள்	15,000	30,000	33.33%	3%

ஃபிக்செட் டெபாசிட்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	25%	ரூ. 5,000/-	5%

பென்ஷனர் மற்றும் முதியோர்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	30%	ரூ. 5,000/-	2%

தனபிரியா பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 25,000/- இரு மடங்காகிறது. 36 மாதங்களில் ரூ. 50,000/- ஊக்கப் பரிசு : 5 கிராம் தங்க காசு

தனயோக பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 50,000/- மும் மடங்காகிறது. 57 மாதங்களில் ரூ.1,50,000/- ஊக்கப் பரிசு : 9 கிராம் தங்க காசு

திருமகள் திருமண திட்டம் ரிக்கரிங் டெபாசிட் திட்டம்

ரூ.1000 x 25 மாதங்கள் அல்லது ரூ. 500 x 25 மாதங்கள்

26ம் மாத துவக்கத்தில் ரூ. 50,000/- அல்லது ரூ. 25,000/- பெற்று 27ம் மாதம் முதல் மாதம் ரூ.1000/- அல்லது ரூ.500/- வீதம் 25 மாதத்திற்கு எந்தவிதமான வட்டி இல்லாமல் திரும்ப செலுத்தலாம் அல்லது ரூ. 25,000/-ஐ மறுமுதலீடு 10 வருட காலத்திற்கு செய்து ரூ.2,32,835 பெறுங்கள்

ஓய்வுதாரர் நலத் திட்டம்

குறைந்தபட்ச முதலீடு காலம் வட்டி விகிதம்	ரூ. 1 லட்சம் அல்லது அதற்கு மேல் 6 வருடங்கள் அல்லது அதற்கு மேல் 26 சதவிகிதம் வருடத்திற்கு மற்றும் 1800 சதுர அடியில் வீட்டு மனை திருமுல்லை வாயில் நகரில் இலவசமாக பத்திர பதிவு செய்து வழங்கப்படும் அல்லது ரூ. 15,000/- ரொக்கம்

வட்டி தொகைக்கு முன் கூட்டின காசோலைகள் பின் தேதியிட்டு வழங்கப்படும்

● ஞாயிற்றுக் கிழமையும் அலுவலகம் இயங்கும் ●

தனபிரியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (இந்தியா) லிமிடெட்

காம்தார் பில்டிங் (2வது மாடி) 143/3. பிராட்வே, சென்னை - 600 108 போன் : 565668

கார்பரேட் அலுவலகம் : எண்.34 துரைசாமி சாலை, தி. நகர், சென்னை -17. போன் : 8281116.

"விரைந்து சேருங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள்"

உள்ளத்தையே ஊடுருவி விடுவதைப் போலப் பாய்ந்த அவன் கூர்விழிகள் அறையிலிருந்த ஒவ்வொருவரையும் அலசியது. இறுதியாக விஜயனின் மீது நிலைக்கவும் செய்தது.

அவன் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட விஜயன் தன் கச்சையிலிருந்து இரு ஓலைக்குழல்களை எடுத்து நீட்டினான்.

குழல்களிலிருந்த சோழர் முத்திரைகளை கவனமாக உடைத்தபடியே இருக்கையில் அமர்ந்த ஜடாவர்ம பாண்டியன் வெகு நிதானமாக ஓலைகளைப் படிக்க ஆரம்பித்தான். படிக்கப் படிக்க அவன் விழிகளில் போர்களின் போது தோன்றும் கழுகுப் பார்வை படர்ந்தது. சில கணங்களுக்குப் பின் அதுவும் மறைந்து பெரும் கனவுச் சாயை படர்ந்தது. அவன் பார்வை மீண்டும் விஜயனை நோக்கித் திரும்பியது. அதில் தெரிந்த கேள்வியைப் புரிந்து கொண்ட விஜயன், "பிரபு, இன்னும் ஒரு திங்களுக்குள் அனைத்து ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு தங்களுக்குத் தெரிவிப்பதாகக் கூறினார். பூர்வாங்கமாக சில பணிகள் இருப்பதாகவும் அதற்காக ஆதித்ய பாண்டியரை அனுப்பி வைக்குமாறும் கூறினார். விவரம் அடுத்த ஓலைக் குழலில் இருக்கிறது" என்றான்.

மௌனமாக இருக்கையை விட்டு எழுந்த வீரபாண்டியன் கைகளைப் பின்புறம் கட்டியபடி அறையில் உலவினான். அனைவரது பார்வையும் அவன் சிந்தனையைக் கலைக்கத் துணிவின்றி அவன் மீது பதிந்திருக்க, சற்று நேரம் கழித்து இறுதியாக அறிவித்தான் வீரபாண்டியன், "விஜயா, இன்னும் இரு தினங்கள் இங்கேயே தங்கியிரு. நான் மன்னரைக் கலந்து கொண்ட பிறகுதான் எந்தத் தீர்மானத்திற்கும் வர வேண்டும்."

ஆதித்யன் முகத்தில் தெறித்த கேள்வியையும் அவனையும் கவனித்த வீரபாண்டியன் முகத்தில் முறுவலொன்று நெளிந்தது. அடுத்து ஒலித்த அவன் சொற்களில் சிந்தனையும் பரிவுமிருந்தது.

"ஆதித்யா, கவனமாகக் கேள். தமிழகத்தின் மூன்று பெரும் சக்திகள் பிளவுபட்டுக் கிடக்கின்றன. சோழ ராஜராஜரால் ஏற்பட்ட சிக்கல்களின் விளைவாகவும், ஏற்படுத்திக் கொண்ட உறவின் காரணமாகவும், இன்னும் ஏற்படுத்த முயலும் உறவின் காரணமாகவும் போசளர் தமிழகத்தில் வேரூன்ற எண்ணுகிறார்கள். விஜயகண்ட கோபாலனும் இதே வழியில் ஏற்கெனவே பெற்றுவிட்ட காஞ்சி நகரிலிருந்து வடக்கே ஸ்திரப்படுத்திக் கொள்ள எண்ணுகிறான். ஆனால் கண்ட கோபாலனுக்கும் போசள மன்னனுக்கும் பகையென்பது உலகறிந்தது. இரண்டு பகைவர்களை நண்பர்களாக வைத்திருப்பது என்பது இரண்டு புலிகளின் மீது ஒருங்கே அமர்ந்து செல்வதைப் போன்றது. அந்த அசாத்யமான காரியத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் சோழ மன்னர். இடையில் எவருக்கும் அடங்காத காடவர்களின் சிற்றரசும் அதன் ஆதரவாளர்களும் வேறு..."

வீரபாண்டியன் சற்று நிறுத்தினான், தான் கூறியவை ஆதித்யன் சித்தத்தில் உறைய அவகாசமளித்து.

"அதில் ராஜேந்திர சோழரின் சித்தம் என்னவென்பது விளங்கவில்லையே?" என்று வினவினான் ஆதித்யன்.

பதில் விஜயனிடமிருந்து வந்தது . "ராஜேந்திர சோழர், ராஜராஜரின் செயல்களுக்குப் பரிகாரம் காண நினைக்கிறார். ஆனால் போசளருடனோ, கண்ட கோபாலனுடனோ நேரடியாக பகையோ போரோ தொடங்க சோழ நாட்டில் படைபலமில்லை. அன்னியரிடமிருந்து விடுபட்டு தமிழ்நாடு தமிழ் மன்னரால் ஆளப்பட வேண்டுமென்பது அவர் விருப்பம். சைவத் துறவியார் அதை நிறைவேற்ற முயல்கிறார்."

வீரபாண்டியன் தொடர்ந்தான், "தற்போது கொங்கு நாட்டிற்கும் சோழ அரசுக்கும் ஒரே வாரிசாக இருப்பவர் கொங்கு இளவரசி. அவளை அடைவதன் மூலம் தமிழகத்தை விழுங்க நினைக்கிறார்கள் போசளர்கள். பாண்டியரது படை பலம் அதிகமில்லையென்பதும் அதை ஈடுகட்டவே யந்திரப் பொறிகளை அதிகமாகப் போர்களில் பயன்படுத்துகிறோம் என்பதும் சிங்கணன் எண்ணம். அதைத் தடை செய்யவே யுவானின் தந்தையையும் சிறையெடுத்திருக்கிறான் அவன். சைவத் துறவியாரின் ஓலை நமது திட்டங்களுடன் ஒத்துப் போகின்றன. ஆனால் அதன் இறுதிப் பகுதிதான் சற்று சிந்திக்க வைக்கிறது."

"ஆதித்யனைத் தஞ்சைக்கு அழைத்திருப்பதைத்தானே கூறுகிறீர்கள்?" இளையராணியாரின் கேள்வி அவள் ஓலைகளைப் படித்து முடித்து விட்டதை உணர்த்தியது.

அந்தக் கேள்விக்கு பதில் அப்போது எவராலும் தெளிவாகக் கூற இயலாதிருந்தது.


இரண்டு தினங்களுக்குப் பின்னர் பாண்டிய மன்னரிடமிருந்து வந்தது ஓர் ஓலை. மன்னர் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த அனைவரையும் மதுரையை விட்டு வெளியேற உத்தரவிட்ட அந்த ஓலையைக் கண்டு ஆதித்யனும், பூங்கோதையும் மட்டுமல்ல, வீரபாண்டியனும் கூட பிரமித்தான்.

(தொடரும்)

கங்கை நீர் சிறந்தது. அதனினும் சிறந்தது அபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது கும்பாபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது ஏழைகளுக்காக உழைக்கும் ஓர் உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.

— வாரியார்

தகவல் : வேலூர் ஆர். பார்த்திபன்





1996 பிப்ரவரி 4
யுவ தை 21
மலர் : 54
இதழ் : 27

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஆந்திராவில் அனுதாப அலை!

எம். ஜி. ஆர். மறைந்தபோது, தமிழகத்தில் ஜெயலலிதாவை சவ ஊர்தியி லிருந்து கீழே தள்ளியும் அவர் மீது அவதூறுகளை வாரி இறைத்தும் சிறுமைப் படுத்தினார்கள். ஏறத்தாழ அதேபோன்ற நிலைமைதான் இன்று லக்ஷ்மி சிவபார்வதிக்கு நேர்ந்திருக்கிறது. ஆந்திரத்து அனுதாப அலை அவருக்குச் சாதகமாக அடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கட்சியில் பிளவை உண்டாக்கி பதவிக்கு வந்த சந்திரபாபு நாயுடுவின் பேரில் ஆந்திர மக்களுக்கு ஏற்கெனவே ஓரளவு மனக்கசப்பு இருக்கிறது. என்.டி.ஆர். கடைசி காலத்தில் பங்கேற்ற பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் திரளாக வந்து ஆதரவு காட்டியிருக்கிறார்கள். தெலுங்கு தேசத்தின் மெய்யான தலைவராக என்.டி.ஆரையே அவர்கள் இனம் கண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் உணர்ந்து, சந்திரபாபு நாயுடு கௌரவமாகவும் கண்ணிய மாகவும் நடந்து கொண்டிருக்கலாம். ஆனால், குடும்பச் சண்டையைச் சந்திக்குக்




கொண்டுவந்து தமது வாய்ப்புகளை அடியோடு கெடுத்துக் கொண்டுவிட்டார். அவர் பிரிவினர் லக்ஷ்மி சிவபார்வதி மீது சுமத்தும் அவதூறுகளை மக்கள் பொருட்படுத்தப் போவதில்லை. மாறாக, அவ்வாறு அவதூறு சுமத்தியதன் காரணமாகவே இருக்கிற நன்மதிப்பையும் இழக்கப் போகிறார் முதல்வர்.

தம் துக்கத்திடையேயும் லக்ஷ்மி சிவபார்வதி மிக சாமர்த்தியமாகக் காய்களை நகர்த்தியிருக்கிறார். ஒவ்வோர் அநியாயத்தையும் அவதூறையும் கைதேர்ந்த நாடக பாணியில் எதிர்கொண்டு (சமாதியருகே சத்தியாக்கிரகம், பாதுகைகளுக்குப் பூஜை) தமக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்.

கட்சித் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் கூட, தம்மை முன்னிறுத்திக் கொள்ளாமல், என்.டி.ஆரின் மருமகன் வேங்கடேஸ்வரராவை வருங்கால முதல்வராக முன்னிறுத்தியிருக்கிறார்.

பாதுகைகளுக்கு அஞ்சலி செலுத்த வரும் தொண்டர்கள் பார்வதியின் பாதங்களையும் வணங்கிச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்!

என்.டி.ஆரின் ஆதரவாளர்களைத் தமது அணிக்கு இழுத்துக் கொண்டு சிவபார்வதியைத் தனிமைப்படுத்த சந்திரபாபு நாயுடு தீவிரமாக முயன்று வருகிறார். ஆனால், அனுதாப அலை பார்வதி பக்கமே அடிக்கும் என்று உணர்ந்துள்ள தொண்டர்கள் நாயுடுவின் அழைப்பை ஏற்பது சந்தேகம்தான்.



இதையெல்லாம் நோக்க, வருகிற தேர்தலின்போது ஆந்திர அரசியல் சுவாரஸ்ய மாகச் சூடுபிடிக்கும் என்பது தெளிவாகிறது.

என்.டி.ஆரின் மறைவுக்குப் பிறகு ஆந்திர நிலைமை அடியோடு மாறி யிருப்பதைக் காங்கிரஸ் முக்கியமாக உணரவேண்டும். நிலைமையைச் சாதக மாக்கிக் கொண்டு, பாராளுமன்றத் தேர்தலுக்கு பார்வதியுடன் கூட்டணி அமைக்க முயற்சி செய்யலாம்.

இந்தக் கூட்டணி மட்டும் ஜெயித்துவிட்டால் சந்திரபாபு நாயுடுவின் அரசு தொடர்ந்து பதவியில் நீடிக்கும் தார்மீக பலத்தை இழந்துவிடும்.

அந்தக் கட்டத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

'அடுத்து ஆந்திராவில் ஆட்சிக்கு வரக்கூடிய அரசு மட்டும் அற்புதங்களைச் சாதிக்குமா?' என்ற கேள்வி எழுகிறது.

அந்த அரசின் செயல்பாடு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யலாம்; செய்யாமலும் போகலாம்.

ஆனால், கூட இருந்தே குழிபறிக்கும் சந்திரபாபு நாயுடு போன்றவர்களை மக்கள் நிராகரித்து விடுவார்கள் என்பதை அழுத்தமாக உணர்த்தியதாகும்.

ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அம்சமே மக்களுக்குத் தரப்பட்டுள்ள இந்த நிராகரிப்பு உரிமைதானே!



"ரூபாய்க்கு எதிராக டாலர் மதிப்பு உயர்ந்து கொண்டே போவதால், ஏற்றுமதியில் காட்டப்படும் அக்கறை, இறக்குமதியில், காட்டப்படுவ தில்லை.

"அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இந்தியாவுக்கு வரும் போது தங்கம் கொண்டு வரலாம் என்று இருக்கும் சலுகையில் ஒரு சிறிய கட்டுப்பாடு இருக்கிறது. அதாவது அவர்கள் குறைந்தபட் சம் ஆறுமாதமாவது வெளி நாட்டில் வசித்திருக்க வேண் டும் என்று இருக்கிறது. இந்தச் சலுகை சுமார் இரண்டு வரு டங்களாக இருந்து வருகிறது. இந்தச் சலுகையில், 'ஆறு மாதம் வெளிநாட்டில் இருக்க வேண்டும்' என்ற விதிக்குப் பதிலாக, 'மூன்று மாதம்' என்று குறைத்து விட்டால், தங்கம் வரவு நிச்சயம் அதிகமாகும். இந்த வகையில் விலை குறைவுக்கு வாய்ப்பு அதிகம்.

"இன்னொரு சாதா ரண காரணமும் இருக் கிறது: ரம்ஸான் மாதம் தொடங்கிவிட்டதால், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலான முஸ்லிம் வணிகர்கள், தொழிலில் ஆர்வம் காட்டி வெளியே வர மாட்டார்கள். அதனாலும் தங்கம் உள் நாட்டுக்கு வருவது குறைச்சலாய் இருக்கும்."

சமீப காலமாக உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருக்கும் தங்கத்தின் விலை, இதை எழுதும் போது 10 கிராம் ரூ. 5408 ரூபாயாக இருக்கிறது. அச்சாகும் போது 5500 ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இதற்கு என்ன காரணம்?

தங்கம்-வெள்ளி வியாபாரிகள் சங்கத் தலை வர் வசந்த்லால் மேத்தாவிடம் விசாரித்தோம்.

"முதல் காரணம், இப்போது கல்யாண சீசன். தேவை அதிகமாக இருக்கும் சமயம். ஆனால் அதற்கு ஏற்ற மாதிரி வரவு இல்லை.

"இரண்டாவது காரணம், டாலர் - ரூபாய் எக்ஸ்சேஞ்ச் ரேட்டில் இருக்கிற பெரிய இடை வெளி. ஒரு டாலருக்கு 33 ரூபாயாக இருந்த பரிமாற்று நிலை, உயர்ந்து கொண்டே போய், இப்போது 36 ரூபாய் ஆகிவிட்டது. சரிந்து கொண்டே போகும் ரூபாய் மதிப்பைக் கட்டுப் படுத்த மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது. இது ஒன்றே ஆறு முதல் ஏழு சதவிகித விலை வித்தியாசத் துக்குக் காரணமாகிறது.

பொருளாதாரப் பத்திரிகையாளர் அலோக் முகர்ஜியின் கூற்றுப்படி, இந்த ஆண்டு முதல், வங்கி டெபாசிட்டுகளுக்கான வரிப் பிடித்தம் செய்வது காரணமாக, வங்கி களில் டெபாசிட் செய்யப்படும் தொகை குறைந்து விட்டது. இப்படிக் குறையும் தொகை களும், தங்கம் மற்றும் ரியல் எஸ்டேட் முதலீடு களில் செலுத்தப்படுவதால், தங்கத்தின் விலை திடீரென்று உயர ஒரு காரணம் இருந்து வரு கிறது.

இந்தக் கூற்று எந்த அளவுக்கு உண்மை?

"கணக்கில் வராத பணம் இம்மாதிரி முத லீடுகளில் செலுத்தப்பட்டால், அவர் சொல் லும் காரணத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் வங்கிகளில் டெபாசிட் செய்யப்படும் நிதி அப்படிப்பட்டதல்லவே? அதனால் மேற் படி காரணம் சரியானதாக எனக்குத் தோன்ற

வில்லை!" என்றார் மேத்தா.

இந்த நிலையில் "மார்க்கெட் ரேட்டை விட எங்களிடம் குறைவான விலையில் தங்கம் வாங்கலாம்" என்று விளம்பரப்படுத்துகிறார்கள், சென்னை சரவணா ஸ்டோர்ஸ்காரர்கள்.

அதெப்படி மார்க்கெட் ரேட்டை விடக் குறைவாகத் தர முடியும்? உரிமையாளர் செல்வரத்தினத்தைக் கேட்டோம்.

"கடந்த ஒரு மாதமாகவே தங்கம் விலை அநியாயத்துக்கு ஏறிக் கொண்டு வருகிறது. இப்படி அதிகமாவதற்கு, ஏழிலிருந்து எட்டு சதவிகிதக் காரணம் உலக மார்க்கெட். தவிர, பணத்தின் மதிப்பு இங்கே குறைந்து வருவதால் 13% அதிகமாகியிருக்கிறது. ஆக மொத்தம் 20%.

இந்த இருபது சத விலையேற்றத்தால் டிமாண்ட் குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. சொல்லப் போனால், 'மேலும் விலை ஏறுமோ' என்று அஞ்சி, தங்கம் வாங்கு வோர் அதிகரித்திருக்கிறார்கள்.

"எங்கள் கடையில் மார்க்கெட் ரேட்டை விடக் குறைவாக இருப்பதற்குக் காரணம் கேட்டீர்களல்லவா? சொல்கிறேன்.

"இன்றைய மார்க்கெட் ரேட் படி 24 கேரட் தங்கம் விலை ஒரு கிராமுக்கு 13.5 அமெரிக்க டாலர்கள். அதாவது 515.50 ரூபாய் (23.1.96 நிலவரப்படி). இதற்கு வரி 22 ரூபாய். என்.ஆர்.ஐ. வரி ஆறு ரூபாய். லாபம் ஆறு ரூபாய். ஆக 549.50 ரூபாய் ஆகிறது. 550 என்று வைத்துக் கொள்ளுங்கள்.

"இதுவே 22 கேரட் எனில் 91.6% தங்கம் தான். இதன் விலை 503 ரூபாய்.

"ஆனால் சென்னை நகை வியாபாரிகள் சங்கம் 531 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறது! அதாவது 503 ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் வந்தாலும் லாபம்தான்!

தறிகெட்டு ஏறுதே தங்கத்தின் விலை!



• வசந்த்லால் மேத்தா



• செல்வரத்தினம்

"நான் இந்த சங்கத்தில் சேரவில்லை. காரணம், அதிக லாபத்தில் ஆசை வைப்பதை விட, லாபத்தைக் குறைத்து, வியாபாரத்தை அதிகமாக்க விரும்பினேன். தவிர, புதுசாக இத்தொழில் தொடங்கியிருப்பதால் மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாக வேண்டியது அவசியமல்லவா? அதனால்தான் மார்க்கெட் ரேட்டை விட எங்கள் கடையில் குறைந்த விலையில் தங்கம் விற்கிறோம்!"

— சித்தார்த், குல்லூ

ஏமாறும் இந்தியர்கள்!

உலக தங்க கவுன்சில் என்ற தனிப்பட்ட அமைப்பு ஜெனிவாவில் இயங்கி வருகிறது. இந்தியாவில் தங்க மார்க்கெட்டைப் பற்றி ஆய்வு செய்து இந்த அமைப்பு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவில் தங்கம் வாங்கும் நுகர்வோர் 8 முதல் 9 சதவிகிதம் குறைவான காரட் உள்ள தங்கமே வாங்குகிறார்கள். அதாவது 22 அல்லது 24 காரட் என்று சொல்லப்பட்டு விற்கப்படும் தங்கம் உண்மையில் 8% முதல் 9% வரை குறைந்த காரட்களே உள்ளன. இதனால் நுகர்வோர் ஒட்டுமொத்தமாகச் சுமார் ரூ. 5000 கோடி வரை ஏமாற்றப்படுகிறார்கள்.

நன்றி : பரம்பை நுகர்வோர் குரல்; தகவல் : நாஞ்சில் சு. நாகராஜன்.



ஆமை வேகத்தில் யோசிக்கிறாரே ரஜினி?



• முறைதானா....?

● என். குப்பு சாமி, வெங்கிடாபுரம்.

? கடவுளை வணங்குவதற்கும் கட்சித் தலைவனை வணங்குவதற்கும் முக்கிய வேறுபாடு என்ன.....?

! கடவுள், உங்களுக்குத் தகுதி இருந்தால் வரமளிப்பார்; தலைவரோ தகுதி இல்லாவிட்டாலும் வரம் தருவார்.

● க.கு.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.

? 'தேசிய இயக்கமும் தேசிய இயக்கத்தை ஆதரிக்கும் திராவிட இயக்கமும் தெய்வீக இயக்கமும் ஒருங்கிணைந்து, ஓர் அற்புத சக்தியாக ஆட்சியைப் பிடிப்போம்' என்கிறார் குமரி அனந்தன். எனக்கு ஒன்றுமே புரியலை. உங்களுக்கு ஏதும் புரியுதா?

! புரியுதே! தேசிய இயக்கம் காங்கிரஸ். அதை ஆதரிக்கும் திராவிட இயக்கம் எம்.ஜி.ஆர். முன்னணி. தெய்வீக இயக்கம் ரஜினி ஆதரவு!

● ஜி. கதிரேசன், சிறுமுகை.

? பர்கூர் தொகுதிக்குச் சென்ற முதல்வர் ஜெயலலிதாவும் உடன் பிறவா சகோதரி சசிகலாவும் இலவச வேட்டி, சேலைகளை மக்களுக்கு வாரி வழங்கினார்களே....? அது அரசாங்கப் பணத்திலா? சொந்தப் பணத்திலா?

! நமது வரிப் பணத்திலிருந்துதான்!

● க.ரா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? 'டிஸ்கோ சாந்தி அரைகுறை ஆடை அணிவதால் மகாத்மா ஆகிவிட முடியாது. அதே போல ஆர்.எம். வீரப்பனுடன் இருப்பதால் ரஜினி எம்.ஜி.ஆர் ஆகிவிட முடியாது....' என்று அமைச்சர் தென்னவன் பேசியிருப்பது பற்றி....?

! தாம் மகாத்மா என்று ஒரு போதும் டிஸ்கோ சாந்தி சொல்லிக் கொள்ளவில்லை. மேலும், எம்.ஜி.ஆருடன் இருந்ததால் வீரப்பனுக்குப் பெருமையேயொழிய வீரப்பனுடன் இருந்ததால் எம்.ஜி.ஆருக்குப் பெருமையில்லை... ஆக, அபத்தமான, தரக்குறைவான ஒப்பீடு!

● மன்னை நா. கண்ணன், சென்னை - 33.

? ஹவாலா... என்னங்க அப்படின்னா?

! ஏற்கெனவே விரிவாகக் கட்டுரை வெளியிட்டிருக்கிறோமே.... சுருக்கமாகச் சொல்வதென்றால், விதிகளுக்குப் புறம்பாக அந்நியச் செலாவணியைப் பெறும் மோசடித் தொழில். இதனால் நாட்டுக்கே பேரிழப்பு. நம் நாட்டின் செல்வம் சுரண்டப்படுகிறது என்று புரியாத ஏமாந்த சோணகிரிகளாக மக்கள் இருக்கும் வரை இந்த அநியாயம் தழைக்கும்.



• சூசக அறிவிப்பு!

● புளியரை கணேசன், சென்னை - 30.

? உண்மையான தி.மு.க. நாங்கள்தான் என்று எஸ்.டி.எஸ் கூறியுள்ளாரே?

! தேர்தலில் அம்மா நிலைமை ஆட்டம் கண்டால் 'தாவத் தயார்' என்று சூசகமாக அறிவிக்கிறாரோ என்னமோ!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84.

? எனக்கு முதலமைச்சர் பதவி மீது ஆசையில்லை என்று ஆர்.எம். வீரப்பன் கூறியிருக்கிறாரே?

! 'தேர்தலில் எங்கள் அணி வென்று, கூட்டணி அரசுக்கு நான் முதல்வராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டாலும் வேண்டாம் என்று சொல்லி விடுவேன்...' என்று அவர் கூறுவாராயின் அதை நம்பலாம்.

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? சென்னை கோட்டையில் மட்டுமல்ல, டெல்லி செங்கோட்டையிலும் புரட்சித் தலைவி கொடியேற்றும் காலம் வரும் என காளிமுத்து கூறியுள்ளது பற்றி....?

! சே! வெள்ளை மாளிகையை மறந்து விட்டுப் பேசுகிறாரே...? என்ன முட்டாள்தனம்!

● டி. வரதன், பவித்திரமாணிக்கம்.

? வரும் லோக்சபா தேர்தலில் யாருக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காது என்று

• மறந்துவிட்டுப் பேசுகிறார்!





• எழுத்தும் விருப்பமும்!

சந்திரசேகர் கூறியிருக்கிறாரே?

! ஆஹா! குதிரை வியாபாரத்துக்கு (எம்.பி.க்களை விலை பேசுறதுக்கு) பணம் கொடுத்து உதவிவிட்டு, பின்னர் சலுகைகள் பெற முற்படும் தொழிலதிபர்கள் மற்றும் ஹவாலாக்காரர்களுக்குக் கொண்டாட்டம்தான்!

● தி.மா. தமிழழகன், திருச்சி - 8.

? ஆளாளுக்கு மாநாடு நடத்தி, தங்கள் பலத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் போது, ரஜினி மட்டும் இன்னமும் ஆமை வேகத்தில் யோசித்துக் கொண்டிருப்பது முறைதானா....?

! யோசிக்கட்டும்... பரவாயில்லை! பின்வாங்காமல் இருந்தாலே போதும். கடைசி நிமிஷத்தில் களத்தில் குதிப்பது கூட சாணக்கியம்தான்.

● கொ. மூர்த்தி, குட்டலாம்பட்டி.

? ஹவாலா இப்படி மத்திய அமைச்சர்களுக்கு 'சவாலா' அமைந்து விட்டதே?


! இப்படியே நிலைமை நீடித்தால் தேசம் ஆகிவிடும் திவாலா!

● எஸ். ரேணுகா, நீடாமங்கலம்.

? அண்மையில் தங்கள் மனத்தை நெருடிய சம்பவம்?

! 1. வக்கீல் விஜயன் தாக்குதல் வழக்கில், பொய் சாட்சியங்கள் சமர்ப்பித்ததற்காக, சில தமிழக காவல்துறை அதிகாரிகள் பேரில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.ஐ. கோரிய அனுமதியை ஜெ அரசு வழங்க மறுத்தது. 2. சிவசேனாவுக்குக் கெட்ட பெயர் வரும் என்று பயந்து பம்பாய் கலவரங்கள் குறித்த விசாரணைக் கமிஷனை இன்றைய மஹாராஷ்டிர அரசு கலைத்தது. 3. இடைஞ்சலாக இருந்த தூர்தர்ஷன் டைரக்டர் ஜெனரல் பாசு, பதவி உயர்வு என்ற பெயரில் ஓரங் கட்டப்பட்டிருப்பது, என ஒன்றுக்கு மூன்றாகச் சொல்லலாம்.

❑ ரூ. 25/- பரிசு பெறுபவர் :
முகவை முத்துசாமி,
நாரேந்தல் - 623 409 ராமநாதபுரம் மா.வ.



• சாமர்த்தியம்!



• சாதுர்யம்....

● வெண்ணிலவன், பாணாம்பட்டு.

? வாசகர் விருப்பத்துக்கு ஏற்ப எழுதுகிற நிலை வருமாயின் நான் எழுதுவதை நிறுத்தி விட்டு வேறு தொழில் செய்யப் போவேன் என்று பாலகுமாரன் கூறுவது பற்றி....?

! அவர் தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களையே எழுதலாம். ஆனால் வாசகர் விரும்பிப் படிக்கும் முறையில் அவற்றைத் தருவதுதான் முக்கியம்.



• யாருடைய.....



• ..... பணம்?

● டி.ஆர். பாலசந்தர், திருநெல்வேலி - 6.

? நீங்கள் டீ.வியில் மிகவும் ரசித்துப் பார்த்த நிகழ்ச்சி?

! 21.1.96 அன்று சன் டீ.வியில் வைரமுத்துவின் நேருக்கு நேர். கவிஞர் தம்மை நியாயப்படுத்திக் கொண்ட சாதுர்யத்தையும் ரசித்தேன். வழக்கமாகக் கேள்விகளால் பின்னியெடுக்கும் பேட்டியாளர் ரவி பெர்னார்ட், பெட்டிப் பாம்பு போல் அடங்கிக் கிடந்த 'சாமர்த்தியத்தை'யும் ரசித்தேன்.

● முகவை முத்துசாமி, தொண்டி. ❑

? இன்றைய அரசியல் தொழிலை எதற்கு ஒப்பிடலாம்?

! எங்கெங்கும் ஊடுருவி சுற்றுச் சூழலை நாசமாக்கும் விஷவாயுவுக்கு ஒப்பிடலாம். அரசியல்வாதிகள் தங்கள் வற்புறுத்தலாலும் வழிகாட்டலாலும் அரசு அதிகாரிகளையும் அல்லவா மனசாட்சியற்ற ஊழல் பேர்வழிகளாக்கி வருகிறார்கள். இன்பசாகரனை அடுத்து தியாகேஸ்வரன், ஐ.ஏ.எஸ். வீட்டில் வருமானவரித் துறையினர் நடத்திய சோதனையில் வெளிப்பட்ட தகவல்கள் மேலும் ஓர் உதாரணம். அதிகாரிகள் நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லி வழிகாட்டிய காலம் போய், இப்போது உன்னாலே நான் கெட்டேன் கதையாகி விட்டது!. விஷவாயு, நீதித் துறையையும் முற்றிலுமாக ஊடுருவி விட்டால்...? நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது!

நீங்கள் கேட்டவை — தராசு

இலவசமாக ஓர் இதயம்!

❖ 'என்ரான்' பற்றிய தலையங்கம் அருமை. 'நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதுதான் சாக்கு' என்பது போல ஜோஷியின் பேச்சு உள்ளது. அரசியல் வாதிகளுக்கு இரட்டை நாக்கு என்பதில் சந்தேக மில்லை. அப்படி இருக்கையில் ஜோஷியிடம் மட்டும் தாங்கள் நியாயத்தை எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம் என்பதுதான் புரியவில்லை.

தஞ்சாவூர் - 5, வனிதா ரவி.

❖ 'சுஜாதா பக்க'த்தை, கல்கியில் நிரந்தரமாக்கி விடுங்கள். சுஜாதாதான், இனிமேல் கல்கி வாசகர்களின் 'இண்டர்நெட்'!

சென்னை - 91, என். கார்த்திகேயன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம் :

❖ "வளர்ச்சியா?" என்ற தலைப்பிலான செய்தி கண்டேன். இந்த ஆட்சியில் பல வளர்ச்சிகள் நிகழ்ந் துள்ளனவே! முதலில் ஊழலிலே வளர்ச்சி; அடுத்து லஞ்ச லாவண்யத்தில் வளர்ச்சி... இது போன்று எவ்வளவோ வளர்ச்சி அடைந்துள்ளதை மறந்து விட்டீர்களே! இவற்றில் ஹைலைட்டே அக்கட்சி யினரின் சொந்த வளர்ச்சிதான் என்பது குறிப் பிடத்தக்கது.

மன்னார்குடி, எம். ரேவதி.

❖ தேவாவின் பேட்டி, அவரது தற்பெருமை கொள்ளாமையைப் படம் பிடித்துக் காட்டியது.

மதுரை - 10, பெ. பொன்ராஜபாண்டி.

❖ தேவா காப்பியடிக்கிறார் என்று அப்பட்டமாக அட்டையில் போட்டுள்ளீரே நியாயம்தானா? எது எப்படியோ சில சமயம் கேட்கும்படியான சில மெட்டுக்களை போட்டு அசத்திவிடுகிறார் அல்லவா!

சீர்காழி, எம். திருஞானம்.

❖ மெட்ராஸ்காரரான தேவா, கிராமியப் பாடல்களை மிக மிக அருமையான முறையில் தந்ததற்கு இளைய ராஜாதான் காரணமென்று ஒப்புக் கொண்டது, அவரின் திறந்த மனதைப் படம் பிடித்துக் காட்டு கிறது!

சென்னை - 1, ஏழுகிணறு எஸ். பாலாஜி.

❖ யோகி எழுதிய 'ஜெயித்துவிட்டேன்' கதை ஜனநாயக நாட்டில் அரசு ஊழியர்களின் வேலைத் திறன் எப்படி உள்ளது என்பதை மிக அழகாக நையாண்டி செய்திருக்கிறது. பாராட் டுக்கள்.

பரமக்குடி, எஸ். விஜியாய்.

❖ 'சுயநல சக்திகள் தூண்டும் கலவரம்' - திருநெல்வேலி ரிப்போர்ட் படித்தேன். கண்களில் ரத்தம் கசிந்தது. மனிதனின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு, அறிவை அடகு பிடிக்கும் வித்தையை எப்போது எங்கள் அரசியல் வாதிகள் கைவிடப் போகிறார்கள் அல்லது என் சகோதரன் சுயமாய்ச் சிந்திப்பது எப்போது? அப்போதுதான் இது அமைதிப் பிரதேசம் ஆகும்.

ஈரோடு, டி. சந்திரன்.

❖ திருநெல்வேலி ரிப்போர்ட் - தாமதமாக வந்தாலும் ரணங்களுக்கு மருந்திடும் வண்ணம் அமைந்து இருந்தது. பாஸிட்டிவ் அப்ரோச்சுடன் இருந்தது கட்டுரை.

திருநெல்வேலி - 11, எஸ்.ஆர். ஸ்வாமி.

❖ 'மேலாண்மை பொன்னுச்சாமி' யின் "பார்வை" படித்தேன்! ஆசிரியர் தமக்கேயுரித்தான கரிசல் வார்த்தைகள் மூலம் படமாக்கி மனத்திரையில் ஓட விடுகிறார்! ஐந்து பக்கங்களும் படிப்போர் மனம் அக்கம் பக்கம் தாவாதபடி தன்னோடு கெட்டியாகப் பிடித்திழுத்துச் செல்கின்றன. பேருந்தில் நாமும் பயணம் செய்த பிரமையைப் 'பார்வை' படைக்கிறது; பாராட்டுக்கள்!

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

❖ பைசாவுக்குப் பிரயோஜனமில்லாத செய்திகளை எல்லாம் வெளியிட்டு, இதுதான் இலவச இணைப்பு என்று மார்தட்டிக் கொள்ளும் பல இதழ்களின் மத்தியில், மனிதனின் இதயத்தைப் பற்றி இவ்வளவு விளக்கமாக வெளி வந்துள்ள கல்கியின் இலவச இணைப்பு, அரிய பொக்கிஷம்!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

❖ "இதயத்தைப் புரிந்து கொள்வோம்" என்ற இணைப்பு, வாசகர்களுக்கு, குறிப்பாக 65 வயதைத் தாண்டிய எம் போன்றோருக்கு ஒரு இதயத்தையே பரிசாகப் பெற்ற உணர்வினை ஏற்படுத்தவல்லது. மீண்டும் சொல்கிறேன், இது ஒரு சாதாரண இலவச இணைப்பு ஏடல்ல, இலவச இதய இணைப்பு. கல்கி யின் சேவை தொடரட்டும்.

எலந்தக்குடி, கே.எம். ஜக்கரியா.

ஜெய் ஹவாலா!

கோதுமை ஹல்வா கிளறுகிற வாசனை வந்ததுமே ஹவாலா ஞாபகம் வந்து விட்டது எறும்பாருக்கு. ஹல்வாவின் ருசியை விட அவருக்கு ஹவாலா செய்திகள் ருசித்தனவோ என்னவோ, காற்றிலேறி விண்ணையும் சாடி, புதுதில்லியில் வாஜ்பாயி வீட்டில் குதித்தார்.

"ஜெய் ஹவாலா" என்ற குரல் கேட்டு சுற்று முற்றும் பார்த்த வாஜ்பாயி, தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் விளிம்பில் எறும்பாரைக் கண்டுபிடித்தார்.

"இது என்ன புதுசா இருக்கே! சத்யமேவ ஜயதே என்றுதான் நான் நினைச்சுக்கிட்டிருக்கேன்'' என்றார்.

"அத்வானிஜி மீது கூட ஸி.பி.ஐ. வழக்குப் போட்டிருக்கிறதே. அதைப் பார்க்கும் போது 'ஜெய் ஹவாலா' என்றுதான் கோஷமிடத் தோன்றுகிறது'' என்றார் எறும்பார்.

"ஓ! அதைச் சொல்றியா? பிரதமர் கூடத்தான் ஜெயின் சகோதரர்களிடம் வாங்கியிருக்கார்'' என்றார் வாஜ்பாயி.

"அப்படி நீங்க சொன்னதை நானிதழ்களில் படிச்சேன். 'பிரதமர் கூடத்தான் வாங்கியிருக்கார்' என்று நீங்க சொல்லும் போது அத்வானி வாங்கியிருப்பதாக மறைமுகமாக வேணும் ஒப்புக் கொள்வதா கிறதே!''

"போக்கிரி! உன்னை இன்னும் பேச விட்டால் நானே வாங்கியிருக்கிறதா கூடச் சொல்வே... உன்னை... உன்னை...'' என்று ஒரு கண்டு கண்டினார் வாஜ்பாயி.


அந்தர் பல்டி அடித்து தில்லி முதல்வர் குரானாவின் காது விளிம்பில் வந்து விழுந்தார் எறும்பார். எங்கிருக்கிறோம் என்று புரிந்ததும், "வாங்குவதில் எத்தனை வகை?'' என்று கேட்டார்.

''மூன்று வகை'' என்று வாத்தியாரின் கேள்விக்குப் பதில் சொல்கிற பழைய ஞாபகத்தில் பேசினார் குரானா. ''தனக்கு என்று வாங்குவது, கட்சிக்கு என்று வாங்குவது; பிரதிபலனாக ஒரு தப்புக் காரியத்தை முடித்துத் தருவதாகக் கூறி வாங்குவது. மூன்றாவதுதான் லஞ்சம். அதுதான் தப்பு. முதல் இரண்டு வகையும் குற்றமாகாது. அவை நன்கொடைகள்!''



''சட்டப்படி அதில் தவறில்லாமல் இருக்கலாம்; ஆனால் அதுவே ஹவாலா மூலம் பெறப்படுகிற போது அல்லது ஹவாலா மோசடி செய்கிற பேர்வழிகளிடமிருந்து பெறப்படும் போது தேசத் துரோகமாகி விடுமே!''

"என்ன எறும்புய்யா நீ? தமிழ்நாட்டிலேர்ந்துதானே வரே? 'நாய் விற்ற காசு



குரைக்காது'ன்னு ஒரு பழமொழி இருக்கே தெரியாதா?"

"உண்மைதான். ஆனா நீங்க 'பணம் வாங்குவது எத்தனை வகைப்படும்' என்று விளக்க உரை தரும் போது, ஏதோ ஒரு வகையில் அத்வானிஜி பணம் வாங்கியிருக்கிறதா உறுதிப் படுத்தறதா ஆகுதே!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, ராவும் ராவும் சேர்ந்து சதி பண்றாங்க; அங்க போய்க் கேளு" என்று குறுகுறுத்த காதை தட்டி விட்டார் குரானா.

ஆகாயம் அளாவிய எறும்பார் மறுபடி தரை தட்டிய போது அவர் ஒரு மேஜை மீது விழுந்திருந்தார். சமாளித்து எழுந்து உடலை அசைத்து நெளித்து காயம் ஒன்றும்படவில்லை என்று உறுதியானதும் நிமிர்ந்து பார்த்தார். ஸி.பி.ஐ. ராவ்! வணக்கம் தெரிவித்து, "நீங்க ஏன் இத்தனை காலம் சும்மா இருந்துட்டு இப்ப தேர்தல் நெருங்கற சமயத்துல கேஸ் போடறீங்க? தேர்தலின் பொருட்டுத்தான் இப்படி வழக்குத் தொடுப்பதாக அத்வானி குற்றம் சாட்டுகிறாரே?" என்றார் எறும்பார்.

ஸி.பி.ஐ. ராவ் சிரித்தார். "அப்படின்னா தேர்தல் நடக்காத போது வழக்குத் தொடுத்தால் அதை அத்வானி வரவேற்பாராமா? கேட்டுச் சொல்!" என்றார்.

அந்தப் பதிலை வெகுவாக ரசித்துத் தலையாட்டிய எறும்பார், "நீங்க வேண்டுமென்றே பிரதமர் மீது வழக்குத் தொடர மட்டும் அனுமதி கேட்கலே; தேர்தலை முன்னிட்டு மற்றவங்களை மட்டும் மாட்டி விட்டிருக்கீங்க' என்று பேசப்படுகிறதே" என்றார்.

"நானும் ஒரு ராவ் என்பதால் அப்படிப் பேசறாங்க. ஆனால் கிடைக்கிற வலுவான சாட்சியங்கள், தடயங்களின் அடிப்படையில்தான் நான் இயங்க முடியும். இதுல அரசியல் ஏதும் கிடையாது."

"பிரதமர் மேல் பழிசுமத்த ஒருவேளை வலுவான சாட்சியம் அகப்படாமல் போயிருக்கலாம்; ஆனா ஏராளமான சாட்சியங்கள் கிடைத்தும் தமிழ்நாட்டிலே உங்களுடைய ஜபர்தஸ்தைக் காட்ட முடியலையே! அது அரசியல் இல்லையா?"

"அதிலும் எங்களைப் பொறுத்தமட்டில் அரசியல் ஏதும் கிடையாது; ஆனால் அரசியல் குறுக்கீடு ஏதும் இருக்கலாம்; அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும்?"

"ஆறப்போட முடியும், பூசி மெழுக முடியும், வெள்ளை அடிக்க முடியும்" என்று கூறிய எறும்பார் அப்போது அடித்த 'ஆந்திர' புயலில் அடித்துச் செல்லப்பட்டார்.

சற்று நேரம் சென்று ஏதோ வலையில் அகப்பட்டது போன்ற உணர்வு ஏற்பட கண் திறந்து பார்த்தால் அத்வானியின் மீசையில் சிக்கியிருப்பது புரிந்தது. அது கோபத்தில் துடித்துக் கொண்டும் இருந்தது!

"ஹிந்துத்வா வழக்கில் நாங்க வெற்றி பெற்று விட்டது பொறுக்காமல் பழிவாங்கிட்டாங்க; அதுவும் தேர்தல் நெருங்கும் போது! அநியாயம்! அக்கிரமம்!" என்று குதித்தார், அத்வானி.

"இது நிஜமென்றால் இதையே அனுதாப வோட்டுக்களாக மாற்றி தேர்தலில் ஜெயிக்கலாமே! ஆனா ஆரம்பத்தில், 'வழக்கு அன்றாடம் நடந்து தேர்தலுக்கு முன் தீர்ப்பு வர வேண்டும்' என்று கூறியவர், இப்போ அவ்வளவு தீவிரமாக இல்லை போலிருக்கே...? உங்க கட்சியைச் சேர்ந்தவங்களே அப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல்..."

அத்வானிக்கு மூக்கில் குறுகுறுப்பு ஏற்பட "அச்சூ" என்று பெரிதாகத் தும்மினார்.

அவ்வளவுதான். எறும்பார் எகிறிப் போய் ஒரு வழுக்குப் பாறை மீது விழுந்தார். சுதாரித்துக் கொண்டு பார்த்தால் பிரதமரின் தலை! அவர் வழக்கம் போல் தலையைத் தடவ இரு விரல்களுக்கிடையில் எறும்பார் அகப்பட்டுக் கொண்டார். "அடடே! எங்கே வந்தே?" என்றார் ராவ்.

"தேர்தலையொட்டி நீங்க அத்வானி மீது அவதூறாக, அநியாயமாக வழக்குப் போட்டிருக்கிறதா சொல்றாங்க..."

"அதான் தேர்தலைப் பொறுத்தமட்டில் லஞ்ச ஊழல் ஒரு பிரமாத விஷயமில்லே; அதை தேர்தல் பிரச்னையாக்க அவசியமில்லேன்னு சொல்லிட்டேனே!"

"அப்புறம் நீங்களும் வாங்கியிருப்பதாக..."

"அதான் தேர்தலைப் பொறுத்தமட்டில் லஞ்ச ஊழல் ஒரு முக்கிய விஷயமில்லே; அதைத் தேர்தல் பிரச்னையாக்க அவசியமில்லேன்னு சொல்லிட்டேனே!"

"யோக்கியமான அரசியல்வாதி ஒருத்தன் கூட நாட்டில் இல்லை போலிருக்கே? மக்கள் யாருக்கு வோட்டுப் போடறது?"

"அதான் தேர்தலைப் பொறுத்தமட்டில் லஞ்ச ஊழல் ஒரு பெரிய விஷயமில்லே; அதைத் தேர்தல் பிரச்னையாக்க அவசியமில்லேன்னு சொல்லிட்டேனே!"

"இப்பல்லாம் ஸி.டி. வந்துருச்சு; நீங்க இன்னும் கீறல் விழுந்த ரிகார்டிலேயே இருக்கீங்க" என்ற எறும்பார்; "அப்ப உங்க நோக்கிலே எதுதான் தேர்தலையொட்டி முக்கிய விஷயம்?" என்று கேட்டார்.

"வேறென்ன? நான் மீண்டும் பிரதமராவதுதான்!" என்ற ராவ், அபூர்வமாகச் சிரிக்க, அந்த அழகிலே அப்படியே மூர்ச்சித்து அவர் மடியிலேயே விழுந்தார் எறும்பார்.


● சின்னஞ்சிறு செலவுகளையும் கவனமாக இருங்கள். அடித்தளத்தில் உள்ள சிறிய ஓட்டை கப்பலையே கவிழ்த்து விடும். – பிராங்க்ளின். தகவல் : வயலூர் பா. குணா

"தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் சொன்னது மட்டுமல்லாமல், குதிரைப் பந்தயம் என்பது திறமையைக் காட்டுகிற ஒரு விளையாட்டு என்றும் கூறியுள்ளதே! இது பற்றி உங்கள் கருத்து என்ன? தீர்ப்பைப் பற்றிக் கேள்விப்பட்ட போது, உங்கள் உணர்வு எப்படி இருந்தது?" கலைஞரிடம் கேட்டோம்.

"நான் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? அதுதான் சுப்ரீம் கோர்ட்டே பந்தயத்துக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டதே" என்றார்.

"குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டதன் அடையாளமாக, கலையுணர்வு மிக்க இரண்டு குதிரை-வீரன் சிலைகளையும் ஜெமினி சந்திப்பில் நிறுவினீர்கள்...!"

"சிலைகளை எடுத்து விடப்போகிறார்கள்!"



கொஞ்சம் யோசித்தார் கலைஞர். "குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டது. 74-ல் கழக அரசில் அந்த சட்டத்தை அமல்படுத்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீர்ப்பைச் சொன்ன பிறகு long live horses என்றும் கூறியுள்ளார்கள். என்ன செய்வது? நாமும் சேர்ந்து 'குதிரைகள் வாழ்க' என்று கூற வேண்டியதுதான்" என்ற கலைஞர், பிறகு தொடர்ந்தார்.

"ராஜாஜி நினைவாலய திறப்பு விழாவின் போது லாட்டரியைத் தடைசெய்யும் அறிவிப்பை வெளியிட்டேன். அதே போல கழக ஆட்சியில் மதுவும் ஒழிக்கப்பட்டது. ஆனால் இப்போது நிலைமை என்ன? இந்தியா ஒரே தேசமாக இருப்பதால் இதுபோன்ற சமூக நலத் திட்டங்களை ஒரு மாநிலத்தில் மாத்திரம் செயல்படுத்துவது சாத்தியமில்லை என்பதை அனுபவரீதியாக உணர முடிகிறது" என்ற கலைஞர் இறுதியில், "குதிரை-வீரன் சிலை கழக ஆட்சியில் வைக்கப்பட்டது; பிரமாதமான வடிவமைப்பு' என்று நீங்கள் புகழ்ந்தால், அந்தம்மா (ஜெயலலிதா) சிலைகளை எடுத்து விடப் போகிறார்கள்..." என்றார் சிரித்தபடி!

சந்திப்பு : ப்ரியன்



சுந்தர மொழியும் சூடேற்றும் ஊசியும்!

அரசியலிலிருந்து தம்மை 'டிஸ்சார்ஜ்' செய்து கொண்ட டாக்டர் ஏ. கலாநிதி, இப்போது காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார். மத்திய சென்னை பாராளுமன்றத் தொகுதியிலிருந்து இரண்டு முறை தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி நல்ல பெயரெடுத்தவர். 1989 தேர்தலில் அதே தொகுதியில் தோற்றதும் தி.மு.க.விலிருந்தும் அரசியலிலிருந்தும் விலகிக் கொள்வதாக அறிவித்தார். 'இப்போது ஏன் இந்த திடீர் முடிவு?' என்று கேட்டால் அதிர்ச்சி தரும் பதிலளிக்கிறார் டாக்டர்!

"89 தேர்தலில் கிட்டத்தட்ட ஜெயிக்கும் நிலையில் இருந்தேன். ஆனால் தேர்தல் நெருங்கிய சமயத்தில், கட்சித் தலைமைக்கு நட்பான சிலர் செய்த 'சதி'யின் காரணமாகத் தோற்றுப் போனேன். இவ்வாறு முதுகில் குத்தப்பட்டதில் பயங்கர 'ஷாக்'. அதன் பிறகுதான் மருத்துவத் துறையில் கவனம் செலுத்த விரும்புவதாகக் கலைஞரிடம் கூறி விலகிக் கொண்டேன்..."

"ஜெ. முதல்வரான போது அவரைச் சந்தித்தீர்கள். அ.தி.மு.கவில் சேர்வீர்களோ? என்று அப்போது நினைக்கும்படி இருந்தது. இப்போது காங்கிரஸில் சேர்ந்திருக்கிறீர்களே....?" என்று கேட்டால்,

"நான் ஜெயலலிதாவைச் சந்தித்தது வெறும் courtesy call", என்கிறார் கலாநிதி. அவர் ராஜ்யசபா உறுப்பினராக இருந்தபோது பழக்கம் உண்டு. முதல்வரானதற்கு வாழ்த்துச் சொல்லப் போனேன். காங்கிரஸில் சேரக் காரணம் தேசிய இயக்கத்தில் தொண்டாற்ற வேண்டும் என்ற ஆவல்தான். பாராளுமன்ற உறுப்பினராக' இருந்த காலத்திலிருந்தே நரசிம்மராவை நன்றாகத் தெரியும். ஒரு மைனாரிட்டி அரசை வைத்துக் கொண்டே இவ்வளவு தூரம் சமாளித்திருக்கிறாரே... மெஜாரிட்டி அரசாக இருந்திருந்தால் நாட்டை இன்னும் 'ஓகோ' என்று உயர்த்தியிருப்பார். இப்போது தம் கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் பாராமல், ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்க அனுமதித்திருக்கிறாரே..."



• டாக்டர் கலாநிதி



• சுந்தரம் ஐ.ஏ.எஸ்.

- டாக்டரின் பேச்சு டெல்லிக்கு எட்டினால் கால்ஷியம் ஊசி போட்டது போல் சும்மா 'ஜிவ்'வென்று இருக்காதோ!

ஜனதா கட்சிக்கு ஒரு கொ.ப.செ நியமிக்கப்பட்டிருக்கிறார்! சு. சுவாமியே இருக்க, இப்படி தனியொரு பதவி அவசியமா என்று கேட்பவர்கள் கடைசி வரிகளைப் படிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

கொ.ப.செ...? வி. சுந்தரம் – முன்னாள் ஐ.ஏ.எஸ். ஜெ. அரசால் செமர்த்தியாகப் பந்தாடப்பட்டவர். இரண்டு வருட காலத்தில் ஐந்து முறை பணிமாற்றம்!

"சிட்கோ தலைவராக இருந்தபோது விதிகளுக்குப் புறம்பான வகையில் அ.தி.மு.க.காரர்களுக்குத் தொழிற்சாலை நிலம் வழங்கச் சொன்னார்கள். மறுத்தேன். மாற்றப்பட்டேன். மதுவிலக்கு ஆயத்துறை கமிஷனர், பொதுப் பணித் துறைச் செயலாளர் என்று அடுத்தடுத்த பதவிகளிலும் அவர்கள் எதிர்பார்த்த ஒத்துழைப்பை நான் தராததால் மீண்டும் மாற்றப்பட்டேன். கடைசியாக நிலக்கரி இறக்குமதி விவகாரம்... (இப்போது விஷயம் கோர்ட்டில் இருக்கிறது!)

"இருபத்தொன்பது ஆண்டுகளாக அரசுப் பணியிலிருந்து அரசியல்வாதிகள் நாட்டை எப்படிப் பாழ்படுத்துகிறார்கள் என்று பார்த்து விட்டேன். இனியும் படித்தவர்களெல்லாம் பொறுமையாக இருந்தால் நாட்டைக் காப்பாற்ற முடியாது... ஜெயபிரகாஷ் நாராயண் தொடங்கிய ஜனதா கட்சியில் சேர்வது பொருத்தமாகப்பட்டது...

எளிமை, சமத்துவ நோக்கு, ஜாதி-மதங்களை ஒதுக்கிய பார்வை போன்றவை சுந்தரத்தை ஜனதாவுக்கு ஈர்த்ததாம்.

"சந்திராசுவாமியுடன் சு. சுவாமிக்குத் தொடர்பு இருப்பதாலேயே அவரும் சந்தேகத்துக்குரியவர் என்று நினைக்கக் கூடாது. ஓர் அரசியல்வாதிக்கு நல்லவர், கெட்டவர் எல்லோரிடத்திலும் தொடர்பு இருக்கத்தான் செய்யும். சுவாமி சுத்தமான கரங்களுக்குச் சொந்தக்காரர் என்று நான் நம்புகிறேன்..." – சுந்தர மொழிகள்!

- ப்ரியன்

படங்கள் : கிருஷ்ணமூர்த்தி

'சுருக் - நறுக்' என்று ஒரு சொல்லோவியம் - 17

காதல் என்பது....

'காதல் போயின், காதல் போயின் சாதல் சாதல் சாதல்...' என்றான் மகாகவி பாரதி. அப்படிப்பட்ட காதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

உங்களுடைய சிந்தனையைக் கீழுள்ள கூப்பனில் ஒரு சொல்லோவியமாக எழுதியனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ஐம்பது ரூபாய் பரிசு.

இன்னும் ஒன்பது வாரங்களுக்குத்தான் இப்போட்டி. இவற்றில் அதிக முறை பரிசுபெறும் ஒருவருக்கு மெகா பரிசாக ஒரு ஜோடி டைடன் கைக்கடிகாரங்கள்!

முடிவு தேதி : 12.2.96.

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. (- ஆர்.)

காதல் என்பது ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....



"என் குடும்பநலன் எனக்கு மிக முக்கியம். அதனால்தான், ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட் திட்டத்தில் நான் முதலீடு செய்துள்ளேன்."

"எதிர்காலத்தைப் பற்றிய கவலையில்லாமல் வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதற்கு, 'ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட்' வழிசெய்கிறது."



"எந்த நேரத்திலும் பணத்தேவைகளை சந்திக்க முடியும் என்கிற நம்பிக்கையை 'ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட்' எனக்கு தந்திருக்கிறது."

"அதிகப்படியான பணத்தேவைகளைப் பற்றியோ, பாதுகாப்பைப் பற்றியோ நான் கவலைப்படுவதே இல்லை. ஏனெனில் ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட்டில் நான் முதலீடு செய்திருக்கிறேன்."





"என்னுடைய படிப்பிற்கும் எதிர்கால நல்வாழ்விற்கும் சேமிப்பு ரொம்ப அவசியம். அதற்கு ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட் இருக்கிறதினால எனக்கு கவலையே இல்லை."

"ட்வெண்டி:.பர்ஸ்ட் செஞ்சுரியின் :.பேமிலி டெபாசிட் மூலம் எனக்கு கிடைச்சிருக்கிற நன்மைகளை என்னோட :.ப்ரண்ட்ஸ் எல்லோரும் பெற வேண்டும் என்பதுதான் என் ஆசை."



CRISIL FA+




ட்வெண்டி :.பர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீஸஸ் லிமிடெட்

"ஸ்ரீவித்யா" 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018. போன் : 4994821.

அடையாறு – போன் : 4918669, பம்பாய் – போன் : 2006811,

ஹைதராபாத் – போன் : 319371, கோயம்புத்தூர் – போன் : 213673,

மதுரை – போன் : 30481, கும்பகோணம் – போன் : 24487, பெங்களூர் – போன் : 3320777, நெல்லூர் – போன் : 31289.



21st Century's

"Family-Deposit"

அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் இருப்பிடம் உங்கள் குடும்பம். தேவை ஏற்படும் போதெல்லாம் அவை உங்களுக்கு ஆதரவாய் உள்ளன.

இப்போது, உள்ளார்ந்த நன்றியுடன் அடையாளமாய் 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" டை உங்கள் குடும்பத்திற்கு வழங்குங்கள். அது, எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கத் தகுந்த ஒரு செல்வக் களஞ்சியம். நான்கே ஆண்டுகளில் ரூ. 50 கோடியை எட்டியுள்ள புகழ்மிக்க நிதியீட்டு நிறுவனம், இத்திட்டத்தை வழங்குகிறது.

CRISIL FA+ ரேட்டிங் பெற்றிருக்கும், 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" – உங்கள் குடும்பத்தினர் மீது நீங்கள் கொண்டிருக்கும் ஆழமான அன்பின் வெளிப்பாடு. அதனை இன்றே அவர்களுக்கு வழங்குங்கள்

உங்கள் "ஃபேமிலி டெபாஸிட்" பற்றி மேலும் அறிய விரும்புகிறேன்.

பெயர் : ....

விலாசம் : ....

....

போன் : ....

ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்,
'ஸ்ரீநித்யா', 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.

This advt. appears further to the statutory advt. published by the company in Makkal Kural and Trinity Mirror on 29th August and 18th November 1996. The text of the statutory advt. is also printed on the application form, which may be referred to before investing in the company's Deposit Schemes.

ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம் 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி' குடும்பம்

100 ஆண்டுகளுக்கு முன்...



அண்மையில் பிரிட்டிஷ் ஹை கமிஷனும் ஸ்டாண்டர்ட் சார்டர்ட் வங்கியும் இணைந்து ஒரு புகைப்பட கண்காட்சி நடத்தியது. 1850- 1900 ஆண்டுகளில் இந்தியாவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் கண்காட்சி அது. அதிலிருந்து இரண்டு புகைப்படங்கள். ஒன்று, 1869-ல் தஞ்சாவூர் அரண்மனை வீதிகளில் ஒன்றின் காட்சி. இரண்டாவது, 1870-ல் சென்னைக்கருகே நடந்த மண்பாண்ட வியாபாரம்...



தேவை - ஒரு அறிஞர் குழு!

ஊரைக் கலக்கிக் கொண்டிருக்கிறது ஹவாலா. கட்சி வேறுபாடு இல்லாமல் அநேக அரசியல் புள்ளிகள் சிக்கிக் கொண்டு விழிக்கிறார்கள். அவசர அவசரமாகப் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, அடுத்த நடவடிக்கைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால் இன்று திடீரென்று கிளம்பியதல்ல இந்த ஹவாலா பூதம்...

அறுபத்து நான்கு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்ததாகக் கணக்குச் சொல்லும் அந்த ஜெயின் டைரி 1991லேயே சி.பி.ஐ.க்குக் கிடைத்து விட்டது.

அப்போதே வெடித்திருக்க வேண்டிய விஷயம்தான் இது. சி.பி.ஐ.க்கு மட்டுமல்ல; நடைமுறை வழக்கத்தால், பிரதமருக்கும் அப்போதே இது தெரிந்திருக்கும். தமக்குக் கீழ் இயங்கும் சி.பி.ஐ.யிடம் கிடைத்திருக்கும் ஒரு முக்கிய ஆவணத்தை, அதிகார பூர்வமாகவே பிரதமர் வாங்கி, படித்துப் பார்க்க முடியும். சட்டப்படியே அதற்கு அதிகாரம் உண்டு. ஆனால் பிரதமருக்கு மட்டுமே இந்த வசதி என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இதர அமைச்சர்களுக்கோ, எம்.பி.க்கோ, எதிர் கட்சித் தலைவர்களுக்கோ இது சாத்தியமில்லை. நம் அரசியல் அமைப்பு அதற்கு இடம் தரவில்லை. பொது நல நோக்கில் இது மிகப் பெரிய குறை. எப்படி?



• டாக்டர் அழகப்ப செட்டியார்

• பிடி. ராஜன்



பிரதமர் என்பவர், நாட்டை ஆள்பவர் என்பதைத் தவிர, ஒரு கட்சியின் முக்கியப் பிரதிநிதியும் கூட அல்லவா? பிரதமராக, தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ரகசிய ஆவணங்களை அவர் பார்க்கிற போது, கட்சிக் கண்ணோட்டத்திலும் அது விமர்சனத்துக்குள்ளாக நேரும். இதனால் கூச்சலும் குழப்பமும் நாடெங்கும் எழுமே தவிர, உருப்படியாக ஏதும் நன்மை நடக்காது!

ஆனால் ஆட்சியின் செயல்பாட்டைக் கூர்ந்து கவனித்து, தட்டிக்கேட்பதற்கு மட்டுமின்றி, முன் சொன்னது போன்ற முக்கிய ஆவணங்களை நிபந்தனைகளின்றிப் படித்துப் பார்த்து, கருத்துத் தெரிவிக்கவும் ஏன் கட்சி அரசியல் சார்பற்ற ஒரு குழு அமைக்கப்படக் கூடாது?

சட்டசபையில் கேள்வி கேட்க, எதிர்க் கட்சியினர் இருந்தாலும் அவர்களின் குரல்– அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியின் குரல் தானே தவிர நடுநிலையான பார்வை என்று சொல்ல முடியாது. மேலும், ஆளுங்கட்சியின் குற்றம் குறைகளைத்தேடி விமர்சிப்பதுதான் அவர்களது தலையாய பணியாக இருக்குமே தவிர, ஆக்க பூர்வமாக ஏதும் செய்ய இயலாது.

இந்நிலையில் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட, அதே சமயம் பொது மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருக்கும் முக்கிய நபர்கள் சிலரை ஒருங்கிணைத்து, ஒரு குழுவாக அமைத்து, அந்தக் குழுவுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் தரப்பட வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் கணக்கு வழக்குகளைக் கவனிக்க, அக்கௌண்டண்ட் இருப்பார்; அக்கௌண்டண்ட் ஒழுங்காகப் பணியாற்றியிருக்கிறாரா என்பதை ஆடிட்டர்தானே வந்து சரி பார்ப்பார்? அது போலத்தான்.

பாருங்கள். ஹவாலா வழக்கில் என்ன ஆயிற்று? நான்கு வருடங்களாகக் கிடப்பில் போட்டிருந்த கேஸ் மீது சுப்ரீம் கோர்ட் பார்வை பட்டு, உத்தரவிட்டதனால்தான் வழக்கு சூடு பிடித்திருக்கிறது.

ஒவ்வொரு விஷயமும் சுப்ரீம் கோர்ட் தலையிட்டால்தான் நடக்கும் என்றால் எதுவுமே நடக்காது. அதற்காகத்தான் கட்சி சார்பற்ற அறிஞர் குழு அமைக்கப்பட வேண்டும் என்கிறேன்.

போலீஸ் துறையை சீரமைக்கவே, தேசிய போலீஸ் கமிஷன் இப்படி ஒரு அமைப்பைத் தான் சிபாரிசு செய்திருக்கிறது!

சி.வி. நரசிம்மன்

ஆனால் எங்கும் எதிலும் அரசியல் புகுந்து எழும் இன்றைய சூழ்நிலையில்' இம்மாதிரி கண்காணிப்புப் பணிக்கு ஏற்ற, கட்சி சார்பற்ற தலைவர்கள், பிரமுகர்கள் யாரும் இருக்கிறார்களா என்று கேட்கத் தோன்றும்!

என் பணிக்காலத்தில் அப்படிப்பட்ட தன்னலமற்ற, பொது நலம் விரும்பிய. அரசியலுக்கு அப்பாற்பட்ட சில மனிதர்களைச் சந்திக்கும் வாயபபு எனக்குக் கிடைத்தது!

மதுரையில் நான் ராமநாதபுரம் எஸ்.பி.யாக இருந்த காலத்தில் தான் பி.டி.ராஜன் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. 1930களில் ஜஸ்டிஸ் பார்ட்டியில் முக்கிய அங்கத்தினராக இருந்தவர் என்றாலும், சுதந்தரத்துக்குப் பிறகு அரசியலிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கி விட்டவர்.

அரசியலிலிருந்து ஒதுங்கினாலும் மக்கள் பணியிலிருந்து அவர் கடைசிவரை ஒதுங்கவில்லை! இதனால் ஓர் அரசியல் தலைவரை விடவும் பி.டி.ஆருக்கு அப்போது மதுரையில் செல்வாக்கு அதிகமாக இருந்தது! மதுரையில் எந்த ஒரு நிகழ்ச்சியோ, விழாவோ எனில் அதற்கு பி.டி.ஆர் தான் முன்னிலை வகிப்பார்.

காமராஜர் முதல்வராகி, முதல் முதலாக மதுரை வந்தபோது அவருக்கு மிகப் பெரியதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

கட்சிக்காரர்களோ, அரசு அதிகாரிகளோ அல்ல; மக்கள் செல்வாக்கு பெற்ற பி.டி.ஆர்.தான் அன்று அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்!

பி.டி.ஆரிடம் எனக்குப் பிடித்த ஒரு விஷயம், வயதில் மிக மூத்தவரென்றாலும், எந்த ஒரு விஷயத்தையும் இளைஞர்களுடன் கலந்து பேசி, அவர்களின் கருத்துக்களையும் அறிய விரும்புவார்.

ஆட்சி மொழிக் கொள்கை பற்றி ஆராய, மத்திய அரசு ஒரு கமிஷன் அமைத்திருந்த நேரம்.

இவ்விஷயத்தில் பி.டி.ஆரின் கருத்தைக் கேட்டு அக்கமிஷன் ஒரு Questionnaire அனுப்பி இருந்தது.

ஆனால் பி.டி.ஆர். என்ன செய்தார் தெரியுமா?

அப்போதுதான் மதுரைக்கு பணிமாற்றலாகி வந்திருந்த, வயதாலும் அனுபவத்தாலும் மிகவும் குறைந்த என்னிடம் அதைக் கொடுத்து என் கருத்து என்ன என்று கேட்டார்! அதன் பின் இருவர் கருத்தையும் சேர்த்து ஆராய்ந்து, விவாதித்த பின்னரே தம் விளக்கமான பதிலை அரசுக்கு அனுப்பி வைத்தார்!

காரைக்குடி டாக்டர் அழகப்ப செட்டியார் கல்வித் துறைக்கு ஆற்றியிருக்கும் பணிகள் மகத்தானவை. ராமநாதபுரம் எஸ்.பி.யாக இருந்தபோது தான் இவரையும் எனக்கு சந்திக்கக் கிடைத்தது. 'ரதமர் நேரு வரைக்கும் இவருக்குத் தெரியாத அரசியல் பிரமுகர்கள் இல்லை. ஆனால் அவர் அரசியலில் என்றும் ஈடுபட்டதில்லை.

இலக்கியம் தெரிந்தவர், தத்துவம் புரிந்தவர்– அவரோடு உட்கார்ந்து மணிக்கணக்காகப் பேசி இருக்கிறேன்! பொதுக் காரியங்கள் என்றால் வெல்லம் அவருக்கு!

இவரைப் போலவே ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்த ரா.கிருஷ்ணசாமி நாயுடுவும் ராஜபாளையம் ஏ.கே.டி.ரங்கசாமிராஜாவும்.

துளிக் கூட பதவி மோகம் இல்லாதவர்கள். கிராம விவசாயிகளின் மேம்பாட்டுக்காகவே உழைத்தவர்கள். விவசாய கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, விவசாயிகளின் நலன் மேம்பட பாடுபட்டவர்கள்.

இவர்கள் இருவரும் காங்கிரஸ்காரர்கள் தான். ஆனால் கடைசிவரை அரசுப் பணிகளின் பக்கம் வரவே இல்லை– வாய்ப்பும் வசதியும் இருந்தும் கூட!

– அடுத்த வாரம்

'சுருக் – நறுக்' போட்டி – 13 முடிவு...

சுற்றம் என்பது...

(ஒவ்வொரு சொல்லோவியமும் ரூ. 50 பரிசு பெறுகிறது)

●● ஒரு தவிர்க்க முடியாத தொல்லை.
-ருக்மணி சுவாமிநாதன், சென்னை - 61.

●● சிதறிப்போனாலும் ஒன்று சேரும் போது வடுதெரியாமல் முழுமையாகும், "பாதரச பந்தமாக" இருக்க வேண்டும்...
- வெ. சீதாராமன், சென்னை - 5

●● இலக்கிய மரபிலிருந்து, மரபு வழுவுதல் வரை எல்லாம் இருக்கும். இலக்கணத்தால் அதைக் கட்டுப்படுத்தி விட முடியாது.
- எஸ். திருமலை, கோவை - 3

●● பதமான அரிசிச் சோறு போல! கொட்டினால் தனித்தனியாக உதிர வேண்டும். பிசைந்தால், ஒன்றாகக் கூட வேண்டும்.
- டி. பத்மா, கோயம்புத்தூர் -9.

●● ஆதாரம் சேதாரம் இரண்டையும் உள்ளடக்கியது.
- பி. ரங்கசாமி, தருமபுரி -3.



வானத்தில் வாலசைத்த வர்ணஜாலம்!

ஒரே கயிற்றில், எறும்பு ஊர்வது போல ஏராளமான காற்றாடிகள். மெரினா காற்றில், ஆகாயத்தில் அசைந்தாடியபோது, ஆறுமுதல் அறுபதுவரை அதிசயித்துப்போனது. அசந்தால், பட்டம் விடும் ஆளையே ஹைஜாக் பண்ணி விடும் போலிருந்தது, பட்டச் சங்கிலி! பெயர் 'ரயில் காற்றாடி' என்றார்கள்!

காகத்தைப் போலவே ஒரு பட்டம்- நிறம், உருவம், காற்றில் படபடப்பு. நிஜக் காக்கை தோற்றது போங்கள்! கறுப்பு மீன் (பட்டம்) நீருக்கு பதில் நீல ஆகாயத்தில் நீந்தியது.

எட்டடிக்கு எட்டடியில், கிருஷ்ணர் கோபி கைகளுடன் இருக்கும் வண்ண ஓவியம். தரையில் ஓவியத்தை விரித்து, அங்கும் இங்கும் மெல்லிய குழாய்களைப் பொறுத்தி, கயிற்றுடன் இணைக்க அடுத்த இரண்டாவது நிமிடம், கிருஷ்ணரும், கோபிகைகளும் வானில் பறந்தனர்!

இவையெல்லாம் சென்னை மெரினாவில் சில தினங்களுக்கு முன் நடந்த காற்றாடித் திருவிழாவில் விடப்பட்ட பட்டங்கள்.

ஒரு பட்டத்துக்கு நூறு அடி நீள வால். அதனை மெரினா காற்று அலைக் கழித்த போது, ஒரு கலர்ஃபுல் மெகா பாம்பு வானில் சரசரப்பது போல இருந்தது. இன்னொரு பட்டத்துக்கு ஐம்பது வால்கள்!

ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஐந்து பட்டங்களை ஐந்து பேர் தயாராய்ப் பிடித்துக் கொண்டு நிற்க, 'ஜூட்' சொன்னவுடன், 'விங்'கென்று விண்ணில் ஐந்து வண்ணங்களில் ஒரே சமயத்தில் அவை பறந்தது தூள்!

உலக அமைதியைக் குறிக்கோளாய்க் கொண்ட பிரம்ம குமாரிகள் அமைப்புக்கு இது வைரவிழா ஆண்டு. அமைதி, நேர்மை, உண்மை போன்ற ஒரு டஜன் நற்பண்புகளை மக்களிடையே வளர்க்க 'ராஜ யோகா' சொல்லித் தருகிறார்கள். இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத்தான் இந்த காற்றாடித் திருவிழா.

அகமதாபாதிலிருந்து வந்திருந்தது உலகப் புகழ்பெற்ற காற்றாடி எக்ஸ்பர்ட் 'பானுஜா'வின் குடும்பம். அவரும், அவருடைய இரு மகன்களும் ஒரு மருமகளுமாய் வானில் வர்ண ஜாலம் நடத்தினார்கள். சுமார் இருநூறு வித்தியாசமான பட்டங்களைக் கையோடு கொண்டு வந்திருந்தார்கள். மெல்லிய நைலான் துணி, லேசான உலோகக் குழாய், கயிறு- இவை மட்டும் சுமார் நூறு கிலோ எடையாம்! பட்டத் துணிகளை விரித்து, கம்பிகளை பொறுத்தி, கயிற்றை இணைத்து நிமிஷத்தில் பட்டம் 'தயார் செய்து' பறக்க விடுவது தனிக்கலை.

உலக அளவில் பல காற்றாடித் திருவிழாக்களில் கலந்து கொண்ட அனுபவசாலியாம் பானுஷா. அகமதாபாத்தில் இவர் ஒரு காற்றாடி மியூஸியம் வைத்திருக்கிறாராம். பானுஷாவுடன் ஒரு கேள்வி : "காற்றாடிக்கு சைஸ், எடை என எதுவுமே பொருட்டில்லையா?"

அவரது பதில் : காற்றுதான் முக்கியம். மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம்தான்.

மொத்தத்தில் சென்னை வாசிகளுக்கு ஒரு கலர் ஃபுல் ஞாயிற்றுக் கிழமை!

- புரிந்து கொண்டது : காற்றாடி விடுவது விளையாட்டான சமாசாரமல்ல!
- காதில் விழுந்தது : "பார்த்தியா? நேர்மை, உண்மை எல்லாம் காற்றில் பறக்குது!"

"அப்படியில்லைங்க! நேர்மை, உண்மை, பொறுமை போன்ற நற்பண்புகளை வாழ்வில் கடைப் பிடித்தால் வாழ்வில் உயரே போகலாம்! அதற்கு எங்கள் (பிரம்மகுமாரிகள்) ராஜ யோகம் உதவும்."

- கிசுகிசுக்கப்பட்டது : போலீஸ் தரப்பில் காற்றாடித் திருவிழாவுக்கு பர்மிஷன் வழங்கும் போது, 'ஏற்கெனவே வடக்கேயிருந்து இறக்குமதியான விநாயகர் ஊர்வலத்தால் இங்கே பிரச்னை. இப்போ காற்றாடித் திருவிழாவா!" என்று முணுமுணுப்பு எழுந்தது.

- மானஸா

படம் : யோகா

எம்.டி. வாசுதேவன் நாயர்



தமது இலக்கிய சேவைக்காக, கடந்த (1995) ஆண்டின் ஞானபீட விருதைப் பெற்றிருப்பவர், மலையாள எழுத் தாளரும் மாத்ருபூமி (வார இதழ்) ஆசிரியருமான எம்.டி. வாசுதேவன் நாயர். இவரது 'இருண்ட உள்ளம்' என்னும் (நீண்ட) சிறுகதையின் மூன்றாம் பகுதி தான் இது. என்றாலும் முழுமையான கதையை உணர முடியும் என்பதால் பிரசுரித்திருக் கிறோம். இந்தக் கதையை வாசகர் தேர்வுக்கான சிறுகதைகளோடு சேர்க்க வேண்டாமென்றும் வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்
— ஆர்.

வேலாயுதன் ஓர் உடைந்த சட்டித் துண்டை எடுத்து, தரையில் ஏணிப்படியின் படம் வரைந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவன் கண்களிலிருந்து இருள் மெதுவாக விலகிக் கொண்டிருந்தது.

'எங்கே இருக்கிறேன்?'

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். சாதாரணமாக யாரும் வராத பின்கட்டு. அவன் எழுந்து நின்றான். தலைமீது ஏதோ பாரம் அழுத்துவதுபோல் இருந்தது. அவன் கால்கள் தள்ளாடின. காலை அசைத்த போது சங்கிலி ஒலித்தது. அவன் காலைச் சுற்றிச் சங்கிலியால் கட்டியிருந்தார்கள். அவன் குனிந்து அதைப் பார்த்தான். சுவரில் ஓட்டை செய்து சங்கிலியை அதில் பிணைத்திருந்தார்கள். சங்கிலி உராய்ந்து உராய்ந்து கணுக்காலில் தோல் உரிந்திருந்தது. யார் அவனைச் சங்கிலியால் கட்டிப் போட்டது?

அவன் எப்போது இந்தத் தாழ்வாரத்திற்கு வந்தான்? யாராவது விளையாட்டிற்கு இப்படிச் செய்திருப்பார்களோ?

'தரையெல்லாம் மண்ணும் சேறுமாக அல்லவா இருக்கிறது? ஐய்யே, சுற்றிலும் ஒரே அசிங்கம்!'

வேலாயுதன் யோசித்துப் பார்த்தான். ஒன்றுமே தெளிவாக விளங்கவில்லை. மூடுபனியில் வரும் தெளிவற்ற உருவங்கள் போலிருந்தன, அந்தக் கடந்தகால நிகழ்ச்சிகள்! ஒரு கேள்வி மட்டும் மீண்டும் மீண்டும் எழுந்தது: மனிதர்களை யாராவது நாய்களைப் போலச் சங்கிலியிட்டுக் கட்டி வைத்திருப்பார்களா?

அவனுக்கு உடல்நிலை கெட்டிருந்த நேரம், அதனால் அவனை இங்கே கொண்டு வந்து போட்டிருப்பார்களோ? ஆனால் எதற்காக சங்கிலியிட்டுப் பிணைக்க வேண்டும், நாயைப் போல?

அடுக்களையிலிருந்து பாத்திரங்கள் ஓசை கேட்டது. யாராவது வெளியே வந்தால்... 'எனக்கு இப்போது உடம்புக்கு ஒன்றும் இல்லை... இந்தச் சங்கிலியை அவிழ்த்து விடுங்கள்' என்று சொல்லலாம்.

'எங்காவது மனிதர்களைச் சங்கிலியிட்டுக் கட்டுவதுண்டா?'

அடுக்களைக் கிணற்றை நோக்கியுள்ள ஜன்னல் திறக்கும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து தண்ணீர் இழுக்கும் சப்தம்.

"பெரியம்மா... பெரியம்மா..."

பதிலில்லை.

'வேறு யாரைக் கூப்பிடலாம்? இவர்கள் எல்லாம் என்ன மனிதர்கள்? எனக்கு இப்போது உடம்புக்கு ஒன்றும் இல்லை.'

மண் படிந்து கிடக்கும் தனது உடம்பைப் பார்த்த போது அவ

இருண்ட உள்ளம்

னுக்கே அருவருப்பு உண்டாயிற்று. இன்னொருதரம் பார்க்கையில் வெட்கமே வந்து விட்டது. இடுப்பில் துணி இல்லை. யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்? யார் கண்ணிலும் படக்கூடாதே! எவ்வளவு பெரியவன்! கறுத்த தாடி கழுத்தை மூடி வளர்ந்திருக்கிறது. அத்தனை வயதான ஒருவன் இடுப்பில் துணி இல்லாமல் நிற்பதென்றால்...' சேசே!

வேலாயுதன் குனிந்து முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தான். 'ஒரு வேட்டி வேண்டும்'. யாரைக் கூப்பிடலாம்? பெரியம்மாவைக் கூப்பிட்டால் பிரயோஜனமில்லை. கோபியைக் கூப்பிட்டான். திரும்பத் திரும்ப உரக்கக் கூப்பிட்டான்.

'வேட்டி உடுத்திக் கொள்ளுமுன் இங்கு யாரும் வரக் கூடாதே!'

யாரோ தாழ்வாரத்துக்கு எதிரில் வந்து கேட்டார்கள் : "என்ன?"

"இங்கே வராதே... இங்கே வராதே... கோபி எங்கே?"

"நான்தான் கோபி. உனக்கு என்ன வேணும்?"

நீலக்கால் சராயும் ஷர்ட்டும் அணிந்திருந்தான் கோபி. அவன் பெரியவனாகி விட்டான். சமர்த்துப் பிள்ளை!

"ஏன் சும்மா கூப்பிடறே?"

"எனக்கு ஒரு வேட்டி கொண்டு வந்து கொடு."

"கிழிக்கப் போடத்தானே?... ஊஹூம்!"

"கிழிக்க மாட்டேண்டா கோபி. வேட்டி சீக்கிரம் கொண்டு வாடா, யாராவது வரதுக்கு முந்தி."

கோபிக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை.

"நல்ல பிள்ளையாச்சே. போடா, சீக்கிரம் கொண்டு வாடா."

கோபி திரும்பிப் போய் ஒரு வெள்ளை வேட்டியுடன் வந்தான். வேலாயுதனுக்குப் பரம சந்தோஷம்.

"நல்ல வேட்டி."



"கிழிச்சுடுவியா?"

"எதுக்குக் கிழிக்கிறேன்?"

"கோபி, அதை இப்படிச் சீக்கிரம் கொடு... யாராவது என்னைப் பார்த்தால்...?"

கோபி அதை வீசி எறிந்தான்.

வேட்டி உடுத்திக் கொண்டபின்தான் வேலாயுதனுக்கு நிம்மதியாயிற்று. இனிமேல் யாராவது இந்தப் பக்கம் வந்தாலும் பரவாயில்லை.

"யாரடா என் காலில் சங்கிலி மாட்டியது?"

கோபி அதற்குப் பதில் சொல்லவில்லை.

"இதை அவிழ்த்து விடச் சொல்லேன்!"

அதைக் கேட்ட கோபி மெதுவாகச் சிரித்தான்.

"அவிழ்த்து விடுடா... என்னடா, நான் என்ன நாயா?"

கோபி வந்த வழியே திரும்பி விட்டான்.

அவன் பாட்டியைக் கூப்பிட்டான். பெரியம்மாவைக் கூப்பிட்டான். ஒருவராவது வரவில்லை.

ஏதோ ஒரு செருப்புச் சப்தம் கேட்டது; சற்று நேரத்தில் தாழ்வாரத்தின் எதிரில் மாமா வந்து நின்றார்.



வேலாயு
தன் மரியாதை
யாக எழுந்து நின்றான். மாமா
முன்னால் மருமகன் உட்காரலாமா?"

"என்னடா?"

அவன் ஒன்றுமே பதில் சொல்ல வில்லை.

"உம்... என்ன வேணும் உனக்கு?"

"இதை அவிழ்த்துவிட்டா..."

"இன்னமும் யார் மேலேயாவது பாயறதுக்கா?"

"எதுக்காக என்னைச் சங்கிலியாலே கட்டியிருக்காங்க?"

"நீ கொழுப்புக் காட்டறயே அதுக்காகத் தான். உன் ...த்தியம் தெளியுதான்னு நான் பார்க்கறேன்..."- அதோடு மாமா திரும்பிப் போய் விட்டார்.

வேலாயுதன் யோசித்துப் பார்த்தான் : 'என்ன கொழுப்புக் காட்டினேன்? உடம்பு சுக மில்லாதிருந்தது... இப்போ... இப்போ ஒன்று மில்லை... ஒன்றுமில்லை...'

'எனக்கு உடம்புக்கொன்று மில்லை... எனக்குப் பைத்திய மில்லை' என்று உரக்கச் சப்த மிட்டுச் சொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

யாரும் இதை அவிழ்க்க வர மாட்டார் களா? அழுகை தொண்டையிலிருந்து வெடித்து வரும்போல் இருந்தது.

உதட்டைக் கடித்து, அழுகையை அடக்கிக் கொண்டு, அவன் ஒவ்வொன்றாக ஞாபகப் படுத்திக் கொள்ள முயன்றான்.

எல்லோரும் 'அவனுக்கு உடம்பு சரியாக இல்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார் கள்.

'எனக்கு இப்போது உடம்புக்கு ஒன்று மில்லை. ஒன்றுமில்லை... என்னை விடுவியுங் கள்...'

செல்லரித்துப் போன பழைய மரத்தூண் மீது சாய்ந்தபடி, அவன் உட்கார்ந்தான். ஓ! சற்று முன்னால் அவன் இடுப்பில் துணியில் லாமல்... யாரெல்லாம் பார்த்திருப்பார்கள்? அம்முக்குட்டி இந்த வழியே வந்திருப்பாளோ?

'அம்முக்குட்டி...'

அம்முக்குட்டியை ஒரு தடவை பார்க்க முடிந்தால்...

அவளைக் கண்டால், அவளுக்கு அவன் மேல் வெறுப்புத் தோன்றுமோ? உடம்பெல் லாம் ஒரே மண்! முகத்தைக் கண்ணாடியில் பார்க்க ஏதாவது வழியுண்டா? முகத்தில் ரோமம் எப்படி வளர்ந்துள்ளது! சடைபிடித்த தலையைச் சொறிந்த போது நாலாபக்கமும் மண்ணும் பொடியும் உதிர்ந்தன.

அம்முக்குட்டியின் உடம்பில் அழுக்கே இருக்காது. அவளுக்குப் பக்கத்தில் நின்றாலே போதும். தாழம்பூவினுடைய நறுமணம் கம் மென்று மூக்கைத் துளைக்கும்.

அவள் இப்போது அவனைப் பார்த்தால்...

அம்முக்குட்டியைப் பற்றி எண்ணிப் பார்த்த போது மிக மிக இரகசியமான ஒரு சங்கதி அவன் நினைவிற்கு வந்தது. யாருக் குமே தெரியாத இரகசியம். அவன் அதை யாரி டமும் சொல்ல மாட்டான். தோட்டத்து மூலையிலிருக்கும் குளத்தின் பக்கத்தில், மாமரத்தின் கீழ் காற்றில் மாம்பழம் விழுவதை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும்போது..

அவன் அவளுடைய கன்னத்தை ஒரு கடி கடித்தான். கோபம் வந்த அம்முக்குட்டி அவ னைப் பிராண்டினாள், கிள்ளினாள், வேண் டியமட்டும் அடித்தாள்.

அன்று அவர்கள் இருவரும் குழந்தைகள். இன்றோ எவ்வளவு பெரியவர்கள்!

அதற்கப்புறம் என்னவெல்லாம் நடந்தது! எல்லாம் தெளிவாயில்லை. அடைத்துக் கிடக் கின்ற ஒரு கதவு. ஓலைத் தட்டியால் மூடப் பட்ட ஒரு ஜன்னல். இருள்சூழ்ந்த அந்த அறை யில் என்னவெல்லாம் நிகழ்ந்தது? இந்தச் சங் கிலி எப்போது அவன் காலில் கட்டப்பட்டது?

'குட்டியண்ணா! உன் உடம்பு குணமாகும்...' - மெல்லிய குரலில் அவள் சொன்ன இந் தச் சொற்கள் மட்டும் அவனுள்ளத்தில் ஒலித் துக் கொண்டிருந்தன!

அவனுக்கு உடம்பு சரியில்லாதிருந்த போது அவர்கள் சொன்னது, எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தது— பகவதீ, உண்மை தானா?

கால் மூட்டுகளுக்கிடையில் தலையைப் புதைத்துக் கொண்டு அவன் அழுதான். கண் ணீர் விழுந்தபோது, சங்கிலி உராய்ந்ததனால் தோல் உரிந்த இடத்தில் எரிந்தது.

இருப்பினும் அவனுக்கு ஆறுதல். இப் போது எல்லாம் குணமாயிற்றே!

'எனக்கு உடம்புக்கொன்றுமில்லை. எனக்கு எந்த வியாதியுமில்லை.'

அவன் உரக்கச் சப்தமிட்டான் : "என்னை விடுவியுங்கள்... என்னை விடுவியுங்கள்..."

யாருமே வரவில்லை. யார் காதிலுமே விழ வில்லையோ? மனிதர்களை எங்காவது சங்கிலி யால் பிணைப்பதுண்டா? அவன் என்ன நாயா? "என்னை விடுவியுங்கள்... என்னை விடு விக்கக் கூடாதா?...."

அவன் தாழ்வாரத்தின் மறுபுறத்தை ஆவலு டன் எட்டிப் பார்த்தான்.

சுவருக்கு வெளியே யாரோ தலையை

மங்கையர் மலர்

பிப்ரவரி '96 ஆண்டு மலர்

மாறி வரும் பெண்கள் சிறப்பிதழ்

- நிறமற்ற பெண் - நெடுங்கதை
  - *உஷா சுப்ரமண்யன்*
- இனி அம்மா அன்பை சோற்றிலே தேடாதே!
  - *பாலகுமாரன்*
- பவர் டிரில்லரும் ஓட்டுவோம்!
  - *விமலாரமணி*
- யாதுமாகி நின்றாய் காளி!
- கண்ணாடி கூரைகீழ் வாழும் இன்றைய பெண்கள்
  - *அனிதாரத்னம்*
- சரியாகத்தான் போகிறோமா?
  - *துணைவேந்தருடன் கலந்துரையாடல்*

மற்றும் ஏராளமான சிறப்பம்சங்கள்

அதிக பக்கங்கள்



நீட்டினார்கள். குட்டிச்சங்கரனாக இருக்குமோ? ஆம், குட்டிச் சங்கரனேதான்!

"குட்டிச் சங்கரா?..."

குட்டிச் சங்கரன் சுவரின் மறைவிலிருந்து வெளியே வந்தான்.

"குட்டிச் சங்கரா? இங்கே வாயேன்."

அவன் முடியாது என்று தலையை அசைத்தான்.

"கிட்ட வா, ஒண்ணு கேக்கணும்."

"எதுக்கு, என்னை அடிக்கவா?"

"இல்லை. நான் அடிக்க மாட்டேன்!" - வேலாயுதனின் குரல் தடுமாறியது.

குட்டிச் சங்கரனுக்கு இன்னும் தயக்கம்தான்.

"நான் ஒண்ணும் செய்யமாட்டேன்."

குட்டிச் சங்கரன் பயந்து பயந்து இன்னும் சற்று அருகில் வந்தான். "இங்கே வரப்படாதுன்னு சொல்லியிருக்கா."

"யாரு?"

"அப்பா?"

"என் காலிலே சங்கிலியிட்டது யாரு?"

பயத்துடன் நடுங்கியவாறு நின்று கொண்டிருந்த குட்டிச் சங்கரனை வேலாயுதன் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான்.

"யார்?"

"அப்பா சொல்லிக் கருமான் கொண்டு வந்து..."

"இதைக் கொஞ்சம் அவிழ்த்து விடறயா?"

"ஐயோ, நான் மாட்டேன்."

"எனக்கு ஒண்ணுமில்லையடா, இதை அவிழ்த்து விடடா!"

"ஊஹூம். நான் மாட்டவே மாட்டேன். உனக்குப் பைத்தியம்."

"பொங்கும் அழுகையை. அடக்கிக் கொண்டு வேலாயுதன் சொன்னான் : "இல்லை... எனக்குப் பைத்தியமில்லை... குட்டிச் சங்கரா எனக்கு..."

வேறு யார் அவிழ்த்து விடுவார்கள்? பாட்டி அவிழ்த்து விடுவாள். இல்லாவிட்டால் அம்முக்குட்டி நிச்சயமாகச் செய்வாள்.

"குட்டிச் சங்கரா! பாட்டியைக் கூப்பிடறியா?"

குட்டிச் சங்கரன் கைகொட்டி உரக்கச் சிரித்தான்.

"கொஞ்சம் கூப்பிடேன்..."

"உனக்குச் சரியான பைத்தியம்! பாட்டி எப்பவோ செத்துப் போயாச்சே!"

அதைக் கேட்டதும் வேலாயுதன் முற்றிலும் சோர்ந்து போனான். பாட்டி இறந்த துக்கத்தை விட அவனைத் துயரத்தில் ஆழ்த்தியது வேறோர் எண்ணம்தான்; இருட்டில் அவனை அறியாமல் என்னென்ன சம்பவங்கள் நடந்தன! எத்தனை நாட்கள்? எத்தனை மாதங்கள்?

சங்கிலி மீண்டும் ஒலித்தது.

யார் இதை அவிழ்த்து விடுவார்கள். யாருமே கேட்க மாட்டார்கள்... அவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு குட்டிச்சங்கரனிடம் சொன்னான் :

"குட்டிச் சங்கரா! உங்க அக்காவை இரகசியமாகக் கூப்பிடேன்?"

அம்முக்குட்டியிடம் தனக்கு இப்போது வியாதி ஏதும் இல்லையென்று சொன்னால் அம்முக்குட்டிக்குப் புரியும்.

"அக்காவும், அம்மாவும் பொறந்த வீட்டுக்குப் போயிருக்காங்க" என்று சொல்லும் போது குட்டிச் சங்கரன் முகத்தில் பரிகாசத்தை விட பரிதாபம்தான் அதிகமாக இருந்தது.

"என்னிக்கு போனா?"

"ரொம்ப நாளாச்சு, நானும் போயிருந்தேன். நேத்திக்குத்தான் அப்பாவோட திரும்பி வந்தேன்."

"எப்ப வருவா?"

"இனிமே இப்போ ஒண்ணும் வர மாட்டா?"

"ஏன்?"

"அடுத்த மாசம் அக்காவுக்குக் கல்யாணம்!"

அதற்குப் பின் வேலாயுதன் அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவனுக்கு ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை...

உடம்பு சரியாக இருக்கவில்லை... மூடின கதவு... ஓலைத் தட்டியால் மறைக்கப்பட்ட ஒரு ஜன்னல். மயிர் நிறைந்த ஒரு தடித்த கை...

'குட்டியண்ணா உன் வியாதி குணமாகும்.'

'இப்போது அவளைப் பார்க்க முடிந்தால்... அம்முக்குட்டி! எனக்கு இப்போது உடம்புக்கு ஒன்றும் இல்லை... அவளைப் பார்க்க முடிந்தால்...'

வீட்டுக்குள்ளேயிருந்து கூச்சல் கேட்டது. பெரியம்மாவின் குரலை அவன் தெரிந்து கொண்டான். அவள் கோபியைக் கடிந்து கொண்டிருந்தாள் :

"ஏண்டா அந்த வேட்டி கிழிச்சுப் போட றதுக்கா என்ன? அத்தனை நல்ல வேட்டியை ஏண்டா எடுத்துக் கொடுத்தே?"

"அதுதான் கெடச்சது அம்மா."

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. இப்போ பைத்தியம் வேலாயுதனுக்கு அல்ல; உனக்குத்தான்."

'பெரியம்மா! எனக்குப் பைத்தியமில்லை' என்று வேலாயுதனுக்குக் கத்திச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

வாழைத் தோட்டத்திற்குள் இருட்டு புகுந்து கொண்டிருந்தது. அரிவாளுடன் யாரோ ஒருவன் வாழை மரங்களுக்கிடையே நடந்து கொண்டிருந்தான். அரிவாள் மட்டும்தான் தெரிந்தது.

அரிவாள் ஒரு வாழைப் பூவை அறுத்துக் கீழே தள்ளியதை அவன் கண்டான். வாழைப் பூவிலிருக்கும் தேனின் சுவையை அவன் நினைத்துக் கொண்டான். அம்முக்குட்டிக்குத் தேன் பிடிக்காது. அவளுக்கு வாழைப் பூவிற்குள்ளிருக்கும் பூத்தண்டு போதும். பக்கத்து வீட்டு ஜானுவிற்கும் பூத்தண்டுதான் பிடிக்கும். வாழைப்பூ கிடைத்தால் அவர்கள் இருவருக்கும் சண்டை மூளும் –

'பூவா, தலையா, பார்க்கலாம்.'

'நான் போடறேன்.'

'நீ வேண்டாம், குட்டியண்ணா போடட்டும்.'

> **மனைவி :** நூறு புடவைகளை ஆறு மணி நேரமாக் கலைச்சுப் போட்டு ஒரு புடவை எடுத்தேன்னு சொல்லிக் காட்றீங்களே! நீங்க மட்டும் ரொம்ப யோக்கியமா?
>
> **கணவன் :** நான் என்ன பண்ணினேன்?
>
> **மனைவி :** மூணு வருஷமா முப்பது பெண் பார்த்து சொஜ்ஜி பஜ்ஜி மொக்கிட்டுத்தானே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க!
>
> **– ஆர். திலகவதி**



ஓர் இலையைப் பறித்துக் கொண்டு வந்து கேட்பாள்!

"பூவா, தலையா?"

இலை கீழே விழும் வரை அம்முக்குட்டி கண்ணை மூடி நிற்பாள். அவள் பகவதியை வேண்டிக்கொண்டு நிற்கிறாளாம்!

இப்போது அம்முக்குட்டி அவள் வீட்டிலிருப்பாள். அவள் எதற்காக அங்கே போனாள்? குழந்தையிலிருந்து இங்கேதானே இருக்கிறாள்?

அவளுடைய வீட்டிற்குப் போகும் வழி அவனுக்கு நினைவிருக்கிறது. சின்னப் பையனாக இருந்த போது மாமியின் வீட்டுக்கு அம்மாவுடன் அவன் விருந்திற்குப் போயிருக்கிறான். வழியின் இருமருங்கிலும் எத்தனை குன்றிமணிச் செடிகள். வழியெல்லாம் குன்றிமணிகள் உதிர்ந்து கிடக்கும்.

வாய்க்கால் பக்கத்தில்தான் அவர்கள் வீடு. அந்த வீட்டில் ரஸகுண்டுகள் தொங்கும் ஓர்

அறை. அதன் சுவரில் மான் கொம்புகள் பதிக்கப்பட்டிருக்கும்.

'அம்முக்குட்டி இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்? உடம்புக்குக் குளித்து விட்டு, வடக்குத் திண்ணையில் அம்மிக்குப் பக்கத்தில் நின்று கேசத்தைக் கோதிக் கொண்டிருப்பாளோ?

'அவள் இனி வரமாட்டாளா?'

'அம்முக்குட்டியை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும். கல்யாணம் ஆன பிறகு அவள் இங்கே எங்கே வரப் போகிறாள்?... ஒரு தடவையாவது பார்க்க வேண்டும்.'

வேலாயுதன் சுவரில் முதுகைச் சொறிந்து கொண்டான். காலில் கட்டியிருந்த சங்கிலி அப்போதும் ஒலித்தது. இந்தச் சங்கிலியிடமிருந்து மட்டும் விடுதலை கிடைத்தால் தாழ்வாரத்திலிருந்து வெளியே போகலாம். அவன் சங்கிலியை இழுத்துப் பார்த்தான். கைதான் வலித்தது. இந்தச் சங்கிலியை அவிழ்க்க முடியாதோ... யாராவது அவிழ்த்துத் தர மாட்டார்களா?...

ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கட்டுவதற்காகப் பெரியம்மா அந்தப் பக்கமாகப் போனாள். வருவாள் என்ற நம்பிக்கை இல்லை தான். இருந்தாலும் கூப்பிட்டுப் பார்த்தான். அவள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

வாசலில் உட்கார்ந்து குட்டிச் சங்கரனும், கோபியும், 'நமசிவாய, நமசிவாய' என்று ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்...

உள்ளே விளக்குகள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தன. அடுக்களைக்குள்ளிருந்து பாத்திரங்களின் சப்தம் கேட்டது. 'இனி யாரும் இந்தப் பக்கம் வரமாட்டார்கள்' - இருட்டிடம் அவன் மெல்லச் சொன்னான் : "என்னை அவிழ்த்துவிடு... என்னை அவிழ்த்து விடு."

'அக்கம் பக்கத்து வீடுகளில் யாருமே இல்லையா? அவர்களில் யாராவது இந்தச் சங்கிலியை அவிழ்த்து விடக் கூடாதா?'

உரக்க அவன் சப்தமிட்டான் :

"ஐயோ அம்மா...!"

ஒரு வெளிச்சம் சற்று தூரத்திலிருந்து வருவது தெரிந்தது. கூடவே ஒரு சப்தமும் :

"வேலாயுதா!"

"என்னை விடுவியுங்கள்... என்னை விடுவியுங்கள்."

"பேசாமல் அங்கே படுத்துக்கோ. இல்லாவிட்டால் உன் எலும்பை நொறுக்கிடுவேன்."

அந்த விளக்கு மறைந்தது.

வீட்டிற்குள் சந்தடி மெல்ல மெல்ல குறைந்து வந்தது. 'கடிக்கின்ற நாய்களைச் சங்கிலியால் கட்டிப் போடுவதுண்டு. ஆனால் மனிதனை... இந்தச் சங்கிலியை அவிழ்க்க முடிந்தால்... ஒரு கண்ணி அறுந்தால் போதும். ஒரே ஒரு கண்ணி.'

பைத்தியமாம், பைத்தியம், அவர்களுக்குத் தான் பைத்தியம்! இல்லாவிட்டால் அவனை இப்படித் துன்புறுத்துவார்களா?

'எனக்குப் பைத்தியமில்லை.... எனக்குப் பைத்தியமில்லை...'

அவன் பலமுறை அந்தச் சங்கிலியை இழுத்துப் பார்த்தான்.

அசைந்தபோது சங்கிலி ஒலித்தது.

வந்த கோபத்தில் கால்களைச் சுவரின் மீது அழுத்தி ஊன்றிச் சங்கிலியைப் பலமாக இழுத்தான்.

ஒரு கண்ணி அறுந்தால் போதும்... ஒரே ஒரு கண்ணி.

ஒரு தடவைகூட...

"அம்மாாா..."

அவன் அப்படியே பின்னால் சாய்ந்து விட்டான். சங்கிலி அறுந்தது!

எழுந்திருந்த போது உடம்பெல்லாம் வலி. நொண்டிக் கொண்டே அவன் முற்றத்தில் இறங்கினான். ஒவ்வோர் அடி வைக்கும் போதும், காலில் எஞ்சியிருந்த சங்கிலிக் கண்ணிகள் ஒலி எழுப்பின.

சாத்தியிருந்த கேட்டைத் திறந்து கொண்டு அவன் வெளியே வந்தான்.

எதிரே வயல்கள். அதன் முதுகெலும்பு போல் நீண்டு கிடந்த வரப்பின் வழியாகப் போகும்போது ஒருகணம் அவன் யோசித்தான் :

"எங்கே போகிறோம்?"

எல்லாவற்றிற்கும் மேலாக அவன் உள்ளத்


"அந்தப் பல் டாக்டர் போலின்னு எப்படிச் சொல்றே?"

"பின்னே, பல்லைப் பிடுங்கிக்கப் போனா, சோப்புப் போட்டு எடுத்தா சுலபமா வந்துடும்னு சொல்றாரே!"

- ராஜாராம்



நிகழ்...



மனசின் கதவுகளைக்
கழற்றிப் போட்டிருக்கிற
தோல்விகள்...!

காற்று வலையால்
கனவு பிடிக்க முயலும்
பிரயத்தனங்கள்...!

நிழலுக்குள்
முடங்கிச் சரிகிற
நிஜங்கள்....!

கிழிசல் சட்டையின்
பொத்தான்களைப்
போல முயற்சிகள்....!

பாதி விழிப்பும்
பாதி உறக்கமும்
எனக் கழிகிற
பொழுதுகளில்

எதுவும் பட்டுவிட
முடியாத நெருப்பின்
பளபளப்பாய்
நம்பிக்கை ஆறாமல்...

- ஹரணி

தில் அந்தத் தாழ்வாரத்திலிருந்து எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றிருந்தது. காலையில் அவர்கள் கண்ணில் பட்டால் மறுபடியும் கால்களில் சங்கிலி போடுவார்கள்... எங்கானாலும் சரி, கால் போன இடத்திற்குப் போகலாம்.

காற்றில் நெற்கதிர்கள் அசையும் தாளத்திற்கேற்ப சங்கிலி ஒலித்தது. தெற்கே ஒரு நாய் ஈனக்குரலில் ஊளையிட்டது. சங்கிலியில் கட்டிப் போட்ட நாயாக இருக்கலாம்...

மங்கிய நிலவொளியில் தெரிந்து கொள்வது சுலபமாக இருந்தது.

இரவின் குளிர்ந்த அமைதியை அந்தச் சங்கிலிச் சத்தம் கலைத்தது.

வரப்பு முடியுமிடத்தில் சாலை. தாழம்பூச் செடிகளைத் தாண்டி அவன் சாலைக்கு வந்தான். ஆற்றங்கரையை ஒட்டியவாறு சாலை போகிறது.

காலையில் அவர்கள் எழுந்து பார்க்கும் போது வேலாயுதன் என்கிற நாய் சங்கிலியிலிருந்து தப்பித்து விட்டுப் போனதை அறிவார்கள். அதை நினைத்த போது அவனுக்கு உரக்கச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால், அவர்கள் தேடிப் பிடிக்க வருவார்களே! அதற்குமுன் எப்படியாவது தப்பி ஓடிவிட வேண்டும். எங்கே போவது? அவனை யாரும் நம்பமாட்டார்கள்; அவன் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள்!

அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் : "எனக்குப் பைத்தியமில்லை... எனக்கு உடம்புக்கொன்றுமில்லை."

'குட்டியண்ணா! உன் உடம்பு குணமாகும்' என்று சொன்னது அம்முக்குட்டிதான்.

'என் அன்புமிகு அம்முக்குட்டி! எனக்கு இப்போ ஒன்றுமில்லை.'

அவன் நம்புவான். அவளுக்கு மட்டும்தான் அவன் வார்த்தையில் நம்பிக்கை இருக்கும்.

பாதையில் மண் நனைந்திருந்தது: அது பனி பெய்ததனால் ஆயிருக்கலாம். அந்த வழியாக நடந்த காலம் மறந்தே போய் விட்டது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் போனது. அடைத்துக் கிடக்கும் கடைகளையும், துறைக்கடுத்துள்ள பள்ளி வாசலையும் கடந்து அவன் நடந்தான்.

பள்ளி வாசலுக்கு அடுத்தாற்போலுள்ள இடுகாட்டையும், பேய்கள் வசிப்பதாகச் சொல்லப்பட்ட ஆலமரத்தையும் கடந்து போன போது அவனுக்குத் துளியும் பயம் இருக்கவில்லை.

தலைக்கு மேல் வானம் வெளுத்துக் கொண்டே வந்தது. சாலை ஓரத்திலுள்ள சுமைதாங்கியைப் பிடித்துக் கொண்டு வேலாயுதன் சற்று நேரம் நின்றான். கீழ்வானம் சிவந்து கொண்டிருந்தது.

வயலுக்கு மேல் நீளமான மூடுபனி பரவியிருந்தது. சங்கிலி ஒலிக்க, அவன் நடந்து சென்ற பொழுது தோளில் கலப்பையை ஏந்தி ஒரு கறுத்த உருவம் எதிரே வருவதைக் கண்டான்.

பக்கத்தில் வந்ததும் அந்த உருவம் நின்றது.

"யாரது?"

வேலாயுதன் பதில் சொல்லவில்லை. ஒரு கணம் தயங்கி நின்று ஓரடி முன்வைத்த போது அந்த மனிதன் கலப்பையைக் கீழே போட்டு விட்டு வயலுக்குள் குதித்தான்.

அவனை அசட்டை செய்து வேலாயுதன் நடக்கலானான். இளவெய்யில் உடம்பில் பட்ட போது அவனுக்குச் சுகமாக இருந்தது. வயலின் மத்தியில் நின்றபடி அவன் நாலா

புறமும் பார்வையைச் செலுத்தினான்.

மண் கலயங்களைத் தலையில் சுமந்து வந்து கொண்டிருந்த ஹரிஜனப் பெண்கள் அவனைப் பார்த்ததும், விளைச்சலான வயல்கள் வழியே, 'பைத்தியம் பைத்தியம்' என்று கத்திக் கொண்டே ஓடினார்கள்.

பின்னாலிருந்து கூச்சலும் கூப்பாடும் கேட்டன. வேலாயுதன் வேகமாக நடந்தான். பின்னால் ஆட்கள் வருகிறார்களா? மேட்டிலுள்ள நாற்று நடும் வயலுக்குப் போக யத்தனிக்கையில் தாழம்பூச் செடிகளின் முட்கள் பட்டு கால்களைக் கீறின. அங்கிருந்து அவன் ஒரு சந்துக்குள் பிரவேசித்தான்.

பின்னால் கூச்சல் அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆனால் எதிரே வருகிற யாரும் அவனைத் தடுத்து நிறுத்தவில்லை. அவனுக்குச் சற்று நிம்மதி. கண்ணெதிரே தெரிந்தவர்களெல்லாம் அவனுக்கு வழி விட்டார்கள். பயத்தை விட அவனுக்கு மனவருத்தம்தான் மேலிட்டது.

"எனக்குப் பைத்தியமில்லை.... எனக்குப் பைத்தியமில்லை."

பின்னாலிருந்து ஜனங்கள் சப்தமிட்டார்கள்: 'பைத்தியம்... பைத்தியம்.'

சந்து முனையை அடைந்தபோது அங்கேயிருந்த ஒரு பெரிய பாறைக் கல்லை கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றான். என்ன களைப்பு! மீண்டும் நடக்க முனைந்த போது பின்னாலிருந்து யாரோ கர்ஜித்தார்கள் : "நில்லடா... அங்கே..."

தலையில் முண்டாசும் நரைத்த மீசையுமாய் ஒரு நெடிய மனிதன் வந்து கொண்டிருந்தான்.

"நிற்கிறாயா, இல்லையா? உன்னை விட பெரிய பெரிய கொம்பன்களை நான் பிடிச்சுக் கட்டியிருக்கிறேன்."

வேலாயுதன் மூச்சு வாங்கச் சொன்னான் : "எனக்குப் பைத்தியமில்லை..."

"உன் பைத்தியத்தை நான் தெளிய வைக்கிறேன்."

அந்த மனிதன் தன் பின்னால் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த மூங்கில் தடியைச் சுழற்றியவாறு நெருங்கின போது வேலாயுதன் மனம் பகீரென்றது.

அருகே கிடந்த ஒரு பாறாங்கல்லை எடுத்து, உயரத் தூக்கிப் பிடித்தவாறு வேலாயுதன் நின்றான்.

அந்த மனிதன் பின்வாங்கினான்.

வேலாயுதன் நடக்கலானான். சந்து போய்ச் சேருமிடம் ஒரு குன்றின் சரிவு.

குன்றின் மீது ஏறுவது சிரமமாக இருந்தாலும், அவன் வேகமாக ஏறினான். உச்சியை அடைந்ததும், நாலுபுறமும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

நேர் எதிர்ப்புறத்தில் ஒரு பாலை மரமும், அடுத்தாற்போல் ஒரு சிறு கோவிலும் தெரிந்தன. அந்த இடம் வேலாயுதனுக்கு நினைவு இருக்கிறது. பாலைமரம் இருக்கும் மேட்டை விட்டு இறங்கினான். அங்கே ஒரு முந்திரித் தோட்டம். அதற்கு அப்பால் ஒரு சந்தும் வாய்க்காலும்...

அந்த வாய்க்காலுக்குப் பக்கத்திலிருக்கும் வீட்டிற்கு எதிரில் நிறையக் குன்றிமணிகள் பரவிக் கிடக்கும்.

'அன்பார்ந்த அம்முக்குட்டி, எனக்குப் பைத்தியமில்லை.'

குன்றின் உச்சியில் ஒருவரும் இல்லை; ஒரு கறுப்புக் காளை மட்டும் மேய்ந்து கொண்டிருந்தது.

அவன் கால்பட்டுப் பனித் திவலைகள் புல்லிலிருந்து தெறித்தன.

'இந்தத் தனிமையான இடத்தில் சற்று நேரம் நிம்மதியாக இருக்கலாம்.'

பாலைமரத்தின்கீழ் அவன் வந்த போது கால் முட்டிகள் சகிக்க முடியாத அளவிற்கு வலித்துக் கொண்டிருந்தன. புல் தரைமீது அவன் இளைப்பாறுவதற்குச் சற்று நேரம் உட்கார்ந்தான். குளிர்ந்த காற்று உடம்பில் பட்டபோது கண் அயரத் தோன்றியது. முதுகு வலியெடுத்தது. பனி படர்ந்த புல் தரையில் குப்புறப் படுத்தான்.

திடீரென்று அவன் தூக்க மயக்கத்திலிருந்து கண் விழித்தான். முதுகில் ஏதாவது விழுந்ததோ? எழுந்து பார்த்த போது சற்றுத் தூரத்தில் ஏழெட்டு மாடு மேய்க்கும் சிறுவர்கள் நின்று கொண்டிருக்கக் கண்டான். அந்தச் சிறுவர்கள் அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு கல் கூட வந்து விழுந்தது. நல்ல காலம், அவன் மீது படவில்லை.

வேலாயுதன் கலவரத்துடன் எழுந்து நின்றான். காலில் சங்கிலி ஒலித்தது.. பாறைக் கட்டின் வழியாகச் சங்கிலியை இழுத்துக் கொண்டே அவன் ஓடினான். சந்தை அடைந்து அவன் திரும்பிப் பார்த்தான்.

"அம்மா'"... - அவன் உரக்க அழுதான். நெற்றியைத் துடைத்துப் பார்த்தபோது கையில் இரத்தம் இருந்தது.

"அவனைப் பிடியுங்கள்... பிடியுங்கள்..."

"இதோ வருது... பைத்தியம் வருது... வழி விடுங்கள்..."

வயலுக்குள் இறங்கியபோது ஆட்கள் இங்குமங்கும் கலைந்து ஓடுவதைப் பார்த்தான். வழியில் உட்கார்ந்து இருந்த குழந்தை ஒன்று வீறிட்டது.

"பைத்தியம்... பைத்தியம்... ஆளுங்களைத் தொந்தரவு செய்யும்... வழிவிடுங்கள்."

பின்னாலிருந்து திரும்பத் திரும்பச் சப்தம் வந்து கொண்டிருந்தது. வேலாயுதன் வயல் ஓரமாக நடந்தான். அவன் வாய்க்காலை வந்தடைந்தான். அங்கிருந்து அவன் சந்திற்குள் நுழைந்தான். இருமருங்கிலும் மரங்கள் செறிந்த அந்தச் சந்து வழியாகப் போகும் போது மண்ணில் குன்றிமணிகள் பரவிக் கிடப்பதைக் கண்டான்.

குழந்தையாய் இருக்கும்போது அந்தச் சந்தில் அவன் விளையாடியதற்கு அளவுண்டோ? செங்கல்லினால் செய்த மதில்சுவரையும், பாய்வதற்குத் தயாராக நிற்கும் அனுமாரின் மரப் பிரதிமை வைத்த வீட்டையும் பார்த்தபோது வேலாயுதத்தின் இதயம் துடித்தது... 'அங்கேதான்... அங்கேதான் அம்முக்குட்டி இருக்கிறாள்.'

அவளை ஒரு தடவைப் பார்த்தால் போதும்... 'அம்முக்குட்டி, என் வியாதி... என் வியாதி குணமாகி விட்டது. எனக்கு ஒன்றும் இல்லை.'

அவன் கேட்டைக் கடந்தான். முற்றத்தில் வில்வச் செடிகளுக்கு அருகே ஒரு குழந்தை ஓலைப் பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது. சாணம் மெழுகிய முற்றத்தில் காலை வெய்யில் பளிச்சென்று இருந்தது. அந்தப் பெரிய வீட்டின் முன்னால் நின்று வேலாயுதன் நாற்புறமும் பார்த்தான்.

ஓலைப் பந்தைச் சட்டென்று கையில் எடுத்துக்கொண்டு அந்தக் குழந்தை உள்ளே ஓடிப் போயிற்று.

"அம்முக்குட்டி இல்லையா?... அம்முக்குட்டி?"

அவன் மெல்ல முற்றத்தின் ஓரமாக நாலடி நடந்தான். திண்ணைக்கருகே ஒரு பெண் ஈர வேட்டியைக் கொடியில் உலரப் போட்டுக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் சங்கிலி ஒலித்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஒருகணம் வேலாயுதன் சிலையென நின்றான். அவன் மீண்டுமொருமுறை அந்த முகத்தை உற்று நோக்கினான்.

"அ... அம்முக்குட்டி..."

அவள் தன் கையிலிருந்த ஈரத்துணிகளைக் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடிப் போய் உரக்கக் கத்தினாள்.

'அம்முக்குட்டி, நான்தான். எனக்குப் பைத்தியமில்லை' என்று அவளுக்குச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால், நா எழவில்லை. இன்னொருமுறை அவன் கூப்பிட்டான் : "அம்முக்குட்டி."

அவள் எப்பொழுதோ உள்ளே ஓடி மறைந்திருந்தாள்.

உள்ளே இருந்து ஒரு கூச்சல் வந்தது

"பைத்தியம்.. பைத்தியம்."

"அந்தத் தடியை எடு... நீ உள்ளே போ..."

வேலாயுதன் பிறகு அங்கே நிற்கவில்லை. உலர்ந்த உதடுகளை நாக்கால் நனைத்தபோது உப்புக் கரித்தது. நெற்றியில் பட்ட காயத்தின் இரத்தம் அது. காலில் எஞ்சியிருந்த சங்கிலித் துண்டையும் இழுத்துக் கொண்டு அவன் கேட்டிற்கு வெளியே வந்தான்.

உடல் சோர்ந்து தள்ளாடி விழும் நிலையிலிருந்தான் அவன். இருந்தாலும் புயல் வேகத்தில் அவன் ஓடினான். கூக்குரல்களும், தகரத்தைக் கொட்டும் ஓசையும் அவனைத் துரத்தின.

தன் வீட்டை அடைந்தபோது மாமாவும், வேறு சிலரும் இருப்பதைக் கண்டான். சங்கிலி ஓசையைக் கேட்டு அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

வேலாயுதன் மதிற்சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றான். மாமா உத்தரத்திலிருந்த பிரம்பை எடுத்துக்கொண்டு முற்றத்திற்கு வருவதைக் கண்டான்.

அவன் தளர்ந்த மங்கிய கண்களைத் தன் உடலின் மீது பதித்தான். அப்போதுதான் அவன் உணர்ந்தான். தன் இடுப்பில் நூலிழை கூட இல்லை.


நொண்டி நொண்டித்தான் அவன் தாழ்வாரத்தில் போய் விழுந்தான். மாமாவும், நண்பர்களும் சுற்றிலும் வந்து நின்ற போது மூச்சு வாங்கச் சொன்னான் : "எனக்குப் பைத்தியம்... என்னைச் சங்கிலியால் கட்டுங்கள்..."

நன்றி : மலையாளச் சிறுகதைகள் (தமிழாக்கம் : கே. நாராயணன்), நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுதில்லி.

முதல்வர் என்றால்...


தில்லியின் முதல்வர் குரானாவின் கார் நெம்பர் பிளேட் இந்தியில் எழுதப்பட்டுள்ளது. மோட்டார் வாகனச் சட்டம் இதற்கு இடம் தரவில்லை என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். முதல்வரோ 'இந்தியில்தான் இருக்கும்; மாற்ற முடியாது' என்று கூறிவிட்டார். அதனால் அதிகாரிகள் இதற்கு ஏற்ப வாகனச் சட்டத்தைத் திருத்தலாம் என யோசித்து வருகின்றனராம்! ஒரு குடிமகன் இதைச் செய்திருந்தால் சட்டத்தை மீறியதற்கான தண்டனை அல்லவா கிடைக்கும்!

- எஸ். பால்தம்புராஜ்



KALKI SHOPPING PAGE

வாழ்த்துகிறோம்



Dr. முகேஷ் & D. கீதா அவர்களின் புதல்வியும்
திருமதி. காயத்ரி சுப்ரமணியம் சிஷ்யை
குமாரி நிஹாரிகா (வயது 11)
பரத நாட்டிய அரங்கேற்றம்
ABHYUDAYA BANK HALL,
VASHI, NEW BOMBAY
10.12.95 மாலை 6.00 மணிக்கு வெகு விமரிசையாக நடந்தேரியது.

வாழ்த்துக்கள் : Mrs & Mr. மோகன் ராவ், B.M.பிரபாகர்ராவ், 59 ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை - 79.
போன் : 5223755.

தவணை முறையில் சாரிகள் விற்பனைக்கு

புதிய டிசைன்களில் சூரத் சாரிகள், பெங்கால் காட்டன், காஞ்சிபுரம் பட்டு, மைசூர் சில்க், கோரா காட்டன், சுங்குடி சேலைகள் மற்றும் சுடிதார், பிளவ்ஸ் ஆகிய அனைத்தும் மொத்த வியாபாரிகளும், தனி நபர்களும், பணிபுரியும் பெண்களும் எங்களிடம் தவணை முறையில் வாங்கிக் கொள்ளலாம்.
மேலும் விவரங்களுக்கு : -

மீரா டெக்ஸ்டைல்ஸ்
26/1, மோதிலால் தெரு,
தி. நகர், சென்னை - 17.
போன் : 4342696

திருமகள் நிலைய புதிய வெளியீடுகள்

திருப்பூந்துருத்தி	- பாலகுமாரன்	70.00
பெரியபுவினைக் கதைகள்	"	43.00
மீட்டாத வீணை	"	45.00
என்னவளே அடி என்னவளே	"	26.00
கடலோரக் குருவிகள்	"	50.00
என்னுயிரும் நீயல்லவோ	"	45.00
பணம் காய்ச்சி மரம்	"	33.00
ஆஸ்டின் இல்லம்	- சுஜாதா	13.50
தூண்டில் கதைகள்	"	44.00
ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள்		33.00
தலைமைச் செயலகம்		40.00
பட்டாம் பூச்சியும் தூக்கமும்	- சிவசங்கரி	25.00
சொர்க்கங்களில் சில நாட்கள்	"	15.00
மனச்சிறை	- அனுராதா ரமணன்	37.00
நெருப்புடன் உறவு	"	33.00
உறவு ஒன்று வேண்டும்	"	50.00
காதோடு ஒரு காதல் கதை	"	42.00
கருப்பு மலர்கள்	- நா. காமராசன்	15.00
காட்டுக்குறத்தி	"	23.00
நாயகம் ஒரு காவியம்	- மு. மேத்தா	60.00
மனித நேயம்	- கமலி ஸ்ரீபால்	20.00
பைந்தமிழ்ப் பூங்கா	- சு. ஸ்ரீபால்	33.00
மனித பந்தங்கள்	- கிருஷ்ணமணி	38.00
இந்து சமயக் களஞ்சியம்	- திரவியம்	77.00
பெரும்புள்ளிகள்	- வி.கே. சுப்பிரமணயம்	16.00
திருமகள் தமிழ் கையகவிதி. கையடக்கப்பதிப்பு		20.00
ஜாதக அலங்கார யோக விளக்கம்	- எஸ்.பி. சுப்பிரமணியன்	22.00
செட்டிநாட்டு உணவு வகைகள்	- விசாலாட்சி	40.00

தனிப் பிரதி வேண்டுவோர் புத்தக விலையுடன் ரூ. 6/- சேர்த்து M.O. செய்யவும். இலவச விலைப்பட்டியலுக்கு எழுதவும்.

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை - 600 017
Ph : 4342899 Fax : 4341559



"என் மனைவி இறந்தபோது நான் அடைந்த துக்கத்துக்கு சமமான அளவு துயரத்தை காஸாவின் மறைவில் அனுபவிக்கிறேன்."

- சுயராஜ்யா ஆசிரியர் காஸா சுப்பாராவ் காலமான போது ராஜாஜி கூறிய வார்த்தைகள் இவை. இத்தனைக்கும் ஒரு கால கட்டத்தில் காஸாவின் பேனா முனையால் கடுமையாகத் தாக்கப்பட்டவர் ராஜாஜி. ஆயினும் கருத்து மாறுபாடுகள், ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த நன் மதிப்பையும் நட்புறவையும் பாதிக்க அவர்கள் அனுமதிக்கவில்லை.

ஆசிரியராகப் பணியாற்றி வந்த காஸாவைத் தமது சுயராஜ்யா பத்திரிகையில் எழுதச் செய்து ஊக்குவித்தவர் ஆந்திர கேசரி பிரகாசம். பின்னர் சில காலம் இந்தியன் எக்ஸ்பிரஸில் பணியாற்றிய காஸா, சிறு பத்திரிகையானாலும் சுதந்தரத்துடன் செயல்பட விரும்பி சொந்தத்தில் சுதந்திரா பத்திரிகையை ஆரம்பித்தார்.

தம்மை வளர்த்த பிரகாசம் அவர்களையே கருத்து மாறுபாடு காரணமாகத் தாக்கவும் துணிந்தார். ஆனால் விருப்பு வெறுப்பு அற்ற உள்ளத்துடன்தான். "யாரை உனக்கு ரொம்பப் பிடிக்கிறதோ, அவரைப் பாராட்டி எழுதாதே! யாரிடம் உனக்கு வெறுப்பு இருக்கிறதோ அவரைத் தாக்கி எழுதாதே! விமர்சன உரிமை என்பது சொந்த விருப்பு வெறுப்புகளைக் கடந்ததாக இருக்க வேண்டும்" என்பது காஸாவின் அசைக்க முடியாத கொள்கை.

சுதந்திரா பத்திரிகையை காஸாவால் நடத்த முடியவில்லை. அதனினும் சிறிதாக சுயராஜ்யா பத்திரிகையை சில காலம் சென்று நடத்திய போது, ராஜாஜி அதில் வாரா வாரம் எழுதி வந்தார். காஸாவின் அலுவலகத்துக்கு அன்றாடம் மாலை நேரத்தில் போய்

காஸா :

பேனா மன்னரல்ல; பேனா தொண்டர்!

அளவளாவித் திரும்புவார். சில நாட்களில் டிரைவர் இல்லாத போது என்னிடம் கார் ஓட்டி வருமாறு பணிப்பார். நான் காரைப் பூட்டி விட்டு ஜன்னல் ஓரமாக நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பேன். அரசியலும் இலக்கியமும் தத்துவமும் விஞ்ஞானமும் போட்டி போட்டுக் கொண்டு இடம் பெறும் அந்த உரையாடலைக் கேட்கக் கேட்க, கங்கையும் யமுனையும் சங்கமிக்கும் பிரயாகையில் முக்குளித்து எழுந்த புத்துணர்ச்சி ஏற்படும்.

காஸாவுக்கு உதவ வேண்டி, சுயராஜ்யா பத்திரிகையை கல்கி நிறுவனத்துடன் இணைத்துக் கொண்டார் சதாசிவம். ராஜாஜி சுதந்திரா கட்சியை ஆரம்பித்த போது சுயராஜ்யாவுக்கு "கட்சிப் பத்திரிகை" என்ற முத்திரை விழுந்தது. "ஒரு சுதந்தரப் பத்திரிகையாளனாக விளங்க வேண்டும் என்பதையே லட்சியமாகக் கொண்டிருக்கும் நீங்கள் இதை எப்படி ஜீரணிக்க முடியும்?" என்று நான் காஸாவிடம் ஒருநாள் கேட்டேன். அவருடைய பதில் மறக்க முடியாத ஒன்று :

"சுதந்திரா கட்சியின் கொள்கைகள் நாட்டுக்கு நலம் பயக்கும் என்பதால் நாம் அதை ஆதரிக்கிறோமேயன்றி கட்சிப் பத்திரிகை என்பதால் அல்ல. சுயராஜ்யா வாசகர்களும் அப்படி எண்ண மாட்டார்கள். சுதந்திரா கட்சியின் வளர்ச்சியை விரும்பாத அரசியல்வாதிகள் அப்படி கதை பரப்புகிறார்கள். அது பற்றி நான் கவலைப்படவில்லை. நான் கவலைப்படுவதெல்லாம் என் மனசாட்சி குறித்துத்தான். அது தெளிவாக இருக்கிறது."

இந்த மனத் தெளிவுதான் காஸா சுப்பாராவின் பலம். அவரது 100 வது பிறந்த நாளைக் கொண்டாடுகிற இந்தச் சமயத்தில் ஒவ்வொரு எழுத்தாளனும் பத்திரிகை ஆசிரியரும் எண்ணிப் பார்க்க வேண்டியதும் இதைத்தான்.

— கி. ராஜேந்திரன்



கோப்பையை வெல்லக் கூட்டுப் பிரார்த்தனை!

தடுத்தும் கேளாமல் சிலர் அந்த ராட்சத கிரிக்கெட் பேட்டை முத்தமிட்டார்கள். சிலர் தொட்டுக் கும்பிட்டார்கள். சிலர் அதன் முன் சின்னதாகப் பிரார்த்தனை செய்தார்கள்.

ஆனால் எல்லோருமே அதில் கையெழுத் திட்டார்கள். "பெஸ்ட் ஆஃப் லக் இந்தியா" என்ற வாசகத்துடன் ட்ரக் ஒன்றின் மீது நின்று கொண்டிருந்தது அந்த 'பேட்'. சென்னையில் பெசன்ட் நகர், தி.நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு நாள் இந்த பேட் வைக் கப்பட்டு, வரிசையில் வந்து கையெழுத்திட் டனர் தேசப்பற்று மிக்க கிரிக்கெட் ரசிகர்கள். டெல்லி, பம்பாய், ஹைதராபாத் ஆகிய நகரங் களில் கையெழுத்துக்கள் போட்ட பிறகும் பாதி பேட் எப்படி காலியாகவே இருக்கிறது என்று அதிசயப்பட்டுக் கொண்டிருந்தார் விஷயம் புரியாத ஒருவர்.

31 அடி நீளமும் ஐந்தடி அகலமும் கொண்ட அந்த பேட்டில் சுமார் 35 ஆயிரம் பேர் கையெழுத்திட முடியும். அப்படி முடிந்த வுடன், அந்தக் கையெழுத்துகளின் மீது அப் படியே லேமினேட் செய்து விட்டு அதன் மீது மற்றொரு படிவத்தைப் பொருத்துகிறார்கள். சென்னை வருவதற்குள் இப்படி 16 படிவங்கள் தீர்ந்திருக்கின்றன. அடுத்து நேராகக் கல்கத்தா. அங்குள்ளவர்கள் 'வந்தே மாதரம்' முழக்கத் துடன் கையெழுத்திட்ட பிறகு அங்கு நடக்கும் உலகக் கோப்பையின் தொடக்க நாளில் இந்திய அணியிடம் இந்த பேட்டை ஒப்படைப்பார்கள்.

விதவிதமான ஸ்கெட்ச் பேனாக்களை (கை யெழுத்திடுவதற்காக) வாலண்டியர்கள் நீட்டிக் கொண்டிருக்க, பின்னணியில் சுமாரான பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. குல் ஸார், ஆஷா போன்ஸ்லே, ஹரிஹரன் ஆகியோர் இணைந்து உருவாக்கியிருக்கிறார்கள் இந்த ஆங் கிலமும் இந்தியும் கலந்த உத்வேகப் பாடலை.

ஓபனிங் பேட்ஸ்மேன் காவஸ்கர்தான். ஆம், அவர்தான் புது தில்லியில் இந்த ராட்சத பேட்டில் முதல் கையெழுத்திட்டவர். (பின்னே என்ன, ' பெப்ஸிக்காரரான கபிலையா முதல் கையெழுத்திடச் சொல்வார்கள்! இந்த பேட் கோககோலாகாரர்களின் ஏற்பாடு அல்லவா!). பாலி உம்ரிகர், நட்கர்னி, வெங்சர்க்கார், சோல்கர், குல்கர்னி, ஜி.ஆர். விஸ்வநாத், வெங் கட்ராகவன், காவ்ரி போன்ற அந்நாள் பிரபலங் களுடன், 1983 ல் நம் நாட்டுக்கு உலகக் கோப் பையைத் தட்டி வந்த அதிஷ்டக்கார திறமை சாலிகளின் கையெழுத்துக்களையும் இந்த பேட்டில் காண முடிந்தது.

"வழக்கமா கிரிக்கெட் வீரர்களின் கை யெழுத்தை எங்க பேட்டில் வாங்கத் துடிப் போம். இப்போ எங்க கையெழுத்து அடங்கிய பேட்டை 'அவங்க கிட்டே கொடுக்கப் போறாங் கன்றது த்ரில்லான விஷயமில்லையா? அதனா லேதான் கையெழுத்துப் போட பெரம்பூரிலே யிருந்து வந்திருக்கேன்" என்றார் கல்லூரி மாண வரான குரு ஸ்ரீனிவாஸ்.

தியாகராய நகரில் ஒரு தனியார் நிறுவனத் தில் பணிபுரியும் சிவஞானம், "நம்ம அணி அரை யிறுதிச் சுற்றுவரை தன் திறமையாலே வந்துடும். அதுக்கு மேலே போகணும்னா அவங்களோட தற்போதைய திறமை மட்டும் போதும்னு தோணலே. அதனாலேதான் இந்தக் கூட்டுப் பிரார்த்தனை மாதிரியான முயற்சியிலே கலந் துக்க வந்தேன்" என்றார். அடுத்த நாள் அண்ணா நகருக்கும் சென்று மீண்டும் கையெழுத்திடப் போவதாகக் கூறினார்!

— ஜி.எஸ்.எஸ்.

படம் : கிருஷ்ணமூர்த்தி


பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி வீதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்

அமுத சுரபி டிபாசிட் திட்டம்



டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000

கல்பதரு மணிபேக் திட்டம்



அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

நடராஜ் சிட்ஸ் (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

நடராஜ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்,
நடராஜ் எஸ்டேட்ஸ் - (பண்ணை நிலம்).
"சாந்தி காம்ப்ளெக்ஸ்", 3வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017.

வட்டி 24% P.A. பரிசு 4% + 1% பென்ஷனர்

கிளைகள் : "இதயம் காம்ப்ளெக்ஸ்", 51- தெற்கு வீதி, (மாடி), திருவாரூர் - 610 002.
2-B - செல்வம் நகர், மெடிகல் காலேஜ் சாலை, தஞ்சாவூர் - 613 007.
1-B - காமராஜர் சாலை, (மாடி), காஞ்சிபுரம் - 631 501.

Phone : 434 20 98, 484 01 50



" சிறிய தொழில் ஒன்று ஆரம்பிக்க படாத பாடுபட்டேன். வங்கிகளில் எல்லாம் முயற்சித்துப் பார்த்தேன். ஆனால் நடராஜ் சிட்ஸ் நிறுவனத்தில் சந்தாதாரராகி, சீட்டு எடுத்து தற்பொழுது தொழில் முனைவராக ஆகி உள்ளேன்".


—கீதா கிருஷ்ணாநந்தன்

நடராஜ் சிட்ஸ்
அளிக்கும்
மிகப்பெரிய பரிசு திட்டம் 1996
விரைவில் எதிர்பாருங்கள்

" சிட் பண்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 25,000 சீட்டு குரூப்புகள் நடைமுறையில் உள்ளன. மேலும் புதிய பெரிய குரூப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன".

சீட்டில் சேர்கிறவர்களுக்கும்
அறிமுகப்படுத்துகிறவர்களுக்கும் பரிசு பொருட்கள்
காத்திருக்கின்றன.

- உங்கள் வாராந்திர விடுமுறை நாட்களை, மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் கழிப்பதற்கு அமைதியான, அழகான சூழ்நிலை
- சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையில் காஞ்சீபுரத்துக்கு அருகே - பஸ்ரூட்டில் தயாராகிறது. ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுங்கள்.





இழப்பு

மும்தாஜ் யாசீன்

இத்தனை வருடங்களாகியும் இன்னும் நினைவில் இருந்தான் காதர்பீ. சொந்த சோகங்களை அசை போடுகிற தருணத்தில் அவனை நினைக்காமல் இருக்க முடியவில்லை. இன்றைக்கும் அப்படித்தான்.

ஜமீலா ஊருக்குப் போய் வந்த 'கதையை'ச் சொல்லச் சொல்ல காதர்பீயின் ஞாபகம் வந்து விட்டது.

பிறந்த வீடு முன்பு போல சுகம் தருவதாக இல்லை. அண்ணன் தம்பிகள் தனித்தனி ஆளாகி இருந்தார்கள். அவனவனுக்கு தன் குடும்பம், குழந்தை குட்டிகள் என்கிற எண்ணம் மேலோங்கி விட்டது. தகப்பனார் இருந்த பழைய நினைப்புடன் காசு பணம் கேட்டு எதிரில் நிற்பதெல்லாம் இனிமேல் மரியாதை இல்லை. "சொத்தையாவது பாகம் பிரிக்கணும். அதுவும் இல்லேன்னா இந்த ஆம்பளைகிட்ட என்னால காலம் தள்ள முடியாது.." என்றாள் ஜமீலா.

அக்கம் பக்கத்தில் பங்கஜம் மாமி, சதீஷ் அம்மா, காயத்ரி அம்மா எல்லோரும் நல்ல பழக்கம்தான். ஆனாலும் ஆயிஷாவிடம்தான் இதெல்லாம் சொல்லிக் கொள்ள முடியும் அவளுக்கு. காரணம் இருவரும் ஒரே ஊர்க்காரிகள். சேர்ந்து படித்தவர்கள். சிறு வயதுத் தோழிகள் அசலூரில் இப்படி எதிரெதிர் வீட்டில் வாழ்க்கைப்படுவது அபூர்வம்.

ஆழ்ந்த கவனிப்புடன், "ம்..ம்.." என கேட்டுக் கொண்டிருந்தாள் ஆயிஷா. தனக்குள்ளும் கிலி படருவதை உணர முடிந்தது. உலகமே இப்படித்தான். எல்லா உறவுகளும் ஏதாவது ஒரு தருணத்தில் அர்த்தமிழந்து விடுகின்றன. அவளுக்கு மட்டுமல்ல. தனது 'பெத்துப் பிறப்புக்களும்' ஒருநாள் மாறத்தான் போகிறார்கள். சரிவே கிடையாது என நினைக்கும் பலரது வாழ்வு சரிவதும், பிரிவே வராது என நம்பும் உறவுகள் பிரிந்து விடுவதும்..

"என் கோவம் வருத்தமெல்லாம் அவனுக போல இல்லை. எம்மைப் பெத்தவுக மேலதான். படிக்க விடாம முடக்கிப் போட்டாகளே... மக்க.."

"வாஸ்தவமான பேச்சு.." ஆயிஷா விரக்தியாகப் பார்த்தாள். இழப்பின் வேதனை அழுந்த காதர்பீயின் ஞாபகம் மீண்டும் வந்தது. நேராகப் போய்க் கொண்டிருந்த பாதையில் திடீரென முளைத்த தடைக்கல் அல்லவா அவன்.

"படிக்கணும்னு எம்புட்டு ஆசைப்பட்டோம்... எம்புட்டு நல்லாப் படிச்சோம்... கேட்டாகளா... எவளோ ஒருத்தி கெட்டுப் போனதை சாக்கா வச்சு நம்ம வாழ்க்கையை நாசப்படுத்திப் போட்டாகளே நம்மைப் பெத்த சனங்க.." ஜமீலா மேலும் புலம்பினாள்.

"விடுடீ..." எனச் சொல்ல நினைத்தாலும் நாக்கு எழும்பவில்லை ஆயிஷாவுக்கு. எதிர் வீட்டிலிருந்து, "ஜமீலா..."என்று குரல் கேட்டது.

"அந்தண்ணன் கூப்பிடுது..." என்றாள் ஆயிஷா.

"ம்.... தண்ணிக்கு வந்தவ பேச உக்கார்ந்தாச்சு. போனா கத்துவாரு. தூக்கத்துல எழுப்பிப் பேசணுமான்னு. அதான் விடிஞ்சு போச்சேன்னு வந்தேன். நல்லவேளை நீயும் முழிச்சுக்கிட்டிருந்தே.... புள்ளைகளையும் அவரையும் அனுப்பிட்டு அப்புறமா வர்றேன்.." ஜமீலா போய் விட்டாள்.

"பாவி... பாவி..." என சபித்தபடி காதர்பீயின் முகம் மீண்டும் நினைவுக்கு வந்தது. கருநாகக் குட்டி போல படம் எடுத்தாடும் முகம். "'த்தூ..."வென்று ஒதுக்க முடியாமல் இனி திரும்பத் திரும்ப தோன்றிக் கொண்டே இருக்கும். அவஸ்தைதான் இது.

"அல்லாவே... நாகூர் அவுலியாவே..." முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டாள். தளர்ந்து போன மாதிரி இருந்தது. குழந்தைகள் மாற்றி மாற்றி காலைத் தூக்கிப் போட்டதில் ராத்திரி சரியான தூக்கமில்லை. அதுதான் காரணமா?

அது மட்டும்தானா?


உள்ளே திரும்பியதும், "என்ன... பேசி முடிச்சாச்சா?" என்று கேட்டான் மஜீது. படுக்கையில் சப்பணமிட்டு அமர்ந்திருந்தான்.

ஆயிஷா பதில் சொல்லவில்லை.

"என்னவாம்... ஊர்ல எல்லாரும் சொகந்தானே?"

"ம்...ம்... வெள்ளனமா எங்கியோ போகணும்னீக... கௌம்பலையா?" என்றாள் ஆயிஷா. தன் குடும்பத்தைப் பற்றி இந்த ஆம்பளைக்கு என்ன என்றிருந்தது மனசுக்குள்.

"கௌம்பியாச்சு..." மஜீது அகலமாகக் கொட்டாவி விட்டான். தலையணைக்கு அடியில் தேடி பீடி பற்ற வைத்தான். இத்தனை



''எங்கப்பாவிற்கு ஞாபக மறதி ரொம்ப அதிகம்.''

''எப்படிச் சொல்றே?''

''பேனாவைச் சீவி பென்சிலுக்கு இங்க் போட்டு விட்டாரே!''

– அருண் அபிலக்ஷ்மி

வருடங்கள் பழகியும் பீடிப் புகையை இன்னும் சகித்துக் கொள்ள முடியவில்லை. முகத்தின் மீது கையால் விசிறிக் கொண்டு, "நாஸ்தாவுக்கு வந்துருவீகளா... லேட்டாகுமா?" என்றாள்.

மஜீது உதட்டைப் பிதுக்கினான். நிஜமாகவே அவனுக்கும் தெரியவில்லை. அசன் முகம்மது மாமுவிடம்தான் போக வேண்டியிருந்தது. அவர் வாய் ஜாமீன் கொடுத்தால், காய்கறி மண்டியில் எத்தனை வேண்டுமானாலும் சரக்கு எடுக்கலாம். மனிதர் பிடி கொடுத்தால்தானே!

"என்னதான் சொல்றாரு... சரக்கு வாங்கித் தருவாரா... மாட்டாரா?"

''அதான் தெரியலை. ஓரோர் சமயம் ஓரோர் மாதிரி சொல்றாரு'' என்றான்.

''உண்டு, இல்லைன்னு முடிவா கேட்டுருங்க... நம்ம சக்திக்கு ஏத்தபடி தொழில் செஞ்சாப் போதும். தெனத்துக்கும் கடன்காரன் மாதிரிப் போயி வாசல்ல நிக்க வேணாம்... சொந்தக்காரங்க தயவு என்னைக்கும் உருப்படாது."

மஜீது அவளை லட்சியம் செய்யவில்லை. "எனக்கே புத்தி சொல்றியா?" என்கிற மாதிரி பார்த்தான். அவளால் சகிக்க முடியாதது இது. கஷ்ட நஷ்டங்களை தலையில் சுமத்தலாம். நியாயம் என்று தெரிந்த 'நல்ல வார்த்தை' எதுவும் சொல்லக் கூடாது.

மஜீது பின் கட்டுக்குப் போனான்.

வாசல் கதவை யாரோ தட்டினார்கள். "யாரது?"

"நாந்தான் ஆயிஷா..." மரகதம் டீச்சர் நின்றிருந்தாள்.

"என்னங்க டீச்சர்?"

"ஒண்ணுமில்லை... பேப்பர் திருத்த வெளியூர் போறேன். கேஸ் வர்ற நாளு. பணமும், சாவியும் தர்றேன்... கொஞ்சம் வாங்கி வைக்கிறியளா?"

"அதுக்கென்ன... குடுங்க..." ஆயிஷா வாங்கிக் கொண்டாள்.

"தேங்க்ஸ்..."

சின்ன விஷயத்திற்கும் இங்கிலீஷில் நன்றி சொல்கிறவள், இந்த காம்பவுண்டில் மரகதம் டீச்சர் மட்டும்தான். நடை, பேச்சு, தோரணை எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் முத்துலெட்சுமி டீச்சரின் சாயல்.

முத்துலெட்சுமி டீச்சர் அழகானவர்கள். கொஞ்சம் போல மாறு கண். வகுப்பறையிலும் பச்சை கூலிங்கிளாஸ் போட்டுக் கொண்டு தான் பாடம் நடத்துவார்கள். படிய வாரிய தலையில் எப்போதும் ஒற்றை ரோஜா சொருகி இருக்கும். "லுக் ஹியர்..." என அதட்டியபடி, கிரீச் கிரீச்சென்று கரும்பலகையில் எழுதுகிற கம்பீரம் இன்னும் மனதில் இருக்கிறது. படிப் பதிலாகட்டும், டீச்சரிடம் நல்ல பெயர் வாங்குவதிலாகட்டும் ஜமீலாவுக்கும், ஆயிஷாவுக்கும் தான் போட்டி. பின்னாளில் தாங்களும் முத்துலெட்சுமி டீச்சர் மாதிரியே மிஸ் ஆகி விட வேண்டும் என்பதுதான் இருவருக்குமே கனவாக இருந்தது.

அந்த நாளில் வயசுக்கு வந்த பெண்களை பாடசாலை உள்பட வெளியில் எங்கும் அனுப்புவது ஆசாரமன குடும்பங்களில் வழக்கமில்லை. எட்டாங்கிளாஸ் அரைப் பரீட்சை லீவில் ஆயிஷா 'உட்கார்ந்த'போது, இது பிரச்னையாயிற்று. ஆயிஷா பிடிவாதம் பிடித்தாள். ''யோசிக்கலாம் பொறும்மா...'' என்று சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, ஒரு மாதம் வரைக்கும் அத்தா ஒரு யோசனைக்கும் வரவில்லை. விஷயத்தைக் கேள்விப்பட்டு முத்துலெட்சுமி டீச்சரே வீட்டுக்கு வந்தார்கள். "நல்லா படிக்கிற புள்ளை. நிறுத்த வேணாம். நான் கேரண்டி..." என அவரே சொன்ன பிறகு தான் அத்தாவின் மனம் இளகிற்று. நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டார். விளையாட்டிற்கெல்லாம் அனுப்பக் கூடாது. ஸ்பெஷல் கிளாஸுக்கெல்லாம் வர மாட்டாள். குதிரை வண்டியில் முன்னும் பின்னும் திரை போட்டுத் தான் ஸ்கூலுக்கு வருவாள். திருப்பி அனுப்பி வைப்பது டீச்சரின் பொறுப்பு.

அத்தாவின் செய்கையில் கொஞ்சம் போல எதிர்ப்பு இருந்தாலும் நாளடைவில் அமுங்கி விட்டது. அடுத்த இரண்டாம் மாதமே ஜமீலாவும் குதிரை வண்டித் திரைக்குள் வர ஆரம்பித்தாள். ஒன்பதாம் வகுப்பு கால் பரீட்சைக்கு குர்ஷித், யாஸ்மின் என்கிற இரண்டு பிள்ளைகளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

இந்த நிலையில்தான் ஊரில் புயல் போல வந்து சேர்ந்தாள் காதர்பீ. உள்ளூர் இஸ்மாயில் ராவுத்தரின் மகன் சர்புதீன் பம்பாயில் வேலை பார்த்த போது பிறந்த மகள் இந்த காதர்பீ. தன் தாயாரின் ஞாபகமாக கொஞ்சம் கர்

னாடகமான பெயர் வைத்திருந்தாலும், மற்ற எல்லாவற்றிலும் நவீனமாகவே வளர்த்திருந்தார். பைஜாமா, குர்தாதான் அணிவாள். ரோஸ் கலர் பவுடர் பூச்சும், உதட்டுச் சாயமும் உள்ளூரில் யாருமே அறியாதது. திரை போட்ட வண்டியில் போய் வருவதை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. "அல்லாவே.. நம்ம உடம்பு தாங்காது" எனச் சொல்லி சிரிப்பாள்.

கிணிகிணியென மணியடித்துக் கொண்டு சைக்கிளில்தான் வருவாள்.

தாடி வைத்த ஹஜ்ரத்மார்களும், முத்தவல்லியும், "அக்கிரமமா இருக்கேப்பா.." என தங்களுக்குள் பேசிக் கொண்டாலும், சர்புதீனிடம் நேரடியாகக் கேட்கத் துணிய வில்லை. "நான் உங்க ஜமா அத் இல்லை. உங்க சட்டதிட்டங்கள் என்னைக் கட்டுப் படுத்தாது.." என்று சொல்லி விடுவாரோ என்ற பயம்.

பிரியம் கொண்டவள் மாதிரி காதர்பீ எல்லோரிடத்திலும் பழகவே விரும்பினாள். ஆண், பெண் பேதமெல்லாம் கிடையாது. ஆயிஷாவும், ஜமீலாவும் அவளைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்- காபீர் சிறுக்கியோடு நமக்கு என்ன உறவு என்பதைப் போல. சில சமயம் ஸ்கூல் பக்கமிருந்த கரண்ட் ஆபீஸ் ஆள் ஒருத்தன் அவளுக்கு இணையாக சைக்கிள் மிதித்தபடி பேசிக் கொண்டு வருவதை அவர்கள் கண்டது உண்டு.

அம்மாவுக்கு எப்படித்தான் தெரியுமோ. "பாரு.. இந்தப் பொண்ணு ஒருநாளைக்கு தீராத பழியைத் தூக்கிப் போடப் போறா..." என ஒரு தடவை ஆயிஷாவுக்கு இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டே சொன்னாள்.

தற்செயலாக அம்மா சொன்னது, பலித்து விட்டது. அன்றைக்கு வெள்ளிக்கிழமை. முன் நடையில் அத்தாவும், சர்புதீனும் குசுகுசு வென்று பேசிக் கொண்டிருந்தார்கள். திரையை விலக்கிக் கொண்டு அத்தா மட்டும் உள்ளே வந்து "ஏன் கண்ணு... காதர்பீ புள்ள நேத்திக்கு ஸ்கூலுக்கு வந்திச்சா..." என்று கேட்டார்.



பார்த்ததாக ஞாபகம் இல்லை என்று சொன்னாள் ஆயிஷா.

"நல்லா யோசிச்சுச் சொல்லும்மா..."

"ம்... ம்ஹும்... வரலைத்தா... ஏன்..."

"ஒண்ணுமில்லை. நீ படி..." அத்தா போய் விட்டார்.

அப்போதைக்கு ஆயிஷாவுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. இரண்டு நாள் லீவு முடிந்து திங்கட்கிழமை புறப்படும் போது புரிந்தது. குதிரை வண்டி வரவில்லை. "தம்பியை அனுப்பி கூட்டி வரச் சொல்லலாமா?" என்று கேட்டதற்கு, "இனிமே வண்டி வராது..." என பதில் சொன்னாள் அம்மா.

"ஏன்..."

"உன்னை ஸ்கூலை விட்டு நிப்பாட்டியாச்சுடி புள்ள..."

அம்மா விளக்கமாக எல்லாவற்றையும் சொன்னாள். காதர்பீயை மூன்று நாட்களாகக் காணவில்லை. கரண்ட் ஆபீஸ்காரனையும் காணவில்லையாம். காரிலும், பஸ்ஸிலும் நாலா பக்கமும் தேடிக் கொண்டு ஆட்கள் போய் இருந்தார்கள். தெருவே பரபரத்துக் கிடந்தது. இந்த நிலைமையில் பொட்டப் புள்ளைகளை யாராவது வெளியே அனுப்பினால் அவ்வளவு தான். ஊரில் குடி இருக்க முடியாமல் போய் விடும்.

வீட்டிற்கு பால் ஊற்றுகிற வெள்ளைச் சேலைக்காரம்மாள், பூக்காரி ரத்தினம் இவர்களிடம் இரகசியமாக விசாரித்ததில், அம்மா சொன்னது நிஜம் என்றே தெரியவந்தது. ஊர் 'ஜமா அத்' பேசி முடிவு எடுத்த விஷயத்தில் ஒரு எளிய பெண் என்ன செய்துவிட முடியும்? ஆறுதல் அளித்த ஒரே விஷயம் தனக்கு மட்டுமல்ல. தன் சிநேகிதிகள் எல்லோருக்கும் இதே கதி என்பதுதான்.

காதர்பீ இருக்கிற இடம் தெரியாத நிலையிலேயே அவளது குடும்பம் ஊரை விட்டுப் போய் விட்டது. கொஞ்ச நாளில் எல்லாமே மறந்து போகிற நிலைமையும் ஏற்பட்டிருந்தது. ஆனால் ஏற்படுத்தியிருந்த பாதிப்பு மட்டும் மாறாமலிருந்தது. அடுத்த நாலைந்து வருஷங்களுக்கு அவர்களது தெருவிலிருந்து எந்தப் பெண்ணும் எட்டாங்கிளாசிற்கு மேல் படிக்கவே இல்லை.

கனவை ஒதுக்கிவிட்டு ஜமீலாவும், ஆயிஷாவும்கூட வீட்டில் பார்த்து வைத்த மாப்பிள்ளைகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார்கள்.

ஜமீலா எப்போது வருவாள் என்று தெரியவில்லை. அவள் வருவதற்குள் வேலைகளை முடித்தால்தான் 'ராஹத்தாக' உட்கார்ந்து பேச முடியும். தன் குடும்ப விஷயம். அம்மாவின் சௌக்கியம். ஊர் சங்கதி என்று எவ்வளவு இருக்கிறது.

மளமளவென்று வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள். என்னதான் வேகமாகச் செய்தாலும், வழக்கத்தைவிட முன்னதாக எதையும் முடித்து விட முடியவில்லை.

ஒற்றை ஆளாக அடுப்பு வேலைகளையும் கவனித்து மூன்று பிள்ளைகளையும் சமாளித்து அனுப்புவது லேசுப்பட்ட காரியமா?

ஒவ்வொன்றையும் தட்டி எழுப்பி, காபி போட்டு, படிக்கச் சொல்லி, குளிக்க வைத்து, உடுப்பு மாற்றி "அம்மா..டாட்டா..' என விடை தரும் கையசைப்புடன் ஒரு கட்டம் முடிகிறது. இன்னும் பத்துப் பாத்திரங்கள் கிடந்தன. அவிழ்த்துப் போட்ட துணிமணிகள் இருந்தன. வீடும் அலங்கோலமாகக் கிடந்தது. குழந்தைகள் உள்ள வீட்டில் எதுவும் ஒழுங்காக இருப்பதில்லை. குழந்தைகள் தான் குழந்தைகளாக இருக்கிறதென்றால் ஆம்பளையும் அப்படித்தான். குடித்துப் போட்ட துண்டு பீடியையும், எரிந்த தீக்குச்சியையும் விட்டெறிய இந்த இடம் என்று கிடையாது.

கூட்டி நிமிர்வதற்குள் இடுப்பு வலித்தது. இந்த வலி சமீபத்திய உபத்திரவம். "ஒரு நாளைக்கு டாக்டர்கிட்டப் போயி காட்டணும்..." என வழக்கம் போல நினைத்துக் கொண்டாள்.

"இந்த ஆம்பளையை இன்னும் காணமே..." என்று தோன்றியது. இருப்பதைப் போட்டு பாத்திரங்களையும் கழுவி வைத்தால் காலைப் பொழுது ஒழியும். மத்தியானம் இத்தனை பரபரப்பில்லை. யாரும் சாப்பிட வரமாட்டார்கள். காய்கறிக்காரி வந்த பிறகு அடுப்பைப் பற்ற வைத்தால் போதும்.



"வர தேர்தல்ல நம்ம தி.க.க.வே. கட்சித் தலைவருக்கே ஓட்டுப் போடுங்கம்மா..."

"ஏம்பா, ரசப்பிச்சை...?"

"அவருக்குத் தேர்தல் நிதி பத்து லட்சம் கடன் தந்திருக்கேன். அதைத் திருப்பி வாங்கணுமே!"

– எஸ்.எஸ். பூங்கதிர்

அவன் எத்தனை மணிக்கு வருவான் என்பதுதான் திட்டமில்லாமல் இருந்தது. ரொக்கம் கொடுத்து வாங்குவது என்ன கெட்டுப் போயிற்று என நினைக்கிறானோ என்னமோ. எல்லோருக்குமே கொஞ்சம் இளப்பமாகிவிட்ட மாதிரித்தான் இருந்தது. இரண்டு வீடு தள்ளி நின்றுதான் பால்காரன் மணியடிக்கிறான். இரண்டு மூன்று தடவை கூப்பிட்ட பிறகுதான் மளிகைக்கடை சிப்பந்திகள், "என்ன வேணும் பாயம்மா." என்று கேட்கிறார்கள். சில்லறைக் கடன்களுக்குக் கூட சந்திக்க நேரும் அவமானங்கள்..."

"ம்ஹ்ம்... என்னிக்குத்தான் நல்ல காலத்தை தருவானோ இந்த ஆண்டவன்..."

ஜமீலா இன்னும் வரவில்லை. அந்தண்ணன் வீட்டில் இருந்தார். லீவு போலும். சின்னதானாலும் அரசாங்க உத்தியோகம். நெருக்கடிகள் கிடையாது. அடிக்கடி லீவு போட்டுவிட்டு, காலாட்டியபடி நாற்காலியில் சாய்ந்து கிடப்பதைக் காண முடியும்.

முன்பெல்லாம் அம்மாவுக்கு அவளைக் காணாமல் இருக்க முடியாது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது தேடி வந்து விடும். அத்தாவின் மவுத்திற்குப் பிறகு அம்மாவிடத்தில் பழைய கம்பீரத்தையும், தானே எதையும் தீர்மானித்துச் செய்கிற சுதந்திரத்தையும் காண முடியவில்லை. காலில்நீர் சுரந்து அதிகமாக நடக்க முடிகிறதில்லை என்று சொன்னாள் ஜமீலா. அண்ணன்கள் டாக்டரிடம் கூட்டிப் போனார்களா என்று தெரியவில்லை. தானும் பார்த்து எவ்வளவு நாளாகிறது...


மனித உறவுகளை நினைக்கும்போது விநோதமாகத்தான் இருந்தது. மூன்று குழந்தைகளுக்குத் தானே அம்மாவாகி விட்ட பிறகும், தன் அம்மாவுக்காக ஏங்குவதும்- சம்பந்தமில்லாத ஒருத்தியின் குறுக்கீட்டில் வாழ்வே திசை மாறிப் போய் விட்டதும்- யாரோ அன்னியனுக்குப் புருஷன் என்கிற உறவைத் தந்து, சுக துக்கங்களை பங்கிட்டுக் கொள்வதும்...

படிப்பை நிறுத்திய அத்தாதான் கழுத்திலும், காதிலும் ஆசையாகப் பண்ணிப் போட்டார். வியாபார நஷ்டத்தில் மஜீது ஒவ்வொன்றாக அழித்த போதும், தன் வாயால் மருமகனை மோசமான ஆள் என்று சொன்னதில்லை அவர்.

தொடத் தொட நினைவுகள் தொடர்ந்து கொண்டேதான் போகின்றன. "த்தூ... சைத்தானே..." என தானே கலைத்தால்தான் உண்டு.

மணி ஒன்பது அடித்தது.

"இனியும் உக்கார்ந்துக்கிட்டு இருந்தா அம்புட்டுத்தான்..." என நினைத்தபடி ஆயிஷா எழுந்தாள். மஜீது வருவது இனி சந்தேகம்தான். காலை உணவு இல்லாமல் தொழிலுக்குப் போய் விடும்படியாகவே அனேக நாட்களில் ஆகி விடுகிறது. பாவம்.



"பாப்பா, ஏம்மா பார்க்குல தனியா நின்னுக்கிட்டு இருக்கே?"

"எங்க அப்பாவும் அம்மாவும் குட்டி ரயில்லே ரவுண்ட் போயிருக்காங்க. அவங்களுக்காக 'வெயிட்' பண்றேன்!"

- வடவள்ளி ராமசுப்ரமணியன்

அடுப்பு மேட்டில் குழந்தைகள் மிச்சம் வைத்த தோசை மூடி வைத்திருந்தது. நின்றபடியே வழித்து வாயில் போட்டுக் கொண்டாள். பசி தணியவில்லை. என்றாலும், தன் ஒருத்திக்காக மீண்டும் அடுப்பைப் பற்ற வைக்க வேண்டாம்.

எதிர்வீட்டில் உரத்த குரலில் பேசிக் கொள்வது கேட்டது. சண்டையா?

அவசரமாக வாசலுக்கு வந்தாள். ஜமீலா கழுத்து நரம்பு புடைக்கப் புருஷனுடன் வாதம் பண்ணிக் கொண்டிருந்தாள். அந்தண்ணனும் பாய்கிற மாதிரி எதிரில் நின்றிருந்தார்.

ஏதோ விபரீதம்தான் என்று புரிந்தது ஆயிஷாவுக்கு.

"என்ன...என்ன..." என கேட்டுக் கொண்டே அவர்களது வீட்டிற்குள் நுழைந்தாள். சத்தம் கேட்டதும் அந்தண்ணன் சட்டென்று விலகி உள்ளே போய் விட்டார்.

ஜமீலாவுக்கு சிநேகிதியைக் கண்டதும், கண்கள் கலங்கிக் கொண்டு வந்தது.

"என்ன.... ஜமீலா?" ஆயிஷா திகிலுடன் கேட்க-

"பாரு... அடிக்க வர்றதை... ஆம்பளையாம்... ஆம்பளை..." குரல் தழுதழுக்கச் சொன்னாள் ஜமீலா. "குடுத்தாத்தானே வாங்கிட்டு வரமுடியும்? பொறந்த வீட்டிலும் பணம் குவிச்சு வச்சா கெடக்குது? இல்லெ... மரத்துல காய்ச்சுத் தொங்குதா? ஏண்டி.... சும்மா வந்தேன்னு கேட்டா நான் என்ன பண்றது.... நீயே சொல்லு..."


என்ன நடந்திருக்கும் என்பது ஆயிஷாவுக்குப் புரியவில்லை. புரியாமலும் இல்லை. ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. இன்றைக்கு மறுபடியும் காதர்பீயைப் பற்றி பேச வேண்டியிருக்கும் என்பதுதான் அது.

தன் வீட்டிற்கு சிநேகிதியை அழைத்துச் செல்ல முற்பட்டாள் ஆயிஷா.

இரு தினங்களாக, இரண்டு பகல், ஈரிரவுகளாகக் கிருஷ்ணசந்திரன் வீட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

அன்று அவளை அலுப்பும் சலிப்புமாக முத்தமிட்டு விட்டு அறைக்குள் சென்றான். மறுநாள் காலையில் அலுவலகம் செல்வதற்கான உடையுடன்தான் அறையை விட்டே வெளியே வந்தான்.

கணவன் அவ்வளவு சீக்கிரம் கிளம்பக் கூடும் என்று எதிர்பார்த்திராத உதயரேகா, அவசரமாகச் சமையல் அறைப்பக்கம் செல்லவும், "எனக்கு இப்போது எதுவும்



வேண்டாம்'' என்று பொதுப்படையாக உரைத்த படியே மடமடவென்று வெளியேறிச் சென்று விட்டான்.

அன்றிரவு அவன் வீடு திரும்பவில்லை.

எட்டு மணி அளவில், "இன்று எனக்காகக் காத்திராமல் 'கேட்' பூட்டி விடச் சொல். நான் வருவதற்கில்லை" என்று மொட்டையாக ஒரு டெலிஃபோன் தகவலுடன் முடித்து விட்டான்.

ஏன் வரவில்லை? வெளியூர் போகிறானா? தொழிற்சாலையில் முன்பே ஒப்புக் கொண்ட வேலை எதுவும் முடிக்க வேண்டியதாகி அங்கே இருக்கிறானா? என்ன, ஏது என்று அவளுள் ஆயிரம் கேள்விகள்.

ஆனால் யாரிடம் கேட்பது?

மறுநாள் காலையிலும் கணவன் வராது போகவும், அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு விசாரித்தாள்.

விசாரிப்பதில் கூட ஒரு குழப்பம். வந்தாரோ, வரவில்லையோ, எப்போது வந்தார் என்று வேவு பார்ப்பது போலத் தோன்றி விடக் கூடாது.

எனவே, டெலிஃபோனை எடுத்த செகரட்டரியிடம், "அவரிடம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறதே!" என்று ஆழம் பார்த்தாள்.

வந்திருக்கிறானா, இல்லையென்றால் தொழிற்சாலை, மீட்டிங் என்று எங்கிருந்தாலும்

மாலை மயங்குகின்ற நேரம்

ரமணி சந்திரன்

தெரிந்து விடும். அவனே பேசினால், இரவு ஏன் வரவில்லையென்று ஏதோ பேசிக் கொள்ளலாம்...

ஆனால், "முக்கியமான வேலை; எந்தவித இடையூறும் கூடாது என்று சொல்லி யிருக்கிறாரே, மேடம்" அந்தப் பெண்மணி மரியாதையுடனேயே மறுத்தாள். "ஆனால் மேடம், அவருக்கு நீங்கள் அழைத்ததாகக் குறிப்பு அனுப்பி வைக்கிறேன். அவரே தொடர்பு கொள்வார்" என்றாள் தொடர்ந்து.

செகரட்டரி சொன்னதைச் செய்திருப்பாள் என்பதில் உதயரேகாவுக்கு ஐயமில்லை. ஆனால் கிருஷ்ணசந்திரன் அவளை நாடிப் பேசவே இல்லை.

மறுநாளும் இதுவே தொடரவும் உதயரேகா அதிர்ந்தாள். அவளைப் பார்க்க, பேச, எதுவுமே பிடிக்காமல் என்ன இது? அவன் இவ்வளவு வெறுப்படைய அப்படிப் பெரிதாக என்ன நடந்து விட்டது?

ஒரே ஓர் இதழணைப்பு.

அதையும் அவள் ஒன்றும் கீழ்த்தரமாக நடந்து, பாலுணர்வைத் தூண்டி விட்டுப் பெற வில்லையே!

அல்லது, வாழ்க்கையைச் சீரமைக்க அவள் இடைவிடாது முயன்றதை, இதற்காகத்தான் பறக்கிறாள் என்று எண்ணி விட்டானா?

கணவன் என்ன நினைக்கிறான்? என்ன செய்கிறான் என்று அவளால் கண்டுகொள்ள முடிந்தது? அவனைப் பற்றிய ஆயிரத்தெட்டு குழப்பங்களில் இதுவும் ஒன்று என்று பெருமூச்சுடன் ஒதுக்க முயன்றாள் உதயரேகா.

எப்படியோ, அவன் உள்ளூரில்தான் இருக்கிறான் என்பது தெளிவுபட்டது. பகலில் அவன் இருக்கும் இடமும் தெரிந்து போயிற்று. ஆனால் இரவில்?

அதிலும், இரண்டாம் நாள் இரவு 'வருவதற்கில்லை' என்று கிருஷ்ணசந்திரன் டெலிஃபோன் செய்த போது (அதிலெல்லாம் அவன் ரொம்பவும் ஒழுங்குதானே!) அருகில் ஒரு பெண்ணின் சிரிப்பொலி கேட்கவும் உதயரேகாவுக்குக் குழப்பத்தோடு கோபமும் கூட உண்டாயிற்று.

அவ்வளவு அருகில் அவனை ஒட்டிக் கொண்டு நிற்கிறாளா, அவள்? ஆனால், அது வேறு யாராவதாகவும் இருக்கலாம்...

தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு, எங்கே இருக்கிறான், எப்போது வருவான் என்று அவள் விசாரிக்கத் தொடங்குமுன், எதிர்முனையில் அவன் டெலிஃபோனை வைத்து விட்டிருந்தான்.

அவளுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கும் நாகரிகம் கூட இல்லாமல் வைத்து விட்டானே!

கர்ரென்று பொங்கிய சினத்துக்கு வடிகால் கிடைக்காமல் குறுக்கும் நெடுக்குமாகக் கால் ஓயுமட்டும் நடந்தாள் அவள்.

கிருஷ்ணசந்திரன் எங்கிருக்கிறான்? என்ன செய்கிறான்?

தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல குமைந்தபோதும், இது பற்றி யாரிடமும் அவள் மூச்சுக் கூட விடவில்லை. அவனைப் பெற்ற தாய் அவளிடமும் ஒரு தாயின் பிரியத்தோடு பழகுகிறவளான காந்திமதியிடம் விசாரிக்கக் கூட அவளது தன்மானம் இடம் தரவில்லை.

மணமாகி மூன்றே மாதங்களுக்குள், உள்ளூரில், அதுவும் இரவில் கணவன் தங்கியிருக்கும் இடம் எது என்று அவனுடைய இளம் மனைவிக்குத் தெரியவில்லை என்றால் அதன் பொருள் என்னவாக இருக்க முடியும்?

கணவனின் இருப்பிடம் பற்றி மற்றவர்களிடம் விசாரிப்பதை விட, அவளது திருமண வாழ்வு தோல்வியுற்று விட்டதாக தமுக்கடித்துச் சொல்லி விடலாம்!

இன்னமும், தோல்வியுற்று விட்டதாக அவளால் ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை அவள் தோற்று விட்டதாகப் பிறர் எண்ணுவதைச் சகிக்கவும் இயலவில்லை.

புகையும் எரிமலையாய்த் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டு இருந்தவளிடம், சமையல்காரன் நாகராஜன் வந்து நின்றான். தன் மாதாந்திர விடுமுறையை, ஒரு வாரம் முன்னதாக அன்று எடுத்துக் கொள்ளும்படி அய்யா இரண்டு நாள் முந்தியே அனுமதி கொடுத்து விட்டுப் போனதாகச் சொல்லி, அன்று 'இனம் பட்டுமா' என்று அவன் கேட்ட போது அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாகவே இருந்தது.

இவன் செய்து வைத்து விட்டானே; வேண்டாமென்றால் வருத்தப்படுவானே என்று கஷ்டப்பட்டு உணவை விழுங்க வேண்டாம்!

சமையல்காரனின் சம்பளப் பணத்தையும் அவனுடைய பெற்றோரிடம் வளரும் தாயற்ற சிறுமியான மகளுக்கென்று அவன் ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த பாவாடை சட்டையையும் கொடுத்து, உதயரேகா அவனை அனுப்பி வைத்தாள்.

வீடு பெருக்கித் துடைத்து, துணி துவைக்கிறவளும், தோட்டக்காரனும் வேலை முடிந்ததும் அவரவர் வீட்டுக்குப் போய் விடுகிறவர்கள்.

எடுபிடிப் பையன் மட்டும்.

வேளைக்கு வெளியே போய்ச் சாப்பிட்டு விட்டு வருமாறு அவனிடம் பணம் கொடுத்து அனுப்பி விட்டு, அமைதியற்று வீட்டினுள் அலைந்து கொண்டிருந்த போது அவளுக்கு ஒன்று உறைத்தது.

இரண்டு நாட்களாக வீடு வராத கணவனின் பாராமுகத்தை விடவும் அவனது பிரிவே உதயாவை மிகவும் அதிகமாகப் பாதித்திருக்கிறது. அவனைப் பார்ப்பதும், அவன் குரலைக் கேட்பதும் மூச்சுக் காற்று போல அவளுக்கு இன்றியமையாததாகி விட, கணவனைக் கண்ணால் பார்த்தாலே போதும் போல ஓர் ஏக்கம் பெரும் சுமை போல அவள் மனதை அழுத்தியது.

நாயை அவிழ்த்து விட்டு விட்டு, வெளியே போய் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எடுபிடிப் பையனை அனுப்பி விட்டு இலக்கற்று அவள் வீட்டினுள் திரிந்து கொண்டு இருந்த போதுதான், கேட் திறந்து அவனது கார் உள்ளே வரும் சப்தம் கேட்டது.

அவன்தான்!

ஆவலோடு, மாடியிலிருந்து வேகமாக இறங்கி ஓடி வந்தவளின் கண்ணெதிரே இன்னொரு பெண்ணைப் பாதி அணைத்தாற்போல அழைத்து வந்து கொண்டிருந்தான் அவளுடைய அருமைக் கணவன்!

தன் கண், கண்ட காட்சியை நம்ப மாட்டாதவளாக, மனைவி, திக்பிரமித்து நிற்பதை லட்சியமே செய்யாமல், அந்த இன்னொருத்திக்குக் கைலாகு கொடுத்து மாடிக்குக் கூட்டிச் சென்றான் கிருஷ்ணசந்திரன்.

இவனது தாங்கல் இல்லாவிட்டால் படிகளில் உருண்டு விழுந்து அவள் செத்து விடுவாளா என்று உள்ளம் கொதித்தது உதயரேகாவுக்கு.

இட்டத்தட்ட இருபத்து மூன்று வயதை எட்டிக் கொண்டிருந்த உதயரேகா, தனது இத்தனை ஆண்டு வாழ்நாளில், இப்படி ஒரு நிலைமைக்குத் தன்னைச் சித்தப்படுத்திக் கொள்ளவே இல்லை.

கணவன் உத்தமன் என்று நம்பி அவனுக்கு அவள் கழுத்தை நீட்டவில்லை; உண்மையே!

குடிகாரன்; தரமற்ற பெண்களோடு தகாத உறவு கொண்டிருந்தான் என்பதையும் அறிந்தேதான் அவனை மணந்து கொண்டாள்.

அவனைத் திருத்தி நல்ல வாழ்வு வாழ வைக்க வேண்டும்; அவனுடைய பெற்றோரின் வாடி விட்ட முகங்களிலே புன்னகையை மீண்டும் மலரச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கங்களுக்காக, மனதில் உறுதியோடு அவனுக்கு மாலையிட்டாள்.

பிழைதிருத்தும் முயற்சியில் சிறு வெற்றி பெற்று விட்டதாகக்கூட எண்ணியிருந்தாள்.

ஏனெனில், அவ்வப்போது - அதுவும் கூட எப்போதாவது ஒருநாள்தான்- அவன் தள்ளாடிய போதும் இந்தப் பிழை வழி அவன் செல்லவே இல்லையே!

ஆக, இரண்டு நாட்கள் கிருஷ்ணசந்திரன் தங்கியிருந்தது இவள் வீட்டில்தானா?

அவன் டெலிஃபோன் செய்த போது கேட்ட அந்தச் சிரிப்பொலி! டெலிஃபோன் செய்ததே இவள் வீட்டிலிருந்துதானா!

என்ன அநியாயம்?!


அவளை இங்கேயே அழைத்து வர இவனுக்கு என்ன துணிச்சல்? அவனோடு கூட வர அவளுக்கும்தான் என்ன தைரியம்!

அந்தக் காலத்தில், ஆண் ஆதிக்கம் மிகுதியாக இருந்த அந்த நாளில் கூடக் கண்ணகி இருந்த வீட்டுக்குக் கோவலன் மாதவியைக் கூட்டி வரத் துணியவில்லை! வருவதற்கு மாதவிக்கும் தைரியம் இல்லை.

இன்றைக்கு, இந்த இருவருக்கும் இவ்வளவு திமிரா!

கண்ணை இருட்டிக் கொண்டு கோபம் வந்ததே தவிர, அந்த நிமிடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று உதயரேகாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்தப் பெண்ணைத் தலைமுடியைப்



"ஆர்த்ரிட்டீஸ் வலியின்றி 3 முழு வருடங்கள்..."



திரு. J.R. ஜோஷி

"இன்று 10 முதல் 12 மணி நேரம் சுலபமாக என்னால் பணிபுரிய முடிகிறது-TABE-க்கு நன்றி."

"ஸ்பிக் நிறுவனத்தின் பிராந்திய மேலாளர் பணியிலிருந்த நான் அதிகமான அளவில் மாதத்தில் 20 நாட்கள் பயணம் செய்ய வேண்டி இருந்தது. 1990-ம் ஆண்டு ஆஸ்டியோ ஆர்த்ரிட்டிஸின் அறிகுறிகள் என்னை பாதித்தது. படிப்படியாக வலியின் வேகம் அதிகரித்து 1/2 மணி நேர வேலை கூட என்னை சோர்வடையச் செய்தது. இதனால் வேலையிலிருந்து ஓய்வு பெற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானேன். நான் படுக்கையிலும் வீழ்ந்ததால் என் குடும்பத்திற்கு ஒரு சுமையாகி விட்டேனோ என்ற அச்சம் என்னை சூழ்ந்தது.

1992-ல் செப்டம்பர் மாதம் TABE-விளம்பரத்தை பத்திரிக்கைகளில் பார்த்து அங்கு சென்றேன். சிகிச்சை 90 நாட்கள் நீடித்தது. "இன்று சிகிச்சை முடிந்து 3 வருடங்கள் ஆகியும் எனக்கு ஆர்த்ரிட்டிஸ் வலி திரும்ப வரவேயில்லை." தற்போது ஒரு பெரிய தூவல்லரியை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு இருந்தாலும், என்னால் சுலபமாக அதைச் செய்ய முடிகிறது."

B-21, அபிராமி அபார்ட்மெண்ட்ஸ், 98, 5, பாபு ராஜேந்திர பிரசாத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

★ காலத்தால் சோதிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை பவுல்டீஸ் (poultice) மூலம் நாங்கள் விரிவானதொரு வெளிப் பிரயோக சிகிச்சை திட்டத்தை **ஆர்த்ரிட்டிஸ், ஸ்பாண்டிலிட்டிஸ், தோள்பட்டை வலி, இடுப்பு வலி, குதிகால் வலி** போன்றவைகளுக்கு தகுதி வாய்ந்த ஆயுர்வேத மற்றும் அலோபதி டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குகிறோம்.

★ "இரு வேறு நபர்கள் ஒன்றுபோல் இருப்பதில்லை" என்பதை TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட் நன்கு உணர்ந்துள்ளன. எனவே, காலம் மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம்.

TABE/332

கலந்து ஆலோசிக்க, இப்போதே தொடர்பு கொள்க: தொலைபேசி: 8553772

1, ஸ்ரீரங்கம் அவின்யூ, 53, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 8

காலை 9.00 மணி முதல்: இரவு 7.00 மணி வரை. வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.
அனைத்து முக்கிய கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

TABE CARE CLINICS (P) LIMITED

TABE சிகிச்சை நிலையங்கள் இப்பொழுது TABE கேர் கிளினிக்ஸ் (பி) லிமிடெட்

NELLAI BENEFIT FUND LIMITED MADRAS

நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்

26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178

பரிசு! பரிசு! பரிசு!
14 கிராம் தங்க செயின்

1. பிக்சட் டெபாசிட் 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் 22% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் 24% + 3% போனஸ்

4. சுரேகா டெபாசிட் :


செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும்	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1000	23 வருடம்	ரூ. 1,00,000

5. பிறந்த நாள் டெபாசிட் :

செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும்	வருடம் தோறும் பிறந்த நாள் அன்று	திருமணத்தின் போது கிடைக்கும் தொகை
ரூ. 4250	ரூ. 1000	ரூ. 5000

6. வாரிசுதாரர் டெபாசிட் :

ஒருமுறை செலுத்தும் டெபாசிட்	காலம்	மாதாமாதம் பெறும் தொகை
ரூ. 10,000	180 மாதம்	ரூ. 7,500
	300 மாதம்	ரூ. 15,000



வீடு நிலம் தங்க நகைபேரில் கடன் வழங்கப்படும்

GROWTH THROUGH CUSTOMER SATISFACTION

KUBER MUTUAL BENEFITS LTD.

(A Central Govt. Approved Nidhi Company)

A UNIT OF KUBER GROUP-ESTD. 1980

KUBER FIXED DEPOSIT SCHEME

FIXED DEPOSIT SCHEME

Time Period	46 Days	3 Mth	6 Mth	1 Yr	2 Yr	3 Yr	4 Yr	5 Yr
% Int P.A.	13.5%	14.5%	15.5%	17.5%	18.5%	19%	20%	21%

Min. deposit for 46 days & 3 months is Rs.5000/- addl. in multiples of Rs. 1000/- Post dated interest cheques issued in advance.

CUMULATIVE DEPOSIT SCHEME

Time Period	1 Yr	2 Yrs	3 Yrs	4 Yrs	5 Yrs
% Int P.A.	18.5%	19.5%	20%	21%	22%

Minimum deposit Rs.1000/- and additional in multiples thereof. Loan facility upto 75% of total amount deposited. Nomination facility avbl.

SENIOR CITIZEN WELFARE YOJANA

Applicable for persons above 55 years, Pensioners, Handicapped and Widows. Minimum Deposit Rs. 5,000/-.

READY RECKONER - I

Period	Rate of Interest (p.a.)	Monthly Interest on Rs. 5,000 Deposit (in Rs.)	Monthly Interest on Rs. 10,000 Deposit (in Rs.)
12 Months	20.5%	85.50	171.00
24 Months	21%	87.50	175.00
36 Months	21.5%	89.60	180.00

Interest rate applicable as per Ready Reckoner - I. Post -dated interest cheques for the entire period will be issued in advance.

READY RECKONER - II

Below 12 Mths	12 Mths	24 Mths	36 Mths
13%	15%	16%	17%

Premature withdrawal available as per Ready Reckoner-II applicable upto date of withdrawal without any penalty or service charges.

KUBER DHANALAXMI

DOUBLE IN 42 MONTHS **TRIPLE IN 60 MONTHS**

Loan facility available upto 75% of total deposit after 12 months. Minimum deposit Rs.1000/- and additional amounts in multiples thereof. Premature withdrawal facility after one year permitted & the interest rate payable will be at our Fixed Deposit rate of interest applicable upto the date of premature withdrawal.

Transactions with members only

KUBER MUTUAL BENEFITS LTD.

Branch Off : R-4, IInd Floor,Hong Kong Complex, Ramanathan Street, T.Nagar, Madras - 600 017. Ph. : 4340790

Regd. Off. : Kuber Bhawan, Begum Bridge Road, Meerut Ph.: 543716, 543717

Head Off : Kuber House, S-32, Greater Kailash-I, New Delhi - 110048.
Ph.: 6412749, 6472685, 6211877, Fax: 011-6420378 / 6211879



''எங்க எதிர் வீட்டுக்காரம்மா ரொம்ப மோசம்... நான் அவங்ககிட்டே கடனா வாங்கினதையெல்லாம் ஞாபகமா திருப்பி வாங்கிப்பாங்க...''

— கார்த்திக்

பிடித்து இழுத்துச் சென்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவதா? உள்ளுணர்வு அப்படித் தான் உந்தியது.

தள்ளத்தான் வேண்டும்.

ஏனெனில் இது நாசூக்குப் பார்க்கிற நேரம் அல்ல. முதலில் அந்தத் தெரு நாயை வீட்டை விட்டுத் துரத்த வேண்டும்; துரத்தியே ஆக வேண்டும்!

இன்னமும், இப்படியும் செய்வானா என்ற திகைப்பு மறையவில்லை. கூடவே, இப்படிச் செய்வதா என்ற ஆத்திரமும், இந்த வீட்டில், ஓர் அசிங்கம் நடக்க விடக் கூடாது என்ற பிடிவாதமுமாகப் படியேறிச் சென்று, கண வனின் அறைக் கதவை உதயரேகா ஓங்கித் தட்டினாள்.

இந்த இடையீட்டை எதிர்பார்த்தவனைப் போல, அவள் இரண்டாம் தடவை தட்டு முன் பாக, சுளித்த புருவங்களும் கோப முகமுமாக, அவளை அவன் கண்ட முதல் நாளை ஞாபகப் படுத்தியபடி, கிருஷ்ணசந்திரன்தான் கதவைத் திறந்தான்.

"இந்...த நேரம் கதவைத் தட்டுகிறாயே, நாகரிகம் இருக்கிறதா?" என்ற கேள்வி வேறு.

கொதித்து, "நாகரிகம் பற்றி நீங்கள் பேசு கிறீர்களா? மனைவி இருக்கிற இடத்திற்கு இப்படி ஒருத்தியை அழைத்து வந்திருக்கிறீர் களே; உங்களுக்கு நாகரிகம் என்றால் என்ன வென்று ஏதாவது தெரியுமா? அல்லது, உங்களோடு ஒட்டிக் கொண்டு, திறந்த வீட்டில் ஏதோ ஒன்று மாதிரி உள்ளே வந்து உட்கார்ந் திருக்கிறாளே, இவளுக்கும்தான் அப்படி ஒரு வார்த்தை இருப்பதேனும் தெரியுமா?" என்று, உள்ளே அவனது நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணை நோக்கிக் கண்களில் தீயெழ உறுத்தாள்.

அவள், தன் கையில் இருந்த பத்திரிகையை ஆழ்ந்த கவனத்துடன் படித்துக் கொண்டிருந் தாள் போலும். கணவன் மனைவி சச்சரவில் அந்தக் கவனம் கலைந்து விட, தன்னைக் கைநீட்டிக் காட்டி, உறுத்து நோக்கிய உதய ரேகாவைச் சிறு திகைப்புடன் விழியகல நோக்கினாள்.

'ஒன்றும் தெரியாத பாப்பா; உள்ளே போய்ப் போட்டுக் கொள்வாளாம் தாழ்ப்பாள்' என்றால் அது இவளுக்குத்தான் முழுக்கப் பொருந்தும் என்று ஆத்திரத்துடன் நினைக் கும்போதே, இவளை எங்கோ பார்த்திருக் கிறோம் என்ற எண்ணமும் உதயாவிற்கு உண் டாயிற்று.

அது பற்றி மேலே யோசிக்கு முன்பே, கிருஷ்ணசந்திரன் புருவம் நெரிய முன்னிலும் சினம் மிகப் பேசினான். "ஆமாம். தெரியாது தான். நாகரிகம் என்றால் அதை எழுத்துக் கூட்டிப் படிக்கக் கூட எங்கள் இருவருக்கும் தெரியாதுதான். அதற்காக உன்னால் என்ன செய்ய முடியும்? உன் மாமியார், மாமனாரிடம் முறையிடுவதானால்... வெல், அவர்களது டெலிஃபோன் நம்பர் உனக்குத் தெரியும். அன்றி, வீட்டை விட்டு வெளியேறுவதானால் கார் வெளியே நிற்கிறது; எடுத்துக் கொண்டு தாராளமாகப் போகலாம். இல்லை, அடியோடு முழுக்குப் போட்டு விட்டு, நீ ஒரேயடியாக விலகி விடுவதானாலும் அதற்கும் முன்பே என் சம்மதம் தந்தாயிற்று.. விவாகரத்துக்கு இதையே நீ காரணமாகப் பயன்படுத்திக் கொள்வ தானால் அதுவும் எனக்கு ஒப்புதலே. போதுமா? தயவுசெய்து இப்போது என்னைத் தொல்லை செய்து என் நேரத்தை வீணடிக்காதே. நான் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கப் போகிறேன். இன்னொன்றும் நினைவில் வை. இன்றைய இரவில் நீ எத்தனை தரம் தட்டினாலும் இனி நான் இந்தக் கதவைத் திறக்கப் போவது இல்லை. குட்பை" என்று கூறிக் கதவை ஓங்கி அறைந்து சாத்தித் தாளிட்டான்.

முகத்திலேயே அறைந்து சாத்தி விட்டாற் போல அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு ஹோவென்று வந்தது.

அவளைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன் - தாலி கட்டிய நாளிலிருந்து அவன் தீண்டாமை விரதம் காத்தான் என்பது வேறு விஷயம் - அவளது கவுரவம் காக்கக் கடமைப் பட்ட அவனே இன்னொரு பெண் முன் அவளை அவமானப்படுத்தி விட்டானே!

அவனுடைய மனைவி - ஒரு குடும்ப விளக்கு பிரகாசிக்கும் இடம் என்ற கூச்சமே இல்லாமல், அவளும்தான் எவ்வளவு ஸ்டை லாகக் கால் மேல் கால் போட்டு அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

பத்திரிகை!

அந்த வினாடியில் அவள் அனுபவித்த வேதனை தவிப்பு அத்தனையையும் மீறிக் கொண்டு அந்த முரண்பாடு உதயரேகாவை உறுத்தியது.

(தொடரும்)

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில் ஆங்கிலம், தமிழ் ரூ. 40/-
எதிர்கால கணிப்புடன் ரூ. 120/-
ஆண்டு பலன் : ரூ. 50/-
கல்யாண பொருத்தம் : ரூ. 40/-

ASTROLOGY SOFTWARE FOR SALE.

ஸ்வயம்வரமாலா

(GOVT. REGD.)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. போன் : 425822,

7-எ, சாந்தி வஹார் காம்ப்ளக்ஸ், லஸ், சென்னை - 4. போன் : 846278,

88, 1, 16th Cross, 6th Main, Malleswaram, Bangalore - 560 055. Ph. : 3340146

For the latest releases in Music rush to

New Music India


We deal with Indian classical, Hindi films & Tamil films Cassettes.

We also deal with compact discs and for further more details Contact :

New Music India

☐ Audio, ☐ Video, ☐ CD

7/4 L.B. Road,
(Near Adyar Signal)
Adyar, Madras - 600 020.
Phone : 491 8672



ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

பதிவு எண் : 18-23759/92

H.O. No. 288, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 7 Ph : 6421801/6415549
B.O. No. 23, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. Ph : 4934009

டெபாசிட்டுகள் ரூ 5 கோடியை தாண்டியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிக்சட் டிபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகள் வழங்கப்படும்
வட்டிக்கான காசோலைகள் முன்கூட்டியே வழங்கப்படும்
மேலும் பயனுள்ள திட்டங்களுக்கு நேரில் அணுகவும்

சென்னை மாநகர சொத்துக்கள் மீது கடன் கிடைக்கும்





நகைக்கடன் கிராம் 1க்கு ரூ. 300 மாதவட்டி ரூ. 1.95 மட்டும் வேறு கட்டணம் இல்லை

உச்சவரம்பு கிடையாது
உறுப்பினராகி பயன் பெறுவீர்

H.O. வெள்ளி விடுமுறை
B.O. செவ்வாய் விடுமுறை

வேலை நேரம் : காலை : 8.30 - 12.30 மாலை : 2.00 - 6.00



சேர்மன் : P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தக்கோட்டம், சென்னை - 600 003.

PB குரூப் கம்பெனி

அருளுக்கு ஸ்ரீ முத்துக்குமரன்! பொருளுக்கு PB குரூப் நிறுவனம்!

வாய்ப்பிளக்கச் செய்யும் வான வனிதைகள்!

கடைசி ஓவரில் அடுத்தடுத்து சிக்ஸர் அடிக்கிற பேட்ஸ்மேன் போல, 1995ன் கடைசி மாதத்தில் இரண்டு செயற்கைக் கோள்களைப் ப்டு அமர்க்களமாக வானத்தில் உலாவர வைத்து உலகை நிமிர்ந்து பார்க்க வைத்திருக்கிறது இந்தியா.

இன்சாட் இரண்டு சி (INSAT-2c) என்று தகவல் தொடர்புக்கான செயற்கைக்கோள், ஐஆர்எஸ் ஒன்று சி (IRS-1c) என்று தொலைவிலிருந்து விவரம் கண்டு உணரும் ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள்... இரண்டும் இரண்டு விதம்.

இன்சாட் டிசம்பர் ஏழாந்தேதி பிரஞ்ச் கயானாவிலிருந்து விண்ணில் ஏவப்பட்டு, பூமத்திய ரேகைக்கு முப்பத்தாறாயிரம் கிலோ மீட்டர் நேர் மேலே சுற்றி வரும், பூமியோடு ஒத்திசைந்த (GEOSTATIONARY) செயற்கைக் கோள். ஒரு சுற்றுக்கு ஒரு நாள் எடுத்துக் கொள்ளும்.

ஐஆர்எஸ் டிசம்பர் இருபத்தெட்டில் உஸ்பெஸ்கிஸ்தானிலுள்ள பைகானோரிலிருந்து விண்ணேறியது. பூமிக்கு நெருக்கமாக, எண்ணூற்றுப் பதினேழு கிலோ மீட்டர் உயரத்தில் சுற்றுகிற இது, உலகை வலம் வர நூற்று பத்து நிமிஷம்தான் எடுத்துக் கொள்ளும். சூரியனோடு ஒத்திசைந்த (SUN SYNCHRONOUS)செயற்கைக் கோள் இது.

இன்சாட்டில் தகவல் தொடர்பு, தொலைக்காட்சி, தொலைபேசி இன்னோரன்ன சங்கதிகளுக்காக ஏற்பட்ட டிரான்ஸ்பாண்டர் என்ற மின்னணுக் கருவிகள் – சிபேண்ட், நீட்டிய சி-பேண்ட், கேயு-பேண்ட், எஸ்-பேண்ட் என்று வகை வகையான டிரான்ஸ்பாண்டர்களின் பேண்டு கோஷ்டி – இதற்கு முன் நாம் ஏவிய எந்தத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளிலும் மேடையேறியதில்லை.

• ஐ.ஆர்.எஸ். 1சி



ஐஆர்எஸ்ஸில் படம் எடுத்தால்தான் பிரதானம். பான்க்ரோமேடிக் (PAN), லீனியர் இமேஜிங் ஸ்கேலார் ஸ்கேனர் (LISS) வைடு பீல்டு சென்சர் (WIFS) என்று மூன்று விசேஷ காமிராக்கள் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை இந்திய நிலப் பரப்பையும், ஆறுகளையும், மலைப்பிரதேசத்தையும் படம் எடுத்துத் தள்ள, கம்ப்யூட்டரின் உதவியோடு இப் படங்கள் அலசி ஆராயப்பட்டு இயற்கை வளங்களைச் சிறப்பாக நிர்வகிக்க வழிவகை செய்யப்படுகிறது.

முக்கியமாக, இதுவரை எந்த நாடு ஏவிய செயற்கைக்கோளிலும், ஐஆர்எஸ்ஸின் பான் காமிரா அளவு துல்லியமாகப் படம் எடுக்க வசதி இல்லை. ஒருமுறை படம்பிடித்த அதே நிலப்பரப்பை, ஐந்து நாள் கழித்துத் திரும்பவும் படம் பிடிக்கும் விதத்தில் செயற்கைக் கோள் மற்றும் காமிராவின் இயக்கம் அமைந்துள்ளதால், இடைப்பட்ட நாட்களில் ஏற்பட்ட மாற்றங்களை விரிவாகக் கணக்கிட்டு பயிர் விளைச்சல், வறட்சி தொடர்பான கணிப்புக்களைச் சரிவரச் செய்யலாம்.

ஐஆர்எஸ்ஸுக்கு இந்தப் பெருமை என்றால், இன்சாட்-இரண்டு சியும் அதற்கு முன்னால் ஏவி விடப்பட்ட இன்சாட்-இரண்டு பியும், வானில் 'பக்கத்தில் பக்கத்தில் நிற்குமாறு' (CO-LOCATE) செய்யப்படுள்ளதால், இரண்டும் இணைந்து ஒரே அமைப்பாக இயங்குவது இன்னொரு புதுமை.

சுஷ்மிதா சென்னுக்கும் ஐஸ்வர்யாராய்க்கும் அகில உலக அழகிப் பதவி ஒரு வருஷம் தான். இன்சாட்டும் ஐஆர்எஸ்ஸும் குறைந்தது பத்து வருஷமாவது தாக்குப் பிடிக்கும் வான வனிதைகள்.

வாடிய பயிர்களைத் திரும்பத் திரும்பப் படம் எடுத்து ஐஆர்எஸ் ஒன்று சி அனுப்ப, அதே இடம் பசுமையும் செழிப்புமாக இருப்பதால் தண்ணீர் தர முடியாது என்று அண்டை மாநிலம் விட்ட அறிக்கையை உடனடித் தகவலாக இன்சாட் இரண்டு சி அனுப்ப, எல்லா எல்லைகளையும் கடந்து உலகம் ஒன்றுபட வேண்டிய அடுத்த நூற்றாண்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

- இரா. முருகன்



BANDIT QUEEN

ஒரு மிகச் சாதாரண 'மசாலா'வாக ஆகியிருக்கக்கூடிய நிஜக் கதையை உளவியல் ரீதியில் அணுகி, மிக உயர்ந்த கலைப் படைப்பாக்கியிருக்கிறார் சேகர் கபூர்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு என ஃபார்முலா சினிமாவின் உள்ளடக்கம் இருந்தாலும் துளியும் ஆபாசமாக்கி விடாமல், அருவருப்பு ஏற்படுத்தாமல் மிக கண்ணியமாகக் காட்டப்படும் காட்சிகள். முரட்டுத்தனத்தைக் கூட மென்மையாகச் சொல்கிற முயற்சி... என்று புதிதான பல விசேஷங்கள் இப்படத்தில்.

மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய, ஒரு முழு நிர்வாணக் காட்சியைக் கூட விரச வட்டத்தின் உள்ளே நுழையாமல் எடுத்திருக்கிற நேர்த்தி பிரமிப்பு தருகிறது.

பூலானாக நடித்திருக்கும் சீமா பிஸ்வாஸ் பற்றிச் சொல்ல வேண்டும். உக்கிரமும் சோகமும் வெறியும் விரக்தியுமாக... கடவுளே, முகம்தானா? பின்னி எடுத்திருக்கிறார்.

ஜாலங்களற்ற அசோக்மேத்தாவின் ஒளிப்பதிவு, நெஞ்சைப் பிழியும் பின்னணி இசை, மிகத் துல்லிய எடிட்டிங் என்று படத்துக்கு நிறைய சிறப்புகள்.

ஆனால் நெருடுகிற விஷயம் ஒன்று இருக்கிறது :

இது ஒரு கற்பனைக் கதையாக இருக்கிற பட்சத்தில் பிரச்னை இல்லை. நிஜ பூலான் இன்று சிறையிலிருந்து வெளியே வந்து விட்டார். அவரது 'குற்றவாளி' முகத்தை மறைத்து, அந்நிலைக்கு அவர் தள்ளப்பட்ட காரணத்தை மட்டுமே (மிகைப்படுத்தவில்லை என்றாலும்) படம் முன்னிலைப்படுத்தி, அலசி இருக்கிறது.

கலா ரீதியில் படம் அபார வெற்றி பெற்றிருப்பினும் சமூக நோக்கில் நெருடல்கள் நிறைய...

கலெக்ஷனையும் அவார்டுகளையும் ஒருசேர சம்பாதிக்கப் போகிற படம்.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.


உங்கள் கதவுகளை தேர்ந்தெடுக்க சரியான வழி

MOISTURE REDUCTION
(New Wood contains 80% - Desirable Level 14% to 18%)

CHEMICAL PROTECTION
(By Pressure Impregnation)

மாயூரம் டிம்பர்

அதை சிறப்பான முறையில் செய்து கொடுக்கிறது



சிறப்பம்சங்கள் :

- உன்னதமான மெஷின் தயாரிப்பு
- விற்பனைக்கு பின் தரமான சேவை
- 50 வருடங்களுக்கும் மேலான அனுபவம்.

ஆர்டரின் பேரில் கதவுகள் செய்ய அணுகவும் :

மாயூரம் டிம்பர் டிரேடிங் கம்பெனி

83, ஜி.எஸ்.டி. ரோடு, தாம்பரம், சென்னை - 600 045.
போன் : 2368297 / 2368295 / 4345207.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

சர்வோ® ஸ்ரீவனை அதிகரிக்கும்.

மெக்கானிக்குகள்



கூறுகிறார்கள்.

சர்வோ®: தொல்லையில்லாத எஞ்சின் ஆயில் அளிப்போர் - இந்தியன் ஆயில்



சர்வோ®: இந்தியாவில் மிக அதிக அளவில் விற்பனையாகும் எஞ்சின் ஆயில்.

IOC-284/94 TAM B